**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு: 13-8-2012

Issued: 13-8-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, மார்ச் 28, 2012—தொகுதி 20—எண் 2**

**Wednesday, the 28th March, 2012—Volume 20—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ.

**[Price Rs. 3.00**

**28–3–2012**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 95-96 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 96-129 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) நிதிநிலை அறிக்கையை விமர்சித்து தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி | 129-136 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 129-131 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 131-136 |
| (ஆ) காவிரி நீர் தமிழகத்திற்கு வழங்கப்பட மாட்டாது என்று கர்நாடக சட்டமன்றத்தில் தெரிவித்தது | 136-137 |
| திரு. எம். ஆறுமுகம் | 136 |
| **4. அறிவிப்பு—** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 137 |
| **5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—** | 138-231 |
| திரு. எஸ்.ஆர். பார்த்திபன் | 138-162 |
| *மாண்புமிகு திரு. செ. தாமோதரன் | 138 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 140-141<br>144-145, 178 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 142-143,155-157,<br>175,180-183,<br>187-188,205,228 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—** தொடர்ச்சி | |
| திரு. ச. இராமச்சந்திரன் | 142-143 161,164-165 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 144,161, 176,223-224 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 145-150,175 179-180,185 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 149 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 151,163 201-203 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 152-154,188-189 |
| திரு. வி.சி. சந்திரகுமார் | 156 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 158-160 175-176,189-190 |
| செல்வி கே. பாலபாரதி | 160 |
| திரு. எம். ஆறுமுகம் | 160 |
| *திரு. கு.ப. கிருஷ்ணன் | 161-164 |
| *திரு. எஸ்.எஸ். சிவசங்கர் | 174-191 |
| *திரு. மு.க. ஸ்டாலின் | 184-186 |
| திரு. ஆர். சாமி | 191-201 |
| திரு. இரா. அண்ணாதுரை | 202-209 |
| திரு. பி.எல். சுந்தரம் | 209-213 |
| திரு. சி. கிருஷ்ணன் | 213-219 |
| *திருமதி எஸ். விஜயதரணி | 219-231 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 222 |
| மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி | 224,226 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 227 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 232-234 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 15

## 2012 மார்ச் 28, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

## 1. இரங்கற்குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் ச. ஆரோக்கியசாமி அவர்கள் 26–2–2012 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி அவர்கள் 1991 முதல் 1996 வரை திருச்சிராப்பள்ளி–1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2012 மார்ச் 28

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, திரு. தா. மலரவன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**1—**

### வட்டாட்சியர் அலுவலகங்கள்

*4712—**திரு. தா. மலரவன்:—**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் தற்போது கோவை தெற்கு வட்டம் மற்றும் கோவை வடக்கு வட்டம் என்று இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. எனவே, கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2012 மார்ச் 28]

ஏழைகளின் இதய தெய்வம், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளரும், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சருமான மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். கோயம்புத்தூரிலே கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அங்கே இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால், கோயம்புத்தூரிலே 25 இலட்சம் மக்கள் தொகை கூடியிருக்கிறது. ஆகவே, அந்த மக்கள் தொகைக்கேற்றவாறு இன்னும் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் அங்கே அமைக்க வேண்டும். கிழக்கு வட்டம், மேற்கு வட்டம் என்று இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்களை அமைத்தால்தான் அந்த நகருக்குச் சிறப்பாக இருக்கும். நீங்களே வேண்டுமானால் அமைச்சர் யாரையாவது அனுப்பிப் பார்த்தால் தெரியும். அங்கே காலையிலே 10 மணிக்கு வந்தால் இரவு 7 மணி வரையில் மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மக்கள் கூட்டத்தைச் சரிசெய்வதற்கும், அங்கே மக்களுக்குச் சேவை செய்வதற்கும் இன்னும் 2 வட்டாட்சியர் அலுவலகங்கள் தேவை என்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற பட்ஜெட்டும் அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மக்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, 2 வட்டாட்சியர் அலுவலகங்களைக் கொடுக்க வேண்டும் எனறு நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால்,

"கொடுத்ததெல்லாம் கொடுத்தான்;
அவன் யாருக்காகக் கொடுத்தான்; . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:**

ஒருத்தருக்கா கொடுத்தான்;
இல்லை ஊருக்காகக் கொடுத்தான்"

என்று சொல்லி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலுக்கு ஏற்ப நீங்கள் அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, 2 வட்டாட்சியர் அலுவலகங்களை அங்கே இருக்கக்கூடிய மக்கள்தொகைக்கேற்ப அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 220 வட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலே கொடுக்கக்கூடிய மனித நேயம் மிக்க தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) வட்டாட்சியர் அலுவலகங்கள் வழங்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. மிக விரைவிலேயே ஒரு குழுவை அமைக்க பரிசீலனையில் உள்ளது. அந்தக் குழுவினுடைய ஆய்வுகளைப் பெற்றதற்குப் பிறகு, அதைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை தாலுகாவில் மிக நீண்டகாலமாக பழுதடைந்த ஒரு கட்டடத்திலே வட்டாட்சியர் அலுவலகம் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர முடியுமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வட்டாட்சியர் அலுவலகங்கள் பழைய கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்ப, மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைப் புதியதாகக் கட்டுவதற்கு அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை நன்றியோடு வணங்குகிறேன். திருச்சி மாநகராட்சி வார்டு எண்கள் 38, 39, 40 மற்றும் 53 ஆகிய பகுதிகள் திருச்சி தாலுகாவிற்கு மாற்றப்பட வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கையாகும். இந்த வார்டுகள் தற்போது ஸ்ரீரங்கம் தாலுகாவில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, திருச்சி மாவட்ட நிருவாகம் அரசுக்குப் பரிந்துரை செய்து அறிக்கை அனுப்பியுள்ளது. எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், வார்டு எண்கள் 38, 39, 40 மற்றும் 53 ஆகிய பகுதிகளை ஸ்ரீரங்கம் தாலுகாவிலிருந்து பிரித்து திருச்சி தாலுகாவோடு இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்று பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற இடர்ப்பாடுகளை மனதிலே கொண்டு, ஒரு குழுவை அமைத்து அதைப் பரிசீலனை செய்து, எந்தெந்த வட்டங்களிலே அதைச் செயல்படுத்தலாம் என்பதற்கு துறையின் மூலமாக ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மனதிலே கொண்டு உடனடியாக அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி கல்குளம் வட்டத்தில் 25 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. மக்கள்தொகையும் அதிகமாக உள்ளது. ஆகவே, பொதுமக்களின் வசதிக்காக, திருவட்டாறு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இருந்துவரும் மேக்கோடு, வீயன்னூர், அருவிக்கரை, ஆற்றூர், திருவட்டாறு, பொன்மனை, வேளிமலை, சுருளோடு, தும்பகோடு, திற்பரப்பு ஆகிய 10 வருவாய்க் கிராமங்களுடன் இவற்றைத் தொட்டு இருக்கும் விளவங்கோடு வட்டத்தைச் சேர்ந்த களியல், அருமனை, மாங்கோடு, வெள்ளாங்கோடு ஆகிய வருவாய்க் கிராமங்களையும் இணைத்து, புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை திருவட்டாறு அல்லது செருப்பாலூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமைப்பதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மீதம் உள்ள ஊர்களை விட்டுவிட்டீர்களே! மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாட்சியர் அலுவலகம் உருவாக வேண்டுமென்று சொன்னால், ஒரு வட்டத்தினுடைய பரப்பளவு 250 சதுர கிலோ மீட்டர்; அதிக அளவு 2,000 சதுர கிலோ மீட்டராக இருக்கவேண்டும்; குறைந்தபட்சம் ஒரு இலட்சம் முதல் ஐந்தரை இலட்சம் ஜனத்தொகை கொண்டதாக இருக்கவேண்டும். ஒரு வட்டாரம் குறைந்தபட்சம் 30 கிராமங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது 25 கிராமங்கள் என்ற காரணங்களின் அடிப்படையில் அதை உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கேள்வி இல்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த norms–க்குள் அவர் கோரிக்கை வரவில்லை



2012 மார்ச் 28]

என்பதால் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கேள்வி கேட்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகள் அனைத்தும் மடத்துக்குளம் வட்டத்திலும், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பான்மையான பகுதிகள் அனைத்தும் உடுமலை வட்டத்திலும் சென்ற 2010 ஆம் ஆண்டு தவறுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு உடனடியாக இதைப் பரிசீலனை செய்து, உடுமலைக்கு அருகில் உள்ள, உடுமலை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பகுதிகளை உடுமலை வட்டத்திலும், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளை மடத்துக்குளம் வட்டத்திலும் சேர்ப்பதற்கு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் அனைத்தும் புதிதாகச் சீரமைக்கப்பட்டுத் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. இப்போது வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஓர் ஆய்வு செய்யப்பட வேண்டியிருக்கிறது. எந்த வட்டங்களுடன் நாம் இணைக்க வேண்டுமானாலும், அந்தக் கிராமங்களை இணைக்கின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய நிலைகளை மனதிலே கொண்டு, அவர்களுக்கு அதை விளம்பரம் செய்து, அங்கு குறைபாடுகள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை ஆய்ந்துதான் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கவனத்திலே ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கும்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Fort தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம்

[2012 மார்ச் 28

வேப்பேரியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனத்தொகையைப் பொறுத்தவரை, 30 இலட்சத்தைத் தாண்டும் சூழ்நிலையுள்ளது. இங்கே பரப்பளவு என்று பார்க்கும்போது, ஜம்புலி வில்லேஜ் 41 ஹெக்டேரும், சேலைவாயல் வில்லேஜ் 161 ஹெக்டேரும், கொடுங்கையூர் வில்லேஜ் 467 ஹெக்டேரும், எருக்கஞ்சேரி வில்லேஜ் 109 ஹெக்டேரும், தண்டையார்பேட்டை வில்லேஜ் 1,487 ஹெக்டேரும், வ.உ.சி. நகர் 777 ஹெக்டேரும், வேப்பேரி 557 ஹெக்டேரும் பரப்பளவு கொண்டதாக உள்ளன. இது 1987–லே ஆரம்பிக்கப்பட்ட அலுவலகம். மக்கள் வெகுதூரம் பயணித்து இங்கே வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால், தயவுசெய்து இந்தத் தாலுகா அலுவலகத்தை, தங்கசாலைப் பகுதியில்அமைத்தால், அங்கே இருக்கும் மக்கள் பயனடைவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல, அங்கேயிருக்கின்ற வாகனங்களும் பழுதடைந்துள்ள நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பிற மாவட்டங்களில் அனைத்து வட்டாட்சியர்களுக்கும் புதிய வாகனங்களைக் கொடுத்திருக்கிறது. அதேபோல் இங்கேயிருக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் தாசில்தாருக்கும், (DRS) ரெகுலர் தாசில்தாருக்கும் ஜீப் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெற்றிவேல், மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நில நிருவாகம் மற்றும் நில ஆணையர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, மின்ட் என்னுடைய தொகுதியில் வருகிறது, அதனால் அதைப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.



2012 மார்ச் 28]

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எங்களது வேளச்சேரி தொகுதி, புதியதாக உருவாக்கப்பட்ட தொகுதியாகும். வேளச்சேரி–தரமணிப் பகுதிகள் கிண்டி–மாம்பலம் தாலுகா அலுவலகத்திலும், அடையார்–திருவான்மியூர் பகுதிகள் மயிலாப்பூர் தாலுகா அலுவலகத்திலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதைத் தனியாகப் பிரித்து, வேளச்சேரிக்கு ஒரு தனி அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதற்கு முன்னாலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளச்சி ஜெயராமன் குறிப்பிடுகிறபோது அதைக் குறிப்பிட்டேன். சட்டமன்றத் தொகுதிகள், நாடாளுமன்றத் தொகுதிகள் எல்லாம் வரையறுக்கப்பட்டு, இன்றைக்குச் செயலாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், வட்டாட்சியர் அலுவலகங்கள் ஆங்காங்கே அந்தப் பழைய நிலையிலே இருக்கின்றன என்பதை நாங்கள் அறிவோம். ஆகவே, அதைப் பற்றி அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்கள், மக்கள் தொகை அடிப்படையிலே அமைய வேண்டுமென்று குறிப்பிட்டார். அதற்கு ஒரு குழு அமைக்க பரிசீலனையில் உள்ளது. மக்கள் தொகைக்கேற்ப வட்டாட்சியர் அலுவலகங்கள் அமைப்பதற்கான ஆய்வு நடைபெறுகிறபொழுது, அங்கு இருக்கின்ற இடர்ப்பாடுகளை மனதிலே கொண்டு, மனித நேயத்தோடு, தொலைநோக்குச் சிந்தனையோடு, அதை எப்படிப் பிரிக்க வேண்டுமென்பதை ஆய்வு செய்யவேண்டுமென்று ஒரு குழுவை அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது. அந்தக் குழு ஆய்வு செய்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

[2012 மார்ச் 28

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் விளவங்கோடு–கல்குளம் தாலுகா என ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அங்கே இருக்கிறது. அந்த அலுவலகத்தில் அடிக்கடி நில ஆர்ஜித வழக்குகள் தொடரப்பட்டு, அதன் காரணமாக ஏற்படக்கூடிய அந்த auction–இல் அந்தத் தடைகள், உத்தரவுகள் வாயிலாக அந்த auction–க்கு பயந்து, மேஜைகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கேள்விக்கு வருகிறேன். அந்த auction–க்கு பயந்து, மேஜைகளையெல்லாம் எடுத்து வைத்துவிட்டு, அந்த அலுவலகம் பாய்களில் இயங்க வேண்டிய சூழ்நிலை அடிக்கடி நடைபெறுகிறது. இதற்கு நிரந்தரமாகத் தீர்வு கண்டால்தான், வட்டாட்சியர் அலுவலகம் பிரச்சினையில்லாமல் இயங்கவும், அங்குள்ள பணியாளர்கள் மற்றும் அலுவலர்களும் தொடர்ந்து நன்றாகச் செயலாற்றவும் முடியும். அந்த வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகம் என்றைக்குமே auction–க்கு வந்தது கிடையாது. இதுவரைக்கும் அந்தத் தகவல் வந்ததில்லை. ஆனால், அதற்கு முன்னரே உடனுக்குடன் நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அதேபோன்று குறைபாடுகள் இதுவரையில் எங்கள் கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, பாயிலே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையை இங்கே குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான், நேற்றைய முன்தினம் இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே, வட்டாட்சியர் அலுவலகங்களிலே தேவையான வசதிகளை மேம்படுத்த, அதாவது, அங்கேயிருக்கின்ற furniture போன்றவற்றைப் பராமரித்தல் போன்ற பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அங்கே வருகின்றவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும், அங்கு வருகின்றவர்களுக்குக் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி



2012 மார்ச் 28]

போன்றவற்றைச் செய்யவும், அங்கே தங்கி அவர்கள் மனுக்களைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள, மாவட்டந்தோறும் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் தேவையான உதவிகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிடுவதைப்போல, இதுவரை எந்த நிகழ்வும் எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. அதுபோன்ற நிலைமைகள் வருவாய்த் துறையில் இல்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள். கேள்வியை சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் முத்துக்குமரன் அவர்கள் கேட்டதுபோல ஒரு வரியில் கேட்டால், பல உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். கேள்வியையே ஒரு essay போன்று கேட்டால், மற்ற உறுப்பினர்களுடைய வாய்ப்பு பறிபோகின்ற நிலைமை வரும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கவனத்தில் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு வட்டம், 67 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட பெரிய வட்டமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதில் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டு 31 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன.

[2012 மார்ச் 28

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, 250 சதுர கிலோ மீட்டருக்கு மேல் பரப்பளவு கொண்டதாக காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரிமங்கலம் வட்டம் எனத் தனியாகப் பிரித்துத் தர ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் இதுகுறித்து அவர் ஒரு கடிதத்தை என்னிடம் தந்தார். அதைப்பற்றி அரசு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு தாலுகா என்பது, 4 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. மக்கள் தொகை கிட்டத்தட்ட 7 இலட்சத்தைத் தாண்டியிருக்கின்ற காரணத்தால், திருப்பரங்குன்றத்தை மையமாகக் கொண்டு புதிய தாலுகாவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் உருவாக்கித் தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயமிக்க தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற இடர்ப்பாடுகளை மனதிலே கொண்டுதான், மக்களுக்குச் சேவைகளை இந்த வருவாய்த் துறை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்ற முறையில், அதை ஆய்வு செய்து மக்கள் தொகைக்கு ஏற்ப வட்டாட்சியர் அலுவலகங்களை அமைப்பதற்கு உரிய பரிந்துரையை அனுப்ப வேண்டுமென்று எங்கள் துறையைப் பணித்திருக்கிறார்கள். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆய்வு முடிந்ததற்குப் பிறகு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

### மின்மாற்றிகள்

***5072—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, குள்ளம்பட்டி ஊராட்சி, கே. புதூர் கிராமத்தில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, குள்ளம்பட்டி ஊராட்சி, கே.புதூர் கிராமத்தில் 250 கே.வி.ஏ./11 கி.வோ. மின்மாற்றி அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் அப்பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட கன்னங்குடி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே சென்ற முறை கேட்டிருந்தேன். தேவகோட்டையிலே இப்போது அந்தத் துணை மின் நிலையம் இருக்கின்றது. அங்கிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய கன்னங்குடி ஒன்றியத்திற்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லும்போது, மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, அங்கு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மின்மாற்றி சம்பந்தப்பட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தெந்த இடத்திலே எல்லாம் மின் தேவை அதிகரித்திருக்கிறதோ, அதையெல்லாம் கணக்கிட்டு, அந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை ஆய்வு செய்து தேவைக்கேற்ப, நிதிநிலைமைக்கு ஏற்ப, அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடியில் ஒரு மின்மாற்றி நிர்மாணிக்கப்பட்டு, joint kit என்கிற ஒரு சிறிய பொருள் இல்லாத காரணத்தால், மாதக் கணக்கில் அது செயல்படாமல் இருக்கின்றது. டீச்சர்ஸ் காலனியிலும் அதேபோன்ற நிலை இருக்கிறது. பரவலாக மின் மாற்றிகள் நிர்மாணிக்கப்பட்ட பிறகும் சின்ன சின்ன பொருட்கள் இல்லாததால் அவை செயல்படாமல் இருக்கிற அந்த நிலையைப் போக்க, நிர்மாணிக்கப்பட்ட மின் மாற்றிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, முதலில் அவற்றை முற்றாக முடிக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், குறிப்பிட்ட நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதுகுறித்த ஆய்வுக் கூட்டங்களை நடத்துகின்றபோது



2012 மார்ச் 28]

சிறு சிறு தளவாடங்கள் இல்லாத குறையினால் காலதாமதமாவதைத் தவிர்த்திட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இப்பொழுது தமிழ்நாடு மின் வாரியம் விரைவாக, தேவையான சிறு, சிறு தளவாடப் பொருள்களைக் கொள்முதல் செய்வதில் விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவிலே அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள். கேள்வி, டிரான்ஸ்ஃபார்மர் பற்றியது.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும் மின்சாரத் துறைக்கு முக்கியமான கேள்வி. தேனி மாவட்டத்தின் நீண்டநாள் கோரிக்கை, இலவச மின் இணைப்பு. அங்கு நிறைய நீர் ஆதாரம் இருந்தும்கூட, மற்ற மாவட்டத்திற்கு இணையாகத்தான் தேனி மாவட்டத்திற்கும் கொடுக்கிறார்கள். குறிப்பாக, முல்லைப் பெரியாறு, வைகை ஆறு, வரட்டாறு, சுருளியாறு, கொட்டக்குடி ஆறு போன்ற நதிகள் நிறைய இருந்தும்கூட, மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும் இலவச மின் இணைப்பு போன்றே தேனி மாவட்டத்திற்கும் கொடுக்கிறார்கள். விவசாயிகள் நிறைய பேர் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள். தேனி மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டில் கொஞ்சம் கூடுதலாக இலவச மின் இணைப்பு கொடுத்துதவ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது பதிவு மூப்பு அடிப்படையிலே வழங்கப்பட்டு வருகிறது. அதிலே யாருக்காவது முன்னுரிமை வழங்குவதற்கு நமது விதிமுறைகளிலே இடம் இல்லை. ஆகவே, வரிசைப்படி மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கு என்று அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா

[2012 மார்ச் 28

அவர்களைப் பொறுத்த அளவிலே தமிழகத்திலுள்ள அனைத்தும், அம்மா அவர்களுக்குச் சொந்த மாவட்டங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லா இடங்களிலும் தேவைக்கு ஏற்ப, நிதிநிலைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

**திரு. ப. பார்த்தசாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், சூளைபள்ளம் என்ற பகுதியில் பல தெருக்களில் மின்கம்பங்கள் தலைக்கு மேலே, உயிருக்கு ஆபத்தான நிலையிலே இருக்கின்றன. அதை அகற்றி, பூமிக்கு அடியில் பதித்துத் தருமாறு சென்ற கூட்டத் தொடரிலேயே நான் கோரிக்கை வைத்திருந்தேன். தயவுகூர்ந்து, இந்த முறையாவது இதற்கு ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராமல் ஏற்பட்ட 'தானே' புயலின் காரணமாக, இங்கே பல இடங்களில் இருக்கின்ற மின்கம்பங்களும், மின் மாற்றிகளும் உடனடியாக, அவசரத் தேவைக்காக அங்கே அனுப்பி வைக்கப்பட்டன. மின்கம்பங்கள் தயாரிக்கப்படுகின்ற பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தப் பணிகள் இறுதி செய்யப்பட்டு, தேவையான இடங்கள் அனைத்திற்கும் மின்கம்பங்கள் வழங்கப்படும். அதன்பிறகு, இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு பதிவு செய்து காத்திருப்புப் பட்டியலில் இருக்கிறார்கள். மின் இணைப்பு பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர்*



2012 மார்ச் 28]

*அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், திண்டுக்கல் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட விவசாயிக்கு நான் follow–up செய்கிறபோது, பதிவு மூப்பு வரிசை என்பது நகர்வதாகவே இல்லை. அவர்கள் பணம் கட்டி, பல ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து விசாரித்து, உரிய முறையிலே பதிவு மூப்பு அடிப்படையிலே அவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மின் இணைப்பைப் பொறுத்த அளவிலே பதிவு மூப்பு அடிப்படையில் வழங்குவதில் எந்தத் தவறும் இல்லாமல் பதிவு மூப்பு அடிப்படையில் சரியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஏதாவது சில இடங்களிலே பதிவு மூப்பின் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுத் தெரிவித்தால், அந்த அதிகாரிகள்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் காலதாமதமாவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மின்சார உற்பத்தித் தேவைக்கேற்பவும், தமிழ்நாட்டு மின்சார வாரியத்தினுடைய நிதி நிலைமைக்கேற்பவும், அதிலே காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**3—**

**சாலைகள்**

***8706—திரு. அர. சக்கரபாணி:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 மார்ச் 28

நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கிடையே ஊராட்சி ஒன்றியச் சாலைகள் வருவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியச் சாலைகளும், நெடுஞ்சாலைத் துறை சாலைகளும், இடையிடையே வரும் தருணத்தில், தேவை மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு ஊராட்சி ஒன்றியச் சாலைகளை விதிமுறைகளின்படி நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு கிராமங்களை இணைக்கின்ற சாலைகள் நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்ட இதர சாலைகளாகவும், அதேபோல் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகவும் உள்ளன. அந்தச் சாலைகள் பழுதடைந்து விட்டால், அந்தச் சாலைகளைச் சீர் செய்கின்ற சமயத்தில் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சீர் செய்யலாம் என்ற விதி உள்ள காரணத்தினால் அந்தச் சாலைகள் சீர் செய்யப்படுகின்றன. ஆனால், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அந்த விதியில்லை. ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதியில்லாத காரணத்தினால், அந்தச் சாலைகளைச் சீர் செய்ய முடியவில்லை. அதனால் அந்த வழியாகச் செல்கின்ற பொதுமக்களும், வாகனங்களில் செல்கின்றவர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இந்த நிலைமையைப் போக்குவதற்கு இரண்டு சாலைகளும் ஒரே துறையின்கீழ் வருவதற்கு, தமிழகம் முழுவதும், நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கிடையே வருகின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டு, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறைக்குச் சொந்தமான ஒரு சொத்தை இன்னொரு துறைக்குக் கொடுப்பீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதை எப்படிக் கொடுக்க முடியும்? ஏற்கெனவே, மூலக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை சாலையின் இடையிடையே வருகின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற முடியுமா என்றுதான் கேட்டிருக்கிறார். ஆனால், இப்போது அவர் கேட்ட கேள்வி, நெடுஞ்சாலைத் துறை சாலைகளின் இடையே வரும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பழுதுபடுகின்ற நேரங்களில், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து, அந்தச் சாலைகளைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்கிறார். நெடுஞ்சாலைத் துறைக்கு இடைப்பட்டு வருகின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பழுதுபடுகின்றபட்சத்தில், அதற்கு முறையாக உள்ளாட்சி அமைப்பினுடைய தீர்மானத்தை நிறைவேற்றச் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் வழங்கி, அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்மொழிகின்றபட்சத்தில், அது அரசுக்கு வருகின்ற நேரத்தில், அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில், அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட சாலைகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மேலும் இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். இந்தக் கோரிக்கை என்பது மிக முக்கியமான கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பினால், அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியுள்ளார். அதேபோன்று இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற இரண்டு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகளை இணைக்கின்ற ஊராட்சி சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அவை போக்குவரத்து அடர்த்தியின் காரணமாக அடிக்கடி பழுதடைந்து

வருகின்றன. அந்தச் சாலைகளைச் சீர் செய்வதற்குப் போதுமான நிதி, ஊராட்சி ஒன்றியங்களில் இல்லை. எனவே, அப்படிப்பட்ட சாலைகளையும், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தீர்மானம் நிறைவேற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக அரசுக்கு அனுப்பினால் அப்படிப்பட்ட சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிவதுடன், மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையில் நீங்கள் பத்து கேள்விகள் கேட்கிறீர்கள். அவ்வாறு கேட்கக் கூடாது. மூலக் கேள்விக்குத் தொடர்பான கேள்வியை மட்டும்தான் கேட்க வேண்டுமே தவிர, ஒரே கேள்வியில் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத பத்து கேள்விகளை எப்படிக் கேட்க முடியும்? மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் இதற்குப் பெருமுயற்சி செய்து தோல்வி அடைந்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலாவது இது நடக்குமா (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான் கேட்கிறார். நிச்சயம் நடக்கும். எப்படி நடக்கும் என்று சொன்னால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்துச் சாலைகளையுமே நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கு இணையாக மேம்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 31,804 கிலோ மீட்டர் அளவுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள் கணக்கிடப்பட்டு, அவற்றை மேம்படுத்துவதற்கு நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி, ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ரூ.500 முதல் ரூ.600 கோடி ரூபாய் வரை நிதி ஒதுக்கீட்டில் அனைத்துச் சாலைகளும் நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்குச் சமமான நிலையில் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

### கல்விக் கட்டணம்

***3108—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவருக்கான கல்விக் கட்டணச் சலுகையை அரசே நேரடியாகச் செலுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகையை அரசே நேரடியாகச் செலுத்தும்பொருட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கட்டணச் சலுகை என்பதை அரசு நிர்ணயம் செய்திருக்கின்ற கட்டணத் தொகையிலே ஒரு குறிப்பிட்ட பகுதியை இப்போது கொடுக்கின்றோம்.

[2012 மார்ச் 28

முழுமையாக அந்த மாணவர்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கான அறிவிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகையாகும். அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறை, அதாவது சிங்கிள் விண்டோ சிஸ்டம் மூலமாகச் சேர்க்கப்பெறும் மாணவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லை என்று சொன்னால், அந்த மாணவர்கள், தொழில் கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காக சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமலும், அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசே ஏற்றுக்கொள்ளும் என ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்விக் கட்டணத்தோடு மட்டுமல்லாமல், முழுக் கட்டணத்தையும் கட்ட வேண்டும் என்கிறார். இந்த முதல் பட்டதாரிகளுக்குக் கற்பிக்கும் கட்டணம், அதாவது டியூஷன் ஃபீஸ் மட்டுமே அளிக்கப்படும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுப் பொறியியல் கல்லூரிக்கு என்று தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. அரசு உதவி பெறும் கல்லூரிக்கு என்று தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. சுய நிதிப் பொறியியல் கல்லூரிக்கு எனத் தனியாகக் கல்விக் கட்டணம் இருக்கிறது. ஆகவே, அரசுக் கல்லூரிகளுக்கு 2,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும், அரசு உதவிபெறும் பாடப் பிரிவுகளுக்காக வழங்கப்படுகிற 4,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும், சுய நிதி பொறியியல் கல்லூரி பாடப் பிரிவுகளுக்கான 20,000 ரூபாய் கல்விக் கட்டணத்தையும் அரசு செலுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.



2012 மார்ச் 28]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் செலுத்தப்படுகின்றபோது தனியார் கல்லூரிகளிலே அதற்கு மேலாக வசூலிக்கப்படுவதால், பல பேர், உண்மையாகவே ஏழைகளாக இருப்பவர்கள் எல்லாம், அந்த 20,000 ரூபாய் கொடுக்கப்படுவதை எடுத்துச் சென்று கொடுக்கிறபோது, அதுபோல் பல மடங்கு கட்ட வேண்டிய நிலை ஏற்படுவதாலேதான் நேரடியாக முழுக் கட்டணத்தையும் அரசே செலுத்துவதற்கு வாய்ப்பு இருந்தால், அந்த ஏழை மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, முதல் பட்டதாரி மாணவர்கள் கல்விக் கட்டணத்திற்கான சலுகை குறித்ததாகும். தனியார் கல்லூரிகளில் படிக்கின்றபோது அந்த மாணவர்களின் கல்விக் கட்டணத்தை எந்தவிதமான பாகுபாடின்றியும் அரசாங்கத்தால் ஒவ்வோர் ஆண்டும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அங்கே கல்விக் கட்டணம் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு, 2012–2013 ஆம் ஆண்டு, 477 கோடியே 97 இலட்சத்து, 12 ஆயிரம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தனியார் கல்லூரிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல குறைபாடு இருந்தால், அதற்கெனக் கட்டண நிர்ணயக் குழு, அதாவது மானிட்டரிங் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்த கமிட்டியின்மூலமாக அது பார்வையிடப்பட்டு, முறையான விதத்திலே, மாணவர்கள் பாதிக்காத வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வங்கிகளில் வழங்கக்கூடிய கல்விக் கடன் என்பது பல வங்கிகளில் பரவலாகத்

[2012 மார்ச் 28

திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. ஒருபுறத்திலே ஜாமீன் என்று சொல்லக்கூடிய செக்யூரிட்டி கேட்கப்படுகிறது. எஸ்.சி./எஸ்.டி. மாணவர்களும்கூட எம்.எட்., பி.எட்., டீச்சர் டிரெயினிங் படிக்கக்கூடிய நேரத்தில் கல்விக் கடன் பெற முடியாமல் பாதியிலே படிப்பை நிறுத்தக்கூடிய அவல நிலை நீடிக்கிறது. வங்கிகளைக் கேட்டால், வங்கி அதிகாரிகள் எங்களை யாருமே கட்டுப்படுத்த முடியாது என்கிறார்கள். அரசு ஒரு கட்டணத்தை நிர்ணயித்துள்ளது; வங்கிகள் ஒரு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. உதாரணமாக, பி.எட். படிப்பதற்கு 60,000 ரூபாய் என்று சொன்னால், 14,000 ரூபாய் மட்டுமே வங்கிகளிலே கல்விக் கடன் வழங்குவதாக இருக்கிறது. ஆக, இத்தகைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கான கல்விக் கடனை வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு ஒரு உரிய வழிகாட்டுதலைக் கொண்டு வர, நமது அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், கல்விக் கட்டணம் செலுத்துவதில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படவில்லை. இந்த வேளையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவருடைய பெயரையும் சொல்லாமல் ஒரு கருத்தைச் சொல்கிறார். இதுவரையில் எந்தவிதமான ஒரு குறைபாடும் மாணவர்களிடத்திலேயிருந்து அரசுக்கு வரவில்லை. இதனால் யாரேனும் தனி நபர் பாதிக்கப்பட்டதாக நீங்கள் குறிப்பிட்டால், இதுபற்றி அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 28]

**5—**

## உணவு விடுதிகள்

***8129—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகம் தொகுதி, அரசு மருத்துவமனையின் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை துறைமுகம் தொகுதி, பொது மருத்துவமனையின் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்திட, அந்த நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்கள்/அலுவலர்கள்/மருத்துவர்கள் ஆகியோர் குறைந்தது 25 நபர்கள் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் அட்டவணை 1—இல் வரையறுக்கப்பட்ட படிவம் 1—ஐப் பூர்த்தி செய்து, கூட்டுறவுச் சங்க உணவகம் அமைக்கப்படவுள்ள சரகத்தின் துணைப் பதிவாளருக்கு உத்தேசிக்கப்பட்ட கூட்டுறவு உணவகத்தின் துணை விதிகளின் நகல்களுடன் முறையாக விண்ணப்பித்தால், கூட்டுறவு உணவகம் அமைக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள்.

**திரு. பழ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறைமுகம் பகுதி பொது மருத்துவமனையில் கூட்டுறவுச் சங்கங்களால்தான் அந்த உணவு விடுதிகள் நடத்தப்பட்டு வந்தன. அதற்குப் பிறகு இன்றைக்கும் அந்தப் பண்டகசாலை மிக வெற்றிகரமாக மருத்துவர்கள் அடங்கிய கூட்டுறவுச் சங்கத்தால்தான் நடத்தப்பட்டு வருகிறது. அதற்குப் பின்பு ஏற்பட்ட அரசியல் குறுக்கீடுகள் காரணமாக 1981—இலிருந்து இன்றுவரை அது தனியார்கள் கையிலேயே இருந்துவருகிறது. National Association of Educated Self Employed Youths என்கிற பெயரில் 1981—இல் இந்த உரிமையைப் பெற்றவர்கள் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தும், எப்படியோ இவற்றைத் தொடர்ந்து

[2012 மார்ச் 28

*31 ஆண்டுகளாக இரண்டு தனி நபர்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். நியாயமாக மிகக் குறைந்த வாடகையில் அது விடப்படுகிறது. மிகக் குறைந்த மின்சாரக் கட்டணம், தண்ணீர் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வளவும் பொது மருத்துவமனையில் அவர்களுக்கு வழங்கப்படுவதன் நோக்கம் மிகக் குறைந்த விலையிலே அவர்கள் உணவுப் பண்டங்களை விற்க வேண்டும் என்பதுதான். அவர்கள் 33 ரூபாய்க்குச் சாப்பாட்டை விற்கிறார்கள். ஆனால் ஒரு முறை போட்டுவிட்டு, சாம்பாரை ஊற்றிவிட்டு நிமிர்ந்து பார்த்து மறுபடியும் போடுவார்களா என்று கேட்டால், இத்தோடு முடித்துக்கொள், எழுந்திரு, ஒரு கிண்ணம்தான், அந்த 33 ரூபாய்க்கு என்று சொல்கிறார்கள். இவ்வளவு சலுகைகளையும் அரசிடம் இருந்து பெற்றுக்கொண்டு, தனியார் லூட்டி அடிப்பதற்குக் காரணம், தனியார் எப்போதும் இலாப நோக்கம் கொண்டவர்கள். மருத்துவர்கள் என்னிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலாவது இதை மாற்றித் தரக் கூடாதா என்று கேட்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

**திரு. பழ. கருப்பையா:** *மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலாவது இவற்றை மாற்றித் தரக் கூடாதா என்று கேட்கிறார்கள். இது ஒன்றே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்குக் கிடைத்திருக்கின்ற பாராட்டு. மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் என்று தொடர்ந்து இவர்களே 33 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் இருந்து அந்த உணவுப் பண்டகச் சாலையினை மருத்துவர்கள் நடத்திக்கொள்வதுபோல, தனியாரிடமிருந்து இதை விடுவிக்க வேண்டும். அவர்கள் உணவகம் நடத்துவதற்கான அனுமதி இந்த ஆண்டோடு ஓரிரு மாதங்களில் முடிகிறது. தற்போது மருத்துவர்கள் கூட்டுறவு முறையில் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விரும்பியவாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலாவது இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்றுதான் இதைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சங்கம் நடத்த முன்வருமா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்த மருத்துவமனையில் உள்ள*



2012 மார்ச் 28]

*பணியாளர்கள் / அலுவலர்கள்/மருத்துவர்கள் யாரேனும் அந்த உணவு விடுதிகளைக் கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி நடத்துவதற்கு விண்ணப்பித்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைப் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**6—**

**புறவழிச் சாலை**

***1556—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சிகளில் வாகனப் போக்குவரத்து உயரும்போது, புறவழிச் சாலை அமைக்க, அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.*

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தப் புறவழிச் சாலை அமைக்கின்ற திட்டமானது ஆய்வு செய்யப்பட்டு*

[2012 மார்ச் 28

*நீண்ட காலமாக நிலுவையில் இருந்துவருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் இராஜபாளையம் மெயின் சாலையிலும், அந்த இரண்டு மெயின் சாலையிலும் நடைபெறுகின்ற விபத்துகளைத் தடுப்பதற்கும், அந்தப் பகுதியினுடைய நெரிசலைப் போக்குவதற்கும் இது ஒரு பிரதானமான திட்டம். அதை விரைந்து செயல்படுத்த இயலுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதி மாவட்ட இதர சாலையான ஸ்ரீவில்லிபுத்தூர்–மம்சாபுரம் சாலை 0/0 முதல் 0/2 கி.மீ. வரையில் கடைசிப் பகுதியில் உள்ளது. மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதியில் வாகனப் போக்குவரத்து குறைவாக உள்ளதால், அப்பகுதியில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் இருக்கையில் இல்லையென்பதால், உங்களுக்கு ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது துணைக் கேள்வி கேட்க உங்களுக்கு அனுமதியில்லை.*

*அடுத்து, வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**7—**

## கொள்முதல் விலை

***6971—திரு. கா.கோ. ரமேஷ்:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 மார்ச் 28]

*(அ) பால் கொள்முதல் விலையைத் தனியாருக்கு இணையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்கள் நலனையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களுக்குப் பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் நலனையும் கருத்தில்கொண்டு, அரசாணை (நிலை) எண் 139, நாள் 17–11–2011–ன்படி பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

**திரு. கா.கோ. ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிக் காற்றில் சிக்கிய அகல் விளக்காகவும், காலங்காலமாகக் கவலையின் பிடியினால் கண்ணீர் சிந்தி பரிதவித்த பால் உற்பத்தியாளர்களின் வயிற்றுக்குப் பால் சோறாகவும், தாகத்தில் தவித்த தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தாய் மடியாகவும் இருந்து, விலை உயர்வுக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து, புதிய விலையை நிர்ணயித்து ஆணை பிறப்பித்த ஏழைகளின் கனவுகளை நனவாக்க வந்த கருணையின் கருவூலமே, சர்வதேசத்தின் சமாதான குரலே, தன்னை உருக்கி பெருந்தவம் புரியும் பூபாலப் புனிதையே, வெற்றித் திருமகளே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழகப் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 மார்ச் 28

**8—**

**தூர்வாருதல்**

*6606—**திரு. தோ.பெ. பூனாட்சி:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் ஒன்றியம், சிறுபத்தூர் சிறிய நீர்த்தேக்கத்திற்கான வரத்து வாய்க்காலைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கேட்டால்தான் கொடுப்பார் கிருஷ்ண பரமாத்மா, கேட்காமலே கொடுக்கக்கூடியவர் அன்னை. அழிக்க நினைத்தவர்களை எதிர்க்கக்கூட திராணி அற்றவர்களாக ஆக்கிய இதய தெய்வம் அம்மா ஆட்சியில், உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் ஒன்றியம், ஓமந்தூர் பெரிய ஏரியில் இருந்து வரும் உபரி நீர் வாய்க்காலின் நீளம் 7,300 மீட்டர்; அகலம் 45 மீட்டர் ஆகும். பெருமங்களம் பெரிய ஏரியிலிருந்து வரும் உபரி நீர் வாய்க்காலின் நீளம் 6,000 மீட்டர்; அகலம் 50 மீட்டர் ஆகும். உப்பாறு நீர்த்தேக்கத்திற்கு வரும் இவ்விரு உபரி நீர் வாய்க்கால்களையும் ரூபாய் 160 இலட்சத்தில் தூர்வாரி செப்பனிடுவதற்கு விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி அவர்கள்.*

**திரு. தோ.பெ. பூனாட்சி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, மணச்சநல்லூர் ஒன்றியம், சிறுபத்தூர் கிராமத்தில் உள்ள உப்பாறு நீர்த்தேக்க வரத்துக் கால்வாயைத் தூர்வார வேண்டுமென்று எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்கள்*



2012 மார்ச் 28]

*பகுதியில் தூர்வாரி எங்களுக்கெல்லாம் அருமையாக நீர்வரத்து வழங்க அம்மா அவர்கள் ஆணையிடுவார்கள் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு கால்வாய்களெல்லாம் தூர்வாரப்படாமல் அலைக்கழிந்து இருக்கின்றன. அவை சரி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**9—**

**கால்நடை சுகாதார நிலையம்**

*6327—**திருமதி மனோரஞ்சிதம்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊத்தங்கரை தொகுதி, கே. எட்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அம்மா என்றாலே அன்புதான் என்று அனைவருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டு மக்களின்மீது மட்டுமல்ல;*

[2012 மார்ச் 28

காலநடைகளின்மீதும் அன்பு வைத்து இதுவரையில் இல்லாத அளவிற்கு எங்களுடைய காலநடை பராமரிப்புத் துறைக்கு 814.3 கோடி ரூபாய் ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய காலநடை பராமரிப்புத் துறையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, கே. எட்டிப்பட்டி கிராமத்தில் காலநடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். காலநடைக் கிளை நிலையம் புதிதாக அமைக்க, இரண்டு விதிமுறைகள் உள்ளன. மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்தக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது; 3,000 காலநடைகளுக்கு மேலாக இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. அந்த அடிப்படையிலே உறுப்பினருடைய தொகுதி கே. எட்டிப்பட்டி கிராமம் அந்த விதிகளுக்கு உட்பட்டிருப்பதால், கே. எட்டிப்பட்டி கிராமத்திற்குக் கிளை நிலையம் அமைக்க அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம்.

முற்பகல் 10–45

**திருமதி மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அனுதினமும் வணங்கும் என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி கே. எட்டிப்பட்டி கிராமத்தில் காலநடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகரத்தில் காலநடை மருத்துவக் கிளை நிலையம்



2012 மார்ச் 28]

செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்தக் கிளை நிலையம் பெரு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு காலநடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலநடைக் கிளை நிலையத்தை காலநடை மருந்தகமாக மாற்றுவதற்குச் சில விதிமுறைகள் உள்ளன. 5,000 காலநடைகள் அந்தக் கிளை நிலையத்திற்கு வரவேண்டும்; 5 கி.மீ. சுற்றளவுக்கு வேறு எந்தக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. அதற்கு உட்பட்டிருந்தால், நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆரணி தொகுதிக்குட்பட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இது, ஊத்தங்கரை தொகுதி கே. எட்டிப்பட்டியில் காலநடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்த கேள்வி. இதுகுறித்து நீங்கள் கேளுங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** தச்சூரிலே ஒரு காலநடைக் கிளை மருத்துவ நிலையம் அமைப்பதற்கு அரசிடம் பரிசீலனை ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

அடுத்து, வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 28

**10—**

## பேருந்து வசதி

*7692—**திரு. வீ.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து ஆந்தக்குடி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாகப்பட்டினம்–ஆந்தக்குடி தட நீளம் 30 கி.மீ. ஆகும். நாகப்பட்டினம்–கடலாடி வரையிலான 24 கி.மீ. தடப் பகுதியில், தினசரி இரண்டு பேருந்துகள்மூலம் 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம்–ஆந்தக்குடிக்குத் தட நீளம் 30 கி.மீ அளவிற்கு, 6 கி.மீ தட வழி நீட்டிப்பு செய்யப்பட வேண்டி உள்ளது. இந்தப் பகுதிகளுக்குப் பேருந்து வசதிகள் அளிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று நாகப்பட்டினம்–கடலாடி, திருமங்கலம், பிச்சைமங்களம், ஆந்தக்குடி வழித் தடத்தில் விரைவில் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்தக்குடி–நாகப்பட்டினத்திற்குப் பேருந்து இயக்குவதற்கு உறுதியளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து இரயில் போக்குவரத்து இல்லாத காரணத்தால், சென்னைக்கு வருகின்றவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே,*



2012 மார்ச் 28]

*அதிராம்பட்டினம், மதுக்கூர் வழியாகச் சென்னைக்குப் புதிய பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 473 புதிய பேருந்துகளை வாங்க உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுகின்ற பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற வழித் தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவைப் பெற்று பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. தகவல் கோரல்

***(அ) நிதிநிலை அறிக்கையை விமர்சித்து தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன். என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. ஆறுமுகம்,* please sit down. *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு ஒரு முக்கிய பிரச்சினை குறித்து மாண்புமிகு போற்றுதலுக்குரிய முதல்வர் புரட்சித் தலைவி*

*[முனைவர் செ.கு. தமிழரசன்]* [2012 மார்ச் 28

அம்மா அவர்களிடம் ஒரு விளக்கம் கோர விரும்புகிறேன். நேற்றைய முன்தினம் இந்த அவையிலே போற்றுதலுக்குரிய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மகத்தானதொரு மக்கள் நல நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்கொள்ள முடியாத எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் வெளியில் சென்று, "முதலமைச்சர் அவர்களுக்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்பிக்கையில்லை; ஆகவே, எங்களுக்கும் இதிலே நம்பிக்கை இல்லை; ஆகவேதான் நாங்கள் வெளியேறி இருக்கிறோம்" என்று இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள் துணை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–50

பொதுவாகவே, வெளியேயும், சட்டமன்றத்திற்குள்ளேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், இதர மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாலும், அரசாலும் அறிவிக்கப்படுகிற திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலே வடிவம் பெற்று, நிதியொதுக்கீடு பெறுவதுதான் நிதிநிலை அறிக்கை. ஏதோ வரி விதிப்பு அல்லது வரிக் குறைப்பு; இரகசியமே அம்பலப்படுத்தப்பட்டு விட்டதைப்போல, "விழாக்களிலே பேசியதெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே வந்திருக்கிறதே! ஆகவே, நிதிநிலை அறிக்கையிலே எங்களுக்கு நம்பிக்கையில்லை" என்று, அதாவது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று குறிப்பிடுவது, ஒரு நல்ல மரபாக இருக்க முடியாது. போற்றுதலுக்குரிய நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் பேரவையிலே அனுமதிக்கப்பட்ட திராவிட மொழிகள் அனைத்திலுமேயே–இங்கே முழுமையாக சட்டமன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டு (மேசையைத் தட்டும் ஒலி)-- பதில் சொல்லக்கூடியவர். காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் தெலுங்கிலே கேட்டால், தெலுங்கிலே பதில் சொல்லுவார்; ஆங்கில நியமன உறுப்பினர் ஆங்கிலத்திலே கேட்டால், ஆங்கிலத்திலே பதில் சொல்வார்; (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த முறை ஓர் உறுப்பினர் கன்னடத்திலே கேட்டபோது கன்னடத்திலே பதில் சொன்னார். மலையாளத்திலேகூட பேசக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய மொழியான



2012 மார்ச் 28] *[முனைவர் செ.கு. தமிழரசன்]*

இந்தியிலே பேசக்கூடியவர், (மேசையைத் தட்டும் ஒலி) உலக மொழியான ஆங்கிலத்தில் பேசக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பன்மொழி வித்தகராக, தலைசிறந்த பாராளுமன்ற ஜனநாயகவாதியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே இந்தியாவில் வேறெந்த முதலமைச்சருக்கும் இல்லாத அளவிற்கு முழுமையாக சட்டமன்ற நடவடிக்கைகளிலே பங்கேற்று (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அரசியல் சட்ட மரபுப்படி ஒரு முதலமைச்சர் அனைத்துத் துறைகளுக்கும் தலைமையேற்றவர்; அனைத்துத் துறைகளையும் நிருவகிப்பவர் என்றால்–அந்த அனைத்துத் துறைகளுக்கும் பதிலளிக்கிற ஆற்றல்மிக்க முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே பதில் சொல்லிக்கொண்டிருக்கிற தலைசிறந்த பாராளுமன்ற ஜனநாயகவாதி நம்முடைய அம்மா அவர்கள். எனவே, இந்தச் சட்டமன்றத்தின் மாண்பைக் களங்கப்படுத்துகிற வகையிலே சட்டமன்ற எதிர்க்கட்சி, தி.மு.க. கட்சி வெளியே சொல்லியிருக்கிற இந்தக் கருத்துக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 26–3–2012 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தாக்கல் செய்ய முற்பட்டபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில், தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், தனது கையில் வைத்திருந்த தாளிலிருந்து எதையோ படித்துவிட்டு வெளிநடப்புச் செய்தார். அவரைத் தொடர்ந்து தி.மு.க.வினர் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர், வெளியில் சென்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த திரு. ஸ்டாலின், "முன்பெல்லாம் 'பட்ஜெட்' என்றால் இரகசியம் என்பார்கள்; இப்போது 'பட்ஜெட்' வெளியிடுவதற்கு முன்பாகவே, அவை மரபுகளுக்கு மாறாக முதலமைச்சரே அரசின் திட்டங்களை எல்லாம் அவரே அறிவித்து விடுகின்ற கூத்து தமிழகத்திலே நடைபெறுகிறது. உதாரணமாக, மார்ச் 26 ஆம் தேதி 'பட்ஜெட்' என்று அறிவித்துவிட்டு, 24 ஆம் தேதிய

நாளிதழ்களிலேயே முதலமைச்சர் அறிவித்ததாகப் பல்வேறு திட்டங்கள் வெளியிடப்பட்டன. உதாரணமாக, காவல் துறையை அதிநவீனமாக்க 34 கோடி ரூபாய்க்கு முன்னோடித் திட்டங்கள்; போடியில் 94 கோடி ரூபாயில் புதிதாக அரசுப் பொறியியல் கல்லூரி என்பன போன்ற அறிவிப்புகளை முதலமைச்சரே செய்துவிட்ட பிறகு; அவருக்கே இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நம்பிக்கை இல்லை என்ற அளவில்; எங்களுக்கும் நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவிக்கும் வகையில் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறோம்" எனக் கூறியுள்ளார்.

சட்டப் பேரவையில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றி தி.மு.க.-விற்கே உரித்தான சில மரபுகள், கோட்பாடுகள் உண்டு. சட்டமன்றப் பேரவையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளான ஆளுநர் உரை; ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் அளிக்கின்ற பதிலுரை; நிதிநிலை அறிக்கை தாக்கல்; நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை; காவல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்கு முதலமைச்சரின் பதிலுரை போன்ற முக்கிய நிகழ்வுகளை எல்லாம் புறக்கணிப்பது என்பதுதான் தி.மு.க.-வினர் காலம் காலமாகக் கடைப்பிடிக்கும் மரபு. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.-வினருக்கே உரிய இந்த மரபை ஒட்டியே 26–3–2012 அன்று 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது தி.மு.க.-வினர் வெளிநடப்புச் செய்தனர்.

முற்பகல் 10–55

கடந்த ஜனவரி மாதம் தற்போதைய ஆளுநர் மேதகு டாக்டர் ரோசய்யா அவர்கள், தனது முதல் ஆளுநர் உரையைப் படிக்க ஆரம்பித்தபோதே, அரசு ஏற்கெனவே எடுத்த சில முடிவுகள் பற்றி விமர்சனம் செய்து தி.மு.க.–வினர் வெளிநடப்புச் செய்தனர். தற்போது அவ்வாறு எதுவும் விமர்சனம் செய்ய இயலாத சூழ்நிலையில் (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டவாறே; சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி "இடை" தேர்தலில், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியையும், திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியையும், "எடை" போட்டுப் பார்த்து, டெபாசிட் இழக்கும் அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி)



"எடை" போட்டுப் பார்த்து, டெபாசிட் இழக்கும் அளவுக்கு தி.மு.க.–விற்கு "விடை" கொடுத்துவிட்ட நிலையில்; (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வரும் "வெளியேறும் மரபை" கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பான ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டி திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.–வினர் வெளிநடப்புச் செய்தனர்.

திரு. மு.க. ஸ்டாலின் வெளிநடப்புச் செய்த காரணம் பற்றி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததைப் பல பத்திரிகைகளும் வெளியிட்டுள்ளன. பத்திரிகைகள் செய்திகளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து செய்திகளை வெளியிடுவதில்லை. பெரும்பாலும் நடப்பனவற்றை அவ்வாறே செய்திகளாக வெளியிட்டுவிடுகின்றனர். சில சமயம் வந்த செய்திகள்மீது தங்கள் விமர்சனங்களையும் வெளியிடுகின்றனர். திரு. ஸ்டாலின் கூறிய விமர்சனத்தின் உண்மைத் தன்மை பத்திரிகைகளில் வெளிவராத காரணத்தால் இதுபற்றிய உண்மை நிலை என்னவென்று நாட்டு மக்கள் தெரிந்துகொள்வது அவசியம் எனக் கருதுகிறேன்.

கடந்த 23–3–2012 முதல் 25–3–2012 வரை சில திட்டங்கள் பற்றி வெளியிடப்பட்ட அரசாணைகள் குறித்து அரசின் செய்திக் குறிப்புகள் வெளியிடப்பட்டன. அரசு மேற்கொள்ளும் திட்டங்களை, செய்திக் குறிப்பு வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதுதான் செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் முக்கியப் பணியாகும். அதை நிறைவேற்றிடும் வகையில், அரசாணையில் வெளியிடப்பட்ட திட்டங்கள் பற்றி செய்திக் குறிப்புகள் வெளியிடப்பட்டன. இவற்றை ஏதோ புதிய திட்டங்கள் என்றும்; சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய, நிதிநிலை அறிக்கையில் இடம் பெற வேண்டிய அறிவிப்புகள் முன்னதாகவே வெளியிடப்பட்டுவிட்டன என்றும் உண்மைக்கு மாறாக திரு. ஸ்டாலின் கூறியுள்ளார்.

அரசுச் செய்திக் குறிப்புகளில், காவல் துறைக்கு ரோந்து வாகனங்கள்; கணினிகள்; காவல் நிலையங்களை அணுகும் பொதுமக்களுக்கு அமரும் வசதியை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 10 நாற்காலிகளை வழங்குதல் போன்றவைக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவைதான் நாளிதழ்களில் வெளியிடப்பட்டன. இவை எதுவுமே புதிய திட்டங்கள் அல்ல. கடந்த 13 நவம்பர், 2011 மற்றும் 14 நவம்பர், 2011 ஆகிய தேதிகளில்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் காவல் துறை அதிகாரிகள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று, 14 நவம்பர், 2011 அன்றே காவல் துறைக்கான கணினிகள், காவல் நிலையங்களுக்கான நாற்காலிகள்; தஞ்சாவூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்; திருவண்ணாமலையில் படைக் குடியிருப்பு ஆகியவை நிறைவேற்றித் தரப்படும் என நான் அறிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே போன்று, 24–8–2011 அன்று காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையில் சென்னை மாநகரக் காவல் பிரிவுக்கு 87 ரோந்து வாகனங்கள் வாங்கப்படும் என நான் இந்த சட்டமன்றத்திலேயே அறிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவை கொள்கை அளவிலான அறிவிப்புகள் ஆகும். இந்த அறிவிப்புகள் அப்பொழுதே நாளிதழ்களில் செய்திகளாக வெளி வந்துள்ளன. இந்தக் கொள்கை அறிவிப்புகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், இவற்றுக்கான சுற்றுக் குறிப்பு உள் துறையால் தயாரிக்கப்பட்டு, நிதித் துறை ஒப்புதலுக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் என்ற முறையில் என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதற்கான அரசாணைகள் 13–3–2012 மற்றும் 14–3–2012 ஆகிய நாட்களில் வெளியிடப்பட்டன. இந்த அரசாணைகள்தான் 23–3–2012 அன்று அரசின் செய்திக் குறிப்பாக வெளியிடப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்றுதான், 2011–2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பத்தி 85–இல் "தேனி மாவட்டத்தில், போடிநாயக்கனூரில், அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றைப் புதிதாகத் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பட்ஜெட் தாக்கல் செய்தபோது, தனது உரையில் தெரிவித்தார். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மேலசொக்கநாதபுரம் கிராமத்தில் 12.06 ஏக்கர் நிலம் தெரிந்தெடுக்கப்பட்டு, எந்தெந்தப் பிரிவுகளில் எத்தனை மாணவமாணவியர் சேர்க்கப்படுவர் என்பதை முடிவு செய்து, கட்டடங்கள் கட்டுவதற்கான உத்தேச மதிப்பின்படியான செலவு, தோற்றுவிக்கப்பட வேண்டிய பதவிகள் மற்றும் அதற்கான செலவு, உபகரணங்கள், நூலகம், கணினிகள், தளவாடங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் உயர் கல்வித் துறையால் தயாரிக்கப்பட்டு, நிதித் துறை ஒப்புதலுக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட



துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் என்ற முறையில் என்னிடமும் ஒப்புதல் பெறப்பட்டு, 22–3–2012 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணைதான் 23–3–2012 அன்று அரசின் செய்திக் குறிப்பாக பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இதைப் போன்றுதான் ஏனைய செய்திக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.

முற்பகல் 11–00

இதிலிருந்து, அரசாணை வெளியிடப்பட்ட இனங்களில் மட்டுமே, இச்செய்திகள் அரசின் செய்திக் குறிப்புகளாக செய்தி–மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்பட்டன என்பதும், புதிய திட்டங்கள் எதுவும் என்னால் தற்போது வெளியிடப்படவில்லை என்பதும் தெளிவாகத் தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறை இல்லாமல், அரசின்மீது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டை அள்ளித் தெளிக்க வேண்டும் என்பதற்காக, இந்த அரசு செயல்படுத்தும் திட்டங்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறை இல்லாமல், அரசின் கொள்கை பற்றிய குறிப்புகள் அடங்கிய ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு ஆகிய எதையுமே சரியாகப் படிக்காமல் "வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ" (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கேற்ப, மனம் போன போக்கில் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியுள்ளார் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின்.

அவை மரபுகளுக்கு மிக உயர்ந்த மதிப்பு அளிக்கின்ற அரசு, எனது தலைமையிலான அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) விதிமுறைகளையும், மரபுகளையும் ஐயம் திரிபறத் தெரிந்து வைத்து அதன்படி நடக்கின்ற முதலமைச்சர்தான் நான். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திற்கோ, அரசியலுக்கோ நாங்கள் புதியதாக வந்த கத்துக்குட்டிகள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நான் மூன்றாம் முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்று கடமை ஆற்றி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற மரபுகளுக்கும், விதிகளுக்கும் மாறாக நாங்கள் எதையும் செய்யமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

*[செல்வி ஜெ ஜெயலலிதா]* [2012 *மார்ச்* 28

*உண்மை நிலைமை இவ்வாறிருக்க, சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக, புதிய அறிவிப்புகளை நான் வெளியிட்டேன் என்று பொறுப்புள்ள துணை முதலமைச்சர் பதவியை வகித்த திரு. ஸ்டாலின் கூறியிருப்பது, அவரது அறியாமையைக் காட்டுகிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது வேண்டுமென்றே தவறான குற்றச்சாட்டுக்களையும், களங்கத்தையும் எங்கள் அரசின்மீதும் என்மீதும் சுமத்துகிறாரா? என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும் என்று தெரிவித்து, எதிர்க்கட்சியாக இருந்தபோதே, பேரவை மரபுகளுக்கு மாறாக "பால் கமிஷன்" அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் தி.மு.க. தலைவர் கருணாநிதிதான் என்பதையும் இந்தத் தருணத்தில் நினைவூட்டி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. Please sit down. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உண்மையை சொல்லியிருக்கிறார். அது நடந்தது. அதைத்தான் சொல்லியிருக்கிறார். நடக்காததைச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்)* Please sit down. *இறுதியில் குறிப்பிட்டது மாதிரி நடந்ததா இல்லையா? அதைச் சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

### (ஆ) காவிரி நீர் தமிழகத்திற்கு வழங்கப்படமாட்டாது என்று கர்நாடகச் சட்டமன்றத்தில் தெரிவித்தது

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கர்நாடகச் சட்டசபையில் தமிழகத்திற்கு முறையாக, நியாயமாக நடுவர்மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வழங்க வேண்டிய நீர் (குறுக்கீடுகள்) இனிமேல் ஒரு சொட்டு தண்ணீர்கூட வழங்கப்பட மாட்டாது என்று கர்நாடகச் சட்டசபையில் முதலமைச்சர் அவர்களும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இன்றைக்குத்தான் அதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)* No, please sit down. *நீங்கள் இன்றைக்குத்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *அதேபோல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தெரிவித்திருப்பது என்பது தமிழகத்தைக் கடுமையாக பாதிக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாகக் கருதி (குறுக்கீடுகள்) அதை அவசரமாக எடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கின்றேன். இது தமிழகத்தினுடைய முக்கியமான உணவு சம்பந்தப்பட்ட பிரச்சினை.*



2012 *மார்ச்* 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீங்கள் இன்றைக்குத்தான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. பதில் வந்தவுடன் அதுகுறித்துப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அமரவும். (குறுக்கீடுகள்) இல்லை. இன்றைக்குத்தான் உங்கள் உறுப்பினர் பேசுகிறாரே! (குறுக்கீடுகள்)*

*இன்றைக்கு பட்ஜெட் மீதான விவாதத்திலே உங்கள் உறுப்பினர் பேசுகிறார், இல்லையா? உங்கள் கருத்தை அவரிடம் சொல்லிச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு)* Please sit down. *(குறுக்கீடு)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*முற்பகல் 11–05*

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக*–Panel of Chairmen—*நியமிக்கிறேன்.*

*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*

*திரு. தங்க தமிழ்ச்செல்வன்*

*திரு. கே.பி. அன்பழகன்*

*திரு. ஆர். சின்னசாமி*

*திரு. பி.ஜி. நாராயணன்*

*திரு. சு. குணசேகரன்.*

[2012 மார்ச் 28

# 5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுகின்ற வாய்ப்பையும், அரசியல் வாழ்க்கையினை இந்த உலகுக்கு அடையாளம் காட்டிய ஏழைகளின் தோழன், ஏழை மக்களுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அன்புத் தலைவன் கேப்டன் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே கரும்பு விவசாயிகளுக்கு ஆதரவாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500/– அளிக்க வேண்டுமென்று சொல்லி தஞ்சாவூரிலே கடந்த காலத்திலே எங்களுடைய அன்புத் தலைவர் கேப்டன் அவர்கள் தலைமையிலே ஒரு மாபெரும் போராட்டத்தை நாங்கள் நடத்தினோம். அதே காலக்கட்டத்தில் எதிர்க்கட்சிகளாக இருந்த அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இதுகுறித்து ஒரு போராட்டம் நடத்தினார்கள். ஆட்சி மாறியும்கூட கரும்பு விவசாயிகளின் கனவு கானல் நீரானது. ஆளும் கட்சி தேர்தல் அறிக்கையிலே சொன்னதுபோல் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500/–ஐக் கொள்முதல் விலையாக அறிவிக்காதது விவசாயிகளுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண இரகத்திற்கு 1,130/– ரூபாயும், சன்ன இரகத்திற்கு 1,180/– ரூபாயும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு 3.1 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்ட கரும்பு, நடப்பாண்டில் 3.5 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கடந்த ஆண்டு 342.5 இலட்சம் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி, இந்த ஆண்டில் 400 இலட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கரும்பு ஆதார விலை உயர்த்தப்படும்



2012 மார்ச் 28] *[திரு. செ. தாமோதரன்]*

என்று தேர்தல் வாக்குறுதியை மனதில் கொண்டு, முதற்கட்டமாக இந்த ஆண்டு கரும்பு ஆதார விலையை, போக்குவரத்துச் செலவு ரூ.100/– உட்பட ரூ.2,100/– ஆக உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே போன்று, கரும்பு விவசாயிகள் கூடுதலாக உற்பத்தி செய்து, பொருளாதார ரீதியாகப் பயனடையவும், சர்க்கரை ஆலைகளில் போதிய வருவாய் ஈட்டி அதன்மூலம் கரும்பு விவசாயிகளுக்கு அதிக விலை கொடுப்பதற்கு ஏதுவாக எத்தனால் உற்பத்தியைத் தொடங்கவும் மாண்புமிகு அம்மாவின் அரசு 2002 ஆம் ஆண்டு கொள்கை அளவில் முடிவெடுத்தது. இதன் அடிப்படையில் 6 தனியார் எரிசாராய வடிப்பாலைகளும், 2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைத்துள்ள எரிசாராய வடிப்பாலைகளும் எத்தனால் உற்பத்தியைத் தொடங்கின. இதன்மூலம் அவை 185 இலட்சம் லிட்டர் எத்தனால் தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு அளித்தன. இதன்மூலம் கடந்த 2006 ஆம் ஆண்டு இறுதியில் எத்தனால் உற்பத்திக்கான அனுமதியை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. இதனால் எத்தனால் உற்பத்தி ஆலைகளை அமைத்த சர்க்கரை ஆலைகள் இன்னலுக்கு ஆளாகின. எத்தனால் உற்பத்தியில் அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதால், கரும்பு விவசாயிகளுக்குக் கூடுதல் கரும்பு விலையை வழங்குவது சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக இருக்கும். எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் எத்தனால் உற்பத்தி ஊக்குவிக்கப்படும் என்று அறிவித்திருந்தது. அதை நிறைவேற்றும் வகையில், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையைத் தற்போது நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு எடுத்து வருகிறது. இதன்மூலம், கரும்பு விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கிடைக்கவும், சர்க்கரை ஆலைகள் கூடுதல் வருவாயை ஈட்டவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** சன்ன இரகத்திற்கு 1,180 ரூபாயும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என அரசு அறிவித்துள்ளது. இந்த விலை நேரடிக் நெல் கொள்முதல் நிலையங்களில் மட்டுமே

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2012 மார்ச் 28

விவசாயிகளுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குவிண்டாலுக்கு ரூபாய் 600 முதல் ரூபாய் 750 வரை மட்டுமே கொள்முதல் செய்கின்றார்கள். உதாரணத்திற்கு, விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இதுபோன்ற முறைகேடுகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் . . .

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வர், ஏழையெளியவர்களுடைய ஏந்தல், விவசாயிகளினுடைய விடிவெள்ளி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், சுதந்திர இந்தியாவில் இல்லாத அளவில், ஜூன் 6 ஆம் தேதி மேட்டூர் அணையிலே தண்ணீர் திறந்ததனால் தமிழகம் இன்றைக்கு விவசாயத்தில், வேளாண்மையில், உணவு உற்பத்தியில் மிகப் பெரிய இடத்தைப் பெற்றுள்ளது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு 1,376 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1,255 என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே டெல்டா மாவட்டங்களில் 1,376-உம், அதேபோல் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 243 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சன்ன இரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆதார விலையாக அறிவித்திருக்கிற 1,110 ரூபாயோடு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற ஊக்கத் தொகை ரூ.70/–ஐயும் சேர்த்து ரூ.1,180/–. அதேபோல, சாதாரண இரகத்திற்கு ரூ.1,080 ஆதார விலையைச் சேர்த்து மாண்புமிகு எங்கள் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற ஊக்கத் தொகை ரூ.50/–, மொத்த விலை ரூ.1,130/–. அனைத்து இடங்களிலும் இப்படித்தான் கொள்முதல்



2012 மார்ச் 28] [திரு. இரா. காமராஜ்]

செய்யப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள், தவறான ஒரு கருத்தை அவையிலே பதிவு செய்கிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம் பொதுவாகப் பேசக்கூடாது.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** இதற்குத் தேவையான ஆதாரங்கள் எங்களிடத்திலே இருக்கின்றன. தேவைப்பட்டால் நான் தங்கள்வாயிலாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அப்படியில்லை. ஆதாரம் இருந்தால் நீங்கள் முன்னரே எனது அறையில் வந்து கொடுத்திருக்க வேண்டும். இந்த, இந்த இடங்களில் அவர்கள் கூட்டு வைத்து முறைகேடு செய்கிறார்கள் என்று என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முடியும். இப்படிப் பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** அரசின் கவனத்திற்கு இதனைத் தங்கள்வாயிலாக இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு specific mention இருக்க வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இதுபோன்ற முறைகேடுகள் நடைபெற்றன. வியாபாரிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–10–2011 முதல் 26–3–2012 வரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய ஊக்கத் தொகை மட்டும் ரூ.125.60 கோடி என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து நெல்லைக் கொள்முதல் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். அவர்களுக்குள் ஒரு சிண்டிகேட் அமைத்துச் செயல்படுகிறார்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** ஆனால், அரசு கொள்முதல் செய்கின்ற விலையை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிர்ணயம் செய்து அதற்கு உரிய தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அரசு கொள்முதல் செய்கின்ற இடங்களில் இந்தத் தவறு நடக்கிறதா என்பதைத்தான் சொல்லவேண்டுமேயொழிய, வியாபாரிகள் சிண்டிகேட் போட்டு வேறு இடங்களில் வாங்குவதை இதோடு இணைத்துப் பேசக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அதைத்தான் நான் சொன்னேன். அந்தமாதிரி specific ஆக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிண்டிகேட் அமைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, procurement centres–இலே பிரச்சினை இல்லை. Marketing Committee–இலே விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களைக் கொண்டு வருகிறபொழுது, அங்கிருக்கிற வியாபாரிகள் அதை வாங்குகிறார்கள். அவர்கள் உண்மையான விலையை நிர்ணயம் செய்து வாங்குவதில்லை. அவர்களுக்குள்ளே சேர்ந்துகொண்டு விவசாயியை மொட்டையடித்து விடுகிறார்கள். விழுப்புரம் மாவட்டத்திலே நடந்ததைத்தான் உறுப்பினர் சொல்கிறார்.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொள்முதல் செய்கின்ற இடங்களில் தவறு நடக்கிறதா என்பதுதான் கேள்வி. தனிப்பட்ட வியாபாரிகள் அவர்கள் சிண்டிகேட் அமைத்து செய்கின்ற வியாபாரத்திலே இவர்கள் ஏன் செல்ல வேண்டும்? அரசு கொள்முதல் செய்யும் இடங்களிலே அவர்கள் நெல்லைக் கொள்முதல் செய்ய கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சு வியாபாரம் நடக்கிறது. பஞ்சு வருகிற குடோனிலேகூட இந்தமாதிரி நடக்கிறது. மஞ்சள் மார்க்கெட்டில் வருகிறது. மஞ்சள் மார்க்கெட்டிலேகூட வியாபாரிகள் மார்க்கெட் dull ஆகும்போது சிண்டிகேட் போட்டு வியாபாரிகள் வாங்குகிறார்கள். அதுவே விலை உயரும்போது வியாபரிகளே சிண்டிகேட் ஆவதில்லை. இவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் வந்து வாங்கிக்கொள்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் இவர்கள் வந்து வாங்கிக்கொள்கிறார்கள்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் பல ஆண்டுக் காலமாக இலவச பட்டா வேண்டி, கிராம நிருவாக அலுவலர் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை மனு கொடுத்தும் இதுவரை பட்டா கிடைக்கவில்லை. 2012–2013 ஆம் நிதி ஆண்டிலே யானைப் பசிக்குச் சோளப் பொரியைப் போடுவதுபோல ஒரு இலட்சம் பட்டாக்கள் என்று இந்த அரசு நிர்ணயம் செய்துள்ளதை இரண்டு இலட்சமாக உயர்த்த முன்வரவேண்டும். கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 14 இலட்சம் பட்டா மாறுதல் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 28

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆண்டிற்கு ஒரு இலட்சம் பட்டா என்பது சாதாரண காரியம் அல்ல. அதிலே பல்வேறு விதிமுறைகள் இருக்கிறது. நத்தத்தை மட்டும்தான் அதிலே பட்டாக்களாக வழங்க முடியும். ஓடைப் புறம்போக்குகள், நீர்வழிப் புறம்போக்குகள், மயானப் புறம்போக்குகள் என்று பல இடங்களிலே மக்கள் இருக்கிறார்கள். சாலைப் புறம்போக்கிலே வாழ்கிறார்கள். இதையெல்லாம் ஆய்வு செய்துதான் ஒரு பட்டா வழங்க வேண்டியிருக்கிறதே தவிர, அவசரக் கோலத்திலே அவர்களுக்குப் பட்டா கொடுத்தால், மீண்டும் அப்புறப்படுத்த வேண்டிய சூழ்நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்று இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு இலக்கை நிர்ணயிக்கிறார்கள் என்று சொன்னால், அந்த இலக்கைக் காட்டிலும் கூடுதலாக இந்த அரசு பட்டாக்கள் வழங்கியிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** அதேபோல இன்னும் எத்தனை இலட்சம் மக்கள் வீட்டுமனைப் பட்டா வேண்டி காத்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் இந்த அரசு வெளியிடவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Please sit down.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்னும் கூடுதலாக ஒரு தகவல். விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குறைந்த விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுவதாக இங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அது நடைபெறுவதைப்போல இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலையை முழுவதும் பெற, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எங்குப் பார்த்தாலும் திறக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தற்போது விழுப்புரம் மாவட்டத்திலே



2012 மார்ச் 28] *[திரு. இரா. காமராஜ்]*

மட்டும் 13 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இன்னும் தேவைப்பட்டால் திறப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிற இந்தப் பயனைப் பெற்றடையுமாறு தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 22,800 கோடி ரூபாய் முதலீட்டில் 3,800 மெகா வாட் மின் உற்பத்தித் திட்டங்கள் எனப் பல உற்பத்தித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால், இதுவரை செயல்பாட்டிற்கு வரவில்லை. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஊரக நகர்ப்புற பகுதிகளில் 3 மணி நேரமாக இருந்த மின்வெட்டு, 1–7–2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டதாக இந்த அரசு குறிப்பிட்டுள்ளது. மேலும், மின் உற்பத்திக்கேற்ப இந்த மின்வெட்டு படிப்படியாக தளர்த்தப்பட்டு 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் முற்றிலுமாக மின்வெட்டு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது நிலைமை முற்றிலும் மாறி, மின்சாரம் கிடைப்பதே ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மணி நேரமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தற்காலிகமாக ஏற்பட்டிருக்கின்ற இந்த மின்வெட்டுப் பிரச்சினை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசினுடைய செயல்பாடுகளால் ஏற்பட்டது அல்ல. ஏற்கெனவே, பல முறை இங்கே அம்மா அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். இந்தத் தற்காலிக மின் பற்றாக்குறைக்குக் காரணம், கடந்தகால ஆட்சியிலே திட்டமிட்டபடி அந்த மின் உற்பத்தியை முடிக்காததுதான் காரணம் என்பதை இங்கே பல ஆவணங்களின் வாயிலாக பல்வேறு முறையிலே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இப்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையை அரசு மூடி மறைக்கவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்குக் கொடுத்த

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 மார்ச் 28

வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. வாரந்தோறும், ஒவ்வொரு வாரமும் மின் தேவைக்கென்று தனியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, நடைபெற்று வருகின்ற மின் உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்துவது, விரைவுபடுத்தும் புதிய திட்டங்களுக்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பது, மின் பற்றாக்குறையைப் போக்கிட தேவையான மின்சாரத்தைக் கொள்முதல் செய்வது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார உற்பத்தி என்பது பல முறை இங்கே சொன்னதுபோல, இன்றைக்குத் தொடங்கி நாளைக்கு முடிக்க முடியாத ஒரு அம்சம். அதற்கென்று ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்குக் குறிப்பிட்ட கால அவகாசம் வேண்டும். ஆகவே, மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கு வேண்டிய கால அவகாசங்கள் குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள், இந்த பிரச்சினைகளை என்னுடைய அரசு தீர்த்து வைக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் படிப்படியாக இங்கே செயல்பாட்டுக்கு வருகின்றபோது, வருகின்ற ஜூன் மாதம் முதல் படிப்படியாக மின்வெட்டு குறையும். ஜூன் மாதத்திற்குப் பின்பு, தொடர்ந்து மின்வெட்டு குறைந்துகொண்டே வந்து, அடுத்த ஆண்டு, 2013 முடிவதற்குள் நிச்சயமாகத் தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம், கடந்த ஆண்டு நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் படிப்படியாக மின்வெட்டு தளர்த்தப்பட்டு, 2012, ஆகஸ்டு மாதத்திற்குள் முற்றிலுமாக மின்வெட்டு நீக்கப்படுமென அறிவித்தார். கடந்த ஆண்டுப் பிரச்சினையை – அவர் கூறுவது தெளிவில்லாத பதில். . .



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடியே சொல்கிறேன். ஏற்கெனவே, நடந்து வருகின்ற மின் திட்டங்களை, மின் திட்டப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு வேண்டி, தமிழக அரசு புயல் வேகத்தில் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதிலே சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒன்றிரண்டு காலதாமதங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், நிருவாகக் கோளாறுகளின் காரணமாக அல்ல. உதாரணத்திற்கு வல்லூர் மின் நிலையம் உற்பத்தித் திட்டத்தினையும், North Chennai மின் உற்பத்தித் திட்டத்தினையும், பாரத மிகுமின் நிலைய நிறுவனம், அந்த மின் உற்பத்தித் திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. அதிலே 250 டன் எடை உள்ள டர்பைன் அங்கேயிருந்து கொண்டுவரப்படுகிறது. கொண்டுவருகின்றபோது, எதிர்பாராதவிதமாக அதனுடைய எடையைத் தாங்கமுடியாமல் அந்தப் பாலம் உடைந்துவிடுகிறது. இதனால், அந்நிறுவனம் அந்த டர்பைனைக் கொண்டுவந்து சேர்க்கமுடியவில்லை. மீண்டும் அந்த டர்பைனை உற்பத்திச் செய்து, மேலும் 4, 5 மாத காலம் கழித்து, மீண்டும் அந்த டர்பைனைத் திரும்பக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. இப்படி இயற்கைச் சூழ்நிலையின் காரணமாக எதிர்பாராமல் ஏற்பட்ட ஓரிரு சம்பவங்களின் காரணமாக, மின் உற்பத்தித் திட்டங்கள் ஓரிரு மாதங்கள் காலதாமதம் ஆகுமே தவிர, நிரந்தரமாக நிறுத்தப்படமாட்டாது. வருகின்ற ஜூன் மாதம் முதல் படிப்படியாக மின்வெட்டுப் பிரச்சினை நிச்சயமாகக் குறையும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது மேலும் மின் கட்டணம் உயரும் என்ற அச்சம் மக்களிடத்திலே இருக்கிறது. அதுபோல, நீண்டகாலத் திட்டங்களாக சூரிய ஒளி மின் சக்தி பூங்காக்கள், கடலோரங்களிலும், கடல் பரப்பிலும் அமைக்கப்படும் காற்றாலைத் திட்டங்கள், பையோ மாஸ் அனல் மின் திட்டங்கள்

*[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்]* [2012 மார்ச் 28

ஆகிய திட்டங்களுக்கு இந்த அரசு தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் என்று அறிவித்துள்ளது. ஆனால் நிதிநிலை அறிக்கையில் விரிவான விளக்கங்கள் தரப்படவில்லை.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே கிராமப்புற இளம் பெண்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டு இன்னும் கூடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியிலே இருக்கிறது என்று உறுப்பினர் சொல்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அச்சம் நீங்கி நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல, ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாகக் குறையும் என்பதை மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத்தான் ஒரு அச்சம் இருக்கிறது. சொன்னபடி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டால் நாம் எப்படி அரசியல் செய்வதென்ற அச்சம் உங்களுக்கு வேண்டுமானால் இருக்கலாமே தவிர, அந்த அச்சம் பொது மக்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது, மேலும் மின் கட்டணம் உயரும் என்ற அச்சம் இன்றைக்கு மக்களிடத்திலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, மின் கட்டணத்தை உயர்த்துவது நேரடியாக மாநில அரசு அல்ல. மின் கட்டணத்தை உயர்த்துகின்ற அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்குத்தான் உண்டு. இது மத்திய அரசினுடைய சட்ட விதிமுறைப்படி, சட்டப்படி மத்திய அரசால் அமைக்கப்பட்ட, சுயசார்பு, சுய அதிகாரம் படைத்த ஒரு நிறுவனம். ஜுடிஷியல் பவர் அதற்குண்டு. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை



2012 மார்ச் 28] *[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]*

ஆணையம்தான் கட்டணங்களை நிர்ணயிக்கவேண்டும்; நிர்ணயிக்கும். மாநில அரசு நேரடியாக மின் கட்டணத்தை நிர்ணயிக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒழுங்குமுறை ஆணையத்திற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் உள்ள கட்டணத்தை, உற்பத்தி ஆகின்ற கட்டணத்திற்கும், விற்பனை செய்யப்படுகின்ற கட்டணத்திற்கும் இடைவெளி இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மத்திய அரசு அந்த நிறுவனத்தை அமைத்திருக்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தின் உற்பத்திக்கான செலவு, விற்பனை செய்யப்படுகின்ற அளவு இதையெல்லாம் நிர்ணயித்து, ஆய்வு செய்து இறுதியாக அந்தக் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** இந்த நிதிநிலை அறிக்கையிலே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பார்த்திபன், ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண உயர்வைத் தீர்மானிப்பது மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கின்ற ஒழுங்குமுறை ஆணையம் என்று சொன்னாலும், அந்த ஆணையத்திற்கு முன்னாலே தமிழ்நாடு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று மனு செய்திருப்பது தமிழ்நாடு மின்வாரியம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, மின்வாரியம் மனு செய்யாவிட்டால் அந்த ஆணையம் அப்படி மின் கட்டண உயர்வைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆணையமே மின் கட்டணத்தை உயர்த்துவது இல்லை. தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய கோரிக்கையை ஏற்று, மக்களுடைய கருத்துகளைக் கேட்டு அவர்கள் செய்கிறார்கள். எனவே, மின்வாரியம் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று மனு செய்யாமல் இருந்திருக்குமானால், அந்தக் கட்டண உயர்வு என்கிற பிரச்சினைக்கே இடமில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு மூத்த உறுப்பினர் விவரம் தெரிந்தவர், ஆனால், இவ்வளவு பொறுப்பில்லாமல் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கட்டணங்களை உயர்த்துவது என்பது, அதாவது மத்திய அரசு அமைத்திருக்கின்ற அந்தத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய நோக்கமே, பல மாநில அரசுகள் மின் கட்டணத்தை உற்பத்தித் திறனுக்கு ஏற்றாற்போல் ஏற்றுவதற்கு மறுக்கின்றன. ஆகவே, இந்த இடைவெளியை ஈடு செய்ய வேண்டுமென்ற காரணத்திற்காக, இந்த நோக்கத்தோடு கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு இது அமைக்கப்பட்டது. ஆனால், இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கட்டணம், நாம் எவ்வளவுதான் விண்ணப்பித்தாலும்கூட, அவற்றை இறுதி செய்வது அந்த அமைப்புதான். அதாவது தேவைக்கேற்ப கண்டிப்பாக* Suo–motu– *உடன் அதனைச் செய்யலாம். அதற்கு அதிகாரம் இருக்கின்றது. ஆகவே, மிகப் பெரிய இழப்பு ஏற்படுகின்றபோது அதை ஓரளவு நிவர்த்தி செய்வதற்கு அரசு முயற்சிப்பதிலே எந்தவிதத் தவறும் கிடையாது. ஆனால், எவ்வளவுதான் சொன்னாலும், அவற்றை இரத்து செய்வதும், அவற்றை ஏற்றுக்கொள்வதும், அதற்குரிய கட்டணத்தை நிர்ணயிப்பதும் முழுக்க முழுக்க அந்த அமைப்பினுடைய அதிகாரம்தான். அந்த அதிகாரவர்க்கத்திற்கு உட்பட்டுதான்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக முடியுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை மட்டும் சுருக்கமாக முடியுங்கள், உட்காருங்கள் என்று சொல்கிறீர்களே!*

*கடந்த நிதிநிலை அறிக்கையிலே, கிராமப்புற இளம் பெண்கள் சுகாதாரத்தைப் பேணிக்காக்க* Sanitary Napkin—*கள் கிராம செவிலியர்கள்மூலமாக வழங்கப்படுகின்றன எனவும், இதற்காக 2011–2012 ஆம் ஆண்டில் 46 கோடி ரூபாய் நிதி செலவாகும் என பக்கம் 58-இல் 94–ஆவது பத்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில், பக்கம் 53-இல் 86–வது பத்தியில் இனிமேல்தான் தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலதாமதத்திற்கான காரணம் தெரியப்படுத்தப்படவில்லை.*



2012 மார்ச் 28] *[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளரிளம் பெண்களுக்கு* Sanitary Napkin—*கள் வழங்குகிற திட்டத்தை நேற்று துவக்கி வைத்துவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்* News paper, *டி.வி. எல்லாம் பார்ப்பது இல்லை, படிப்பது இல்லையா?* Please continue.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Newspaper, *டி.வி. எல்லாம் பார்க்கின்ற பழக்கம் எனக்குண்டு. கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 46 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியை ஏன் பயன்படுத்தவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த ஆண்டிற்கான நிதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை வரவேற்கிறேன். அதேபோல. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டு என்பது மார்ச் 31 ஆம் தேதிதான் முடிவடையும். மார்ச் 31 இன்னும் வரவில்லை. ஆகவே, நடப்பாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில்தான் இந்தத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முதலில்* informative *ஆக இருங்கள்.* Academic year, Financial year *என்று இருக்கிறது. இரண்டு வருடங்களும் எந்தெந்த நாளில் முடிவடையும் என்பதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள்.* Please continue.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *அதேபோல், மாணவ, மாணவிகளுக்கு 9.12 இலட்சம் பேருக்கு 912 கோடி ரூபாயில் விலையில்லா மடிக்*

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2012 மார்ச் 28

கணினி வழங்கப்படுமென 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அரசு அறிவித்துள்ளது. ஆனால், வழங்கியது ஒரு இலட்சத்திற்குக்கீழ் மட்டுமே. இந்த நிலையில் மாணவிகளுக்கு மட்டும் வழங்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. +2 மாணவ, மாணவிகள் பள்ளிப் படிப்பை முடிக்கின்ற சூழ்நிலையில், அவர்களுக்கு. . .

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலையில்லா மடிக் கணினி வழங்கும் திட்டத்தைப்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத ஒரு அற்புதமான திட்டத்தை ஏழை எளிய மாணவர்கள் பயன்பெற வேண்டும்; கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள், அரசுப் பள்ளியிலே, கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தியாவிலே முதன்முதலாகத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு 9.12 இலட்சம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்க ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான நிதியையும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதற்கான Hard disk தாய்லாந்து நாட்டிலேயிருந்துதான் வரவழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே சுனாமி, பெருவெள்ளம் ஏற்பட்டால் அதைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமாளித்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான திறமை இருக்கிறது. ஆனால், தாய்லாந்திலே ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக அந்தப் பொருட்கள் வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலே இந்த ஆண்டு முடிவதற்குள் அந்த விலையில்லா மடிக் கணினி வழங்கும் திட்டத்தையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்துவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** +2 மாணவ, மாணவிகள் பள்ளிப் படிப்பை முடிக்கின்ற சூழ்நிலையில், அவர்களுக்கு மடிக் கணினி கிடைக்குமா, கிடைக்காதா என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டம் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது; மடிக் கணினிகள் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** 2012–2013ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே புதிதாக உயர் கல்வித் துறை பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. மேலும், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் அரசு அறிவியல் கல்லூரிகள் மட்டும் சுமார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் எந்த அறிவிப்பும் இல்லையென்று சொல்கிறார். ஓர் உறுப்பினர் வெளியிலே இருந்து 'முன்பே அறிவித்துவிட்டார்' என்று சொல்கிறார். ஆகவே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர் கல்வித் துறைக்குப் பல்வேறு நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

[2012 மார்ச் 28

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டும் சுமார் 4,500 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகத் தெரிய வருகிறது. உயர் கல்வி வளர்ச்சி பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. ஏற்கெனவே 1,200 ஆசிரியர்கள் நியமனம் செய்வதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், எந்த முறையில் நியமனம் இருக்கும் என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அதைப்போல, நீரிழிவு நோயாளிகளுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியிடங்கள் 6,092. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 62, ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் 7 என மொத்தம் சேர்த்து, 69 கல்வி நிறுவனங்கள் உள்ளன. 31–5–2012 அன்று ஓய்வின் காரணமாக ஏற்படும் காலிப் பணியிடங்கள் 1,258. மேற்படி காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அரசாணை வெளியிட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் உணவுப் பொருட்கள், மருந்து வகைகளுக்கு வரி விலக்கு அளித்ததைப்போல, இரத்த அழுத்த நோயாளிகள் தமிழகத்தில் பெருமளவு இருக்கிறார்கள். எனவே, அந்த நோய்க்குரிய மருந்து வகைகளுக்கும், உணவுப் பொருட்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.**

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** அன்றாடம் தொலைக்காட்சிகளிலே, பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகள்தான். அன்றாடம் வருகின்ற செய்திகளை என்னைப் பார்க்கச் சொன்னீர்கள். நீங்கள் செய்தியைப் பாருங்கள். அன்றாடம் தொலைக்காட்சிகளிலே, பத்திரிகைகளிலே வருகின்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சொற்றொடர் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் specific—ஆக ஏதாவது சொல்லுவதாக இருந்தால் சொல்லுங்கள். இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மக்கள்தொகைக்கேற்ப காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டிலே ஏழை, எளிய மக்கள் பெருமளவிலே பயன்படுத்துகின்ற பேருந்துக் கட்டணத்தையும், பால் விலையையும் அரசு உயர்த்தியதை தமிழ்நாட்டில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருமித்த குரலில் குறைக்கக் கோரிக்கை விடுத்தும் செவிசாய்க்காத இந்த அரசு, இரயில் கட்டணத்தைப் பற்றிப் பேசுவது வியப்பாக உள்ளது. தமிழக அரசு உயர்த்திய கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவர் இதற்காக மிகப் பெரிய போராட்டத்தை அறிவித்து, நடைபெற்ற சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் வீதி வீதியாக இந்தக் கருத்தைச் சொல்லி, வாக்களியுங்கள் என்று கேட்டார். அந்தத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் 'புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு அவர் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் ஒருமுறைகூட வரத் தேவையில்லை. ஆனால், மக்களைச் சந்திப்பதற்காக வந்துவிட்டுச்

*[திரு. கே.பி. முனுசாமி]* [2012 மார்ச் 28

சென்றுவிட்டார். அதனால்தான், பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், *(மேசையைத் தட்டும் ஒலி)* இவர்கள் கொடுத்த வேண்டுகோள், கொடுத்த கண்டன அறிக்கைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, deposit–ஐ இழக்க வைத்து, அங்குள்ள மக்கள் எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–35*

இப்போது மீண்டும் பழைய பல்லவியையே, அவர்களது தலைவரைத் திருப்திபடுத்துவதற்காக பஸ் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு என்று பேசிக் கொண்டிருக்கிறார். மக்கள் மகிழ்ச்சியோடு சென்று கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது கருத்து இருந்தால், ஆக்கபூர்வமான கருத்தை அரசுக்குச் சொன்னால், இந்த அரசு செவி சாய்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத் தேர்தல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், இல்லை. உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டு இருக்கிறார். Please sit down. *(குறுக்கீடுகள்)* திரு. பார்த்திபன் நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* No, no. நீங்கள் அந்தக் கருத்தை பேசுபவரிடம் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் பேசுவதற்கு நான் allow பண்ண முடியாது. *(குறுக்கீடுகள்)* No, I will not allow you.

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நடைபெற்ற சம்பவங்கள் எங்களுக்கும் தெரியும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவது உங்களுடைய உறுப்பினர், உங்களுடைய கருத்து ஏதாவது இருந்தால் பேசுகின்ற உங்கள் உறுப்பினரிடம் சொல்லுங்கள், அவர் அதுகுறித்துச் சொல்வார். நீங்கள் அதை எழுப்ப முடியாது. உங்கள் உறுப்பினர்தான்



2012 மார்ச் 28] *[பேரவைத் தலைவர்]*

பேசுகிறார். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசவேண்டும் என்று கோருவது மரபு கிடையாது. Please sit down. *(குறுக்கீடுகள்)* உங்கள் உறுப்பினரிடம் சீட்டு எழுதிக் கொடுத்து அவரைப்பேசச் சொல்லுங்கள். நீங்கள் எல்லோரும் எழுந்து பேச முற்பட்டால் நான் அனுமதிக்க முடியாது. வேறு கட்சி உறுப்பினர் பேசும்போது point of order கேட்டால், பேச அனுமதி கொடுக்கமுடியும். Please sit down *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டண உயர்வைப் பற்றியும், பால் விலை உயர்வைப் பற்றியும் பேசுகிறபோது, அதற்கான பதிலைக் கொடுத்திருக்கலாம். அதற்காக ஏதோ referendum நடத்தினமாதிரி தேவையில்லாமல் சங்கரன்கோவில் இடைத் தேர்தலைக் கொண்டுவந்து, அதைப் பயன்படுத்தி, *(குறுக்கீடு)* இருங்கள், அதைப் பயன்படுத்தி அரசியல் ரீதியில் *(குறுக்கீடுகள்)* இருங்கள், இருங்கள், அரசியல் ரீதியில் ஒரு விமர்சனத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன? அதுவும் சபையில் இல்லாத மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப்பற்றி இங்கு குறை சொல்வதோ, குற்றஞ்சாட்டுவதோ எந்தவகையில் நியாயம் என்பதைத் தாங்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் நல்ல அனுபவம் உள்ள ஒரு மாமன்ற உறுப்பினர். இங்கு குற்றமோ, குறையோ சொல்லவில்லை. அவர்கள் சொன்ன கருத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, வாக்களித்தார்கள் என்றுதான் சொன்னோமேயொழிய, தனிப்பட்ட முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிக் குற்றம் சொல்லவில்லை. ** என்று வெளியிலே சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் சொன்னோமா? ** என்று சொல்லியிருக்கிறார் உறுப்பினருடைய தலைவர். மக்களால் செல்வாக்குள்ள ஒரு இயக்கத்தை ** என்று சொல்லியிருக்கிறார், அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலே பல இடங்களில் பல தலைவர்கள் பேசுகின்ற பேச்சுக்களையெல்லாம் சட்டமன்றத்திலே விவாதிப்பது எப்படி முறையாகும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, தேவையில்லாமல் சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத் தேர்தலை இங்கு இழுக்கவேண்டிய வேலை ஏன் வந்தது என்று கேட்டார். சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத் தேர்தலில் அவர்கள் சார்ந்து இருக்கின்ற வேட்பாளரை அங்கே போட்டியிடச் செய்து அவருடைய கட்சித் தலைவர் வீதி வீதியாக, தெருத் தெருவாக ஒன்பது நாட்கள் பிரச்சாரம் செய்தார். (குறுக்கீடு) பிரச்சாரம் செய்து தேவையில்லாத சில விமர்சனங்களை அங்கு செய்தார். எந்த விமர்சனங்களையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், பஸ் கட்டணமும், பால் விலையும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் உயர்த்தப்பட்டதினுடைய காரண காரியங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அதை மக்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றினை, மீண்டும் அவர்கள் கட்சியினுடைய தலைவர் சங்கரன்கோவில் பிரச்சாரத்திற்கு வந்து சொன்னதைத்தான் மக்கள் புறக்கணித்து அவர்களுடைய டெபாசிட் தொகையைக் காலி செய்தார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 28]

முற்பகல் 11–40

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய கடமை சொல்வது; ஆளும் கட்சியினுடைய கடமை செய்வது. 'Opposition has its say; the Government has its way.' பஸ் கட்டண உயர்வைப்பற்றி, அதனாலே சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்லி, அதை மறு ஆய்வு செய்து, அதை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ, அந்த அளவிற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்பது ஒரு எதிர்க்கட்சியினுடைய கடமை. அதைத்தான் நாங்கள் செய்கின்றோம். ஆனால், சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத் தேர்தலைப்பற்றி, அந்த இடைத் தேர்தல் முடிவைப்பற்றி, அரசியல்ரீதியாக நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாடாளுமன்ற தேர்தலில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் தனித்துப் போட்டியிட்டபோது பெற்ற வாக்குகள் 11,000. (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது பெற்ற வாக்குகள் 12,144. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக. . . (குறுக்கீடு) இல்லை, இல்லை, இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், Please sit down, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிற்கிறார். Please sit down. அவர் பேசுகிறார். Please sit down. அவர் பேசிய பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற இடைத் தேர்தலில், அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர் போட்டியிட்டு 12,000 வாக்குகள் பெற்றதாக இங்கே பெருமையாகச் சொன்னார்கள். அவர்கள் நம்முடைய பொதுவுடைமைக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்துதான் அங்கே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 மார்ச் 28

போட்டியிட்டார்கள். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியில் 10,000 ஓட்டுகள் இருப்பதாக ஏற்கெனவே எங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மூலமாக, அவர்கள் தோழர்களே எங்களைச் சந்தித்து அந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 10,000 ஓட்டுகளைக் கழித்தால், இவர்கள் வாங்கியது வெறும் 2,000 ஓட்டுகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, அதுதானே உண்மை? உண்மையைத் தானே சொல்லப் போகிறீர்கள்? அவர்கள் உண்மையைத்தான் சொல்லப் போகிறார்கள். (குறுக்கீடு) Please sit down.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிறமாதிரிதான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. சங்கரன்கோவில் இடைத் தேர்தல் வெற்றி, ஆளும் கட்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய ** விலை மதிப்பற்ற வெற்றி என்றுதான் நாங்களும் சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி யாரையும் ஆதரிக்கவில்லை. போட்டியும் இடவில்லை. எனவே, மாண்புமிகு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்திய கம்யூனிஸ்டு கட்சி என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி என்றுதான் சொன்னார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், விவாதத்தை முடிக்க வேண்டும். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எங்களோடு இருந்தார்கள், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நாங்கள் வாங்கிய வாக்குகள், எதையும் எதிர்பார்க்காமல் எங்களுக்கு என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2012 மார்ச் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

நாங்கள் ஆட்சியில் இருந்ததனாலும், ஆட்சியில் இருந்த கட்சியினாலும் பலனடைபவர்கள் இருக்க முடியும். ஆட்சியில் இருப்பவர்களிடத்திலும் பலனை எதிர்பார்க்க முடியும். எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் எங்களுக்கு வாக்களித்தார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) 'கிணற்றுத் தண்ணீரை, ஆற்று வெள்ளம் அடித்துச் செல்வது வழக்கம் அல்ல' என்பதையும் அந்தத் தேர்தல் நிரூபித்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சி என்று நீங்கள் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் வாங்கியிருக்கிற வாக்குகளின் அடிப்படையில் நான்காம் இடத்திற்கு நீங்கள் சென்றிருக்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டிலும் குறைந்த ஓட்டுகளை வாங்கி, நீங்கள் இன்றைக்கு எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாடு அறிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகள் எதுவாக இருந்தாலும் மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், விவாதம் வேறு திசைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. Please sit down. விவாதம் வேறு மாதிரி போய்க்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட ** என்ற வார்த்தை 'விலை மதிப்பற்ற' என்று மாற்றப்படலாம். (குறுக்கீடு) Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

***திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கு.ப. கிருஷ்ணன்] [2012 மார்ச் 28

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

சொல்வது என்பது எளிது. (குறுக்கீடு) சொல்லியவாறு செயலாற்றுவது என்பது சொற்பமே என்று...

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். திரு. கு.ப. கிருஷ்ணன், please sit down.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்; பால் விலையைக் குறைக்க வேண்டும்; வறுமையை ஒழிக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னால், (குறுக்கீடு) சங்கரன்கோவில் இடைத் தேர்தலைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** 'சொல்லியவண்ணம் செயலாற்றுவது சொற்பமே' என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். செந்தமிழின் புகழை உலகத்தின் உச்சியிலே உட்கார வைத்த செந்நாப் புலவன் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு இது. பொய்யாமொழிப் புலவரின் வினாவிற்கு விடை கண்ட முதல்வர், வியப்புமிகு முதல்வர், வெற்றித் திருமகள், விவேகத்தின் வீரமகள், நகை முழக்கி, பகை முடிக்கும் நற்றமிழ் தாய், நம் தாய் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிமாவைப் பார்த்தவர்கள் அவனியிலே ஏராளம்; அரிமாவைப் பார்த்தவர்கள் அவனியிலே ஏராளம். அது அறைகூவல் விட்டதை யாரேனும் கண்டதுண்டா? 12 ஆம் சட்டப் பேரவையிலே வீற்றிருப்போர் அனைவருக்கும் இவ்வரிய வாய்ப்பு கிட்டியது.

கடந்த கூட்டத் தொடரிலே நாவலந் தீவின் நம்பிக்கை நட்சத்திரம் நம் அம்மா அவர்கள் சிலிர்த்தெழுந்து, 'தெம்பு திராணி இருக்குமேயானால், சங்கரன்கோவிலில் சந்திக்க வாருங்கள்' என்று



2012 மார்ச் 28] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

சொன்ன (மேசையைத் தட்டும் ஒலி) அனல் கக்கும் கர்ஜனையின் அதிர்வு இன்றும் எங்கள் அவயத்திற்குள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. களத்தில் நின்றோர் எல்லாம், காப்புத் தொகையை இழந்து, இனிக் கட்சி நடத்துவது பற்றி கடுமையாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்தக் கூடாரம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. அவர் உங்கள் கட்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, 'கட்சி நடத்துவதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று யாரையும், பெயரிட்டுக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. 'இவர்கள்தான்' என்று இவர்களே, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) இது பட்ஜெட்டிலே பேச வேண்டிய பேச்சுதான். (குறுக்கீடுகள்) நேற்றைய முன்தினம் தங்கள் வருகைக்கு முன்னால். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. தயவுசெய்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, யாரும் குறுக்கீடு செய்யக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

*யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நேற்றைய முன்தினம் தங்கள் வருகைக்கு முன்னால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது, 'திராணி இருக்கிறதா?' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,* challenge *செய்தார் என்று சொல்லிவிட்டு அதைச் சொன்னார். முதல் வாக்கியமாக என்ன சொல்கிறார் என்றால், 'இங்கே சவால் விட்டார்கள்; அதனுடைய விளைவு என்ன ஆயிற்று? இன்றைக்குக் கட்சியை நடத்துவதா, இல்லையா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்ன அந்த இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் தெரியும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. எனவே, உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *அப்படியல்ல; அப்படியல்ல. நீங்கள்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது. உங்களைச் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்)*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட முதல் வாக்கியம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்ற கூட்டத் தொடரில், 'திராணி இருக்கிறதா?' என்று கேட்டார் என்று சொல்லிவிட்டு, அதற்குப்பிறகு இதைச் சொல்கிறார். நீங்கள் இரண்டையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கட்சித் தலைவரை நீங்கள் குற்றம் சுமத்துவதில் என்ன நியாயம் என்பதை, அவருக்கு என்ன பாதுகாப்பு? எங்கள் உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு?*





*மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு? தயவுசெய்து தாங்கள் அதற்கான தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சபை நடவடிக்கையிலிருந்து அதை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதில் எந்த விதத்திலும் நியாயம் இல்லை. யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *இது* clear case. *நீங்கள்* proceedings-*ஐ வாங்கிப் பாருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** *நேற்றைக்கு முந்தைய தினம், தங்கள் வருகைக்கு முன்னால், குத்திட்ட அம்பு போல எங்கள் பார்வை, வாயிற்படியையே பார்த்தவண்ணம் இருந்தது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *பேரவையில் ஒரு கட்சித் தலைவரை, இன்னொரு கட்சித் தலைவர் இப்படி மறைமுகமாகக் குற்றஞ்சாட்டி பேசுவதனுடைய விளைவாக பேரவையின் நடைமுறைகளே கெட்டுப்போய் வருகின்றன. நாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச்சொல்லியும், இதே கருத்தை அவர் மறைமுகமாக எங்கள் கட்சியினுடைய தலைவரைத் தாக்குகிறபோது நாங்கள் எப்படி இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கலந்துகொள்ள முடியும்? எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஆகையினாலே நாங்கள் வெளிநடப்புச் செய்வதைத் தவிர, வேறு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையிலே எந்தக் கட்சியையும், எவரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அன்னையின் ஆணைக்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள். எங்களிடத்திலே நல்ல நடை இருக்குமே தவிர, தவறான நடை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்பாலிருந்து ஒருபோதும் எழாது.

நேற்றைக்கு முந்தைய தினம், தங்கள் வருகைக்கு முன்னால், குத்திட்ட அம்புபோல எங்கள் பார்வை வாயிற்படியைப் பார்த்தவண்ணம் இருந்தது. எங்கள் இன்பம் எங்கே, எங்கள் இதயம் எங்கே, பகைவர் நடுங்கும் படை எங்கே, எங்கள் பக்கம் இருக்கும் பலம் எங்கே என்று தேடிக் கொண்டிருந்தபொழுது எங்கள் விழிகளுக்கு விருந்தாக வீரமாமுகம் தெரிந்தது; வெற்றிப் புன்னகை புரிந்தது; அவையே அமர்க்களம் கண்டது; மூன்றாவது முறையாக ஆட்சிக் கட்டிலில், அவையில் அமர்ந்து இருக்கும் அன்னையின் திருமுன் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஆராய்ந்து பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரிய சிந்தனையின் பெருஞ்சுனை; யாருக்கும், எவருக்கும் அஞ்சாது முழங்கும் அரிமா; அரை நூற்றாண்டுக் காலம் ஆழ்ந்த தெளிவோடு, தன்மானக் கருத்துகளை எடுத்துரைத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் துணிச்சலும் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், please sit down. (குறுக்கீடு) அவர் படிக்கவில்லை; குறிப்பைதான் பார்க்கிறார்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** "தம்பி" என்றழைத்து, மடல் எழுதி மகிழ்வித்து, உலகத்துச் சேதியெல்லாம் தெள்ளமுது நடையினிலே எழுதிக்காட்டி, அவர் எழுத்தினைப் படித்திடும் மாந்தரெல்லாம் கையிலாடும் பேனா, கொண்டிருப்பது தேனா என்று வியக்கக்கூடிய வகையில் எழுத்துக்களில் வித்தைகள் படைத்திடும் பேரறிஞர் அண்ணாவினுடைய அறிவை எங்கள் அம்மாவினிடத்திலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்தியமே நித்தம் நித்தம் தவம் செய்து சத்தியத் தாய் பெற்றெடுத்த மைந்தன் பொன்னிறத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள், அம்மா அவர்களிடத்திலே இந்த நீள் மாநிலத்தை ஆள்வதற்கு செங்கோலைத் தந்துள்ளார்கள்.





அன்பு, ஈகை, ஈரம், எதிரிக்கும் அருளும் அருங்குணம் அத்தனையும் தங்கள் அன்னை சந்தியா தாய் கருவில் மெருகேற்றி, காவியம் படைக்க, எங்கள் கனகமணித் தாயைத் தந்து விட்டுப் போயிருக்கிறார்கள். அரசியல் மாளிகைக்கு அம்மா, நீங்கள் பல்லக்கில் ஏறி வரவில்லை. கடந்து வந்த அக்கினி ஆறுகளும், நடந்து வந்த கல்லாறுகளும் எங்கள் கண்களில் இன்றும் தெரிகிறது. தொல்லை தந்த துடுக்கர்களையும், தொடை தட்டிய எதிரிகளையும் தூள் தூளாக்கி மூன்றாவது முறையாக (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராக அமர்ந்திருக்கும் எங்கள் அன்னையே! அருந்தமிழே! அன்பின் பெருக்கே! அறிவின் ஊற்றே! நின் பொற்பாத மலர்களுக்கு பல நூறுகோடி வணக்கங்கள் – தாயே!

முற்பகல் 11–55

பத்து பிள்ளைகளைப் பெற்ற தாய், தன் பிள்ளைகளோடு திருவிழா காணச் செல்கிறாள், கூட்டத்திலே ஒரு பிள்ளை காணாமல்போய் விடுகிறது, பத்திலே ஒன்று போனால் என்ன? ஒன்பது இருக்கிறதே! என்று பெற்றவள் நிறைவு கொள்ளமாட்டார். காணாமல் போன பிள்ளையைக் கண்டுபிடிப்பதற்கு, தான் ஒரு திசை நோக்கியும், மற்ற ஒன்பது பிள்ளைகளை திக்குக்கு ஒரு திசையாக அனுப்பி, பிள்ளையைத் தேடி வரச் சொல்வார். பிள்ளை கிடைத்தவுடன், உச்சி முகர்ந்து, உள்ளங்கை வருடி, அன்பு பாராட்டி, மற்ற பிள்ளைகளைப்போல அன்பு பாராட்டுவது தாயினுடைய உள்ளம். அன்னை உள்ளம். அதுவே அரவணைக்கும் அன்பு உள்ளம்.

வழிதவறிப் போன என்னை வழிகாட்டி, அறிவு புகட்டி, அவையில் அமர வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அழகு பார்க்கும் எங்களின் அருந்தவத் தாயே! மீண்டும் எனது வணக்கத்தை நின் பாத மலர்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் போனாலும், இலக்கைத் தப்பாமல் தாக்குவதுபோல், மாவட்டம் விட்டு மாவட்டம் தாண்டி எங்கு நிறுத்தினாலும், அம்மா நின் திருநாமம் ஒன்றையே உச்சரிக்கும் ஒரே மந்திரமாக ஓதி நின்றால் உலக மக்கள் மனம் உவந்து ஏற்றுக்கொள்வார்கள். அதற்கு நானும் ஓர் உதாரணம்.

அன்னையின் பெயரைச் சொன்னதால், ஆலங்குடி மக்கள் என்னை ஏற்றுக்கொண்டு இந்த அவைக்கு அனுப்பி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என் நன்றியை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கு.ப. கிருஷ்ணன்] [2012 மார்ச் 28

இந்த நிதிநிலை அறிக்கையிலே செந்தமிழ் நாட்டின் சிந்தனைச் சிற்பி அம்மா அவர்கள் பார்வையைச் செலுத்துகிறார், பாதை அமைக்கிறார், பரிமாணம் காண்கிறார். Vision, Mission and Dimension; மண் தோன்றிய காலத்திலேயிருந்து பேரிடர்கள் வருவது இயல்பு. வெள்ளம், மழை, புயல் என மக்களை வாட்டுகின்றபொழுது, மெல்லத்தான் ஒரு அறிக்கையை விட்டுவிட்டு மெத்தையிலே புரளாமல், "சாரங்கம் உதைத்த சரமழைபோல்" எங்கள் அம்மா அவர்கள், கடலூர், விழுப்புரம் பகுதிகளுக்குப் புயலின் வேகத்தையே பொய்யாக்கும் விதமாக உடன் அங்கு சென்றார்கள். அமுத கண்ணீரோடு, எரிந்த வயிற்றோடு வாழ்வே அற்றுப் போய்விட்டது என வாடியிருந்த மக்களுக்கு வள்ளலாரின் மறு உருவாய் வாஞ்சையோடு ஆறுதல் கூறி (மேசையைத் தட்டும் ஒலி) அவலங்களைப் போக்கிட அன்னையாக நானிருக்கிறேன், அஞ்சாதீர்! என உரைத்து அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபியாய் நடுவணரசை எதிர் நோக்காமல் 850 கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்ததோடு ஓராயிரம் கோடியில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றில் எந்தத் தலைவருக்கும் உதிக்காத உயரிய திட்டம் கண்டார்.

மா, பலா, வாழை, முந்திரி என வாழும் காலம் வரை வற்றாத வளம் தந்த மரங்களெல்லாம் வேரோடு, வேரடி மண்ணோடு வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, பொறுக்காத நெஞ்சத்தாருக்கு மரக்கன்று தந்து, சிறுதளை பை தந்து, உயிர் வாழ நுண்ணீர்ப் பாசனம் தந்து, நட்ட மா, பலா, வாழை, முந்திரி பலன் தரும் காலம் வரை பாடுபடும் உழவருக்கு தினமும் தொடர் நடவடிக்கையாக 790.18 கோடி ரூபாயைப் பணக் கொடை தந்து பாரினில் இன்றைக்கு உயர்ந்திருக்கிறார்.

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன், தம்பிக்குத் தலை தந்த குமணன் எனக் கடையேழு வள்ளல்களையும் புறம் தள்ளிய எங்கள் புரட்சித் தலைவியே! "தானே" புயலை வென்ற எங்கள் தர்மத் தலைவியே (மேசையைத் தட்டும் ஒலி) என அப்பகுதி மக்கள் என்றென்றும் உச்சரிக்கும் திருமந்திரமாக இருந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் தேர்தல் நடந்தாலும் சரி, இடைத் தேர்தல் நடந்தாலும் சரி, குடும்பமே ஒப்பாரி வைத்து அழுது புரண்டாலும் சரி, கரையேற முடியவில்லை. எந்தத் தேர்தல் வந்தாலும், எத்திசையில் நடந்தாலும், வெற்றித் திருமகள் என்றும் உங்கள் பக்கம் தாயே!. (மேசையைத் தட்டும் ஒலி)



2012 மார்ச் 28] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

தங்களிடத்திலே மார்ட்டின் லூதரின் அறிவுப் புரட்சியும், தொலைநோக்குத் திட்டமும், நிறைவேற்றும் ஆற்றலும் ஒருங்கே பெற்றதால்தான் பத்தாண்டுக் கால வரம்பைக் கருத்தில் கொண்டு தொலைநோக்குத் திட்டம் ஒன்றை வடித்தெடுத்துத் தந்துள்ளீர்கள்! 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களைத் தந்திருக்கும் எங்கள் இமய வெற்பே! எவரின் எண்ண ஓட்டத்தையும் விஞ்சி நிற்கும் எங்களின் அற்புதத் தாயே! தங்கள் கனவு இனி நிறைவேறும். பாராளும் காலம் 10 ஆண்டுக் காலம் என்ன அளவு? பாராளும் காலம் தொலைவில் இல்லை அம்மா, அப்போது பத்து மாதங்களே போதும்.

நண்பகல் 12–00

2012–2013 ஆம் ஆண்டு, 14–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவே முதல் ஆண்டாகும். இதைக் கருத்தில்கொண்டு நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த நிதிநிலை அறிக்கையிலே துறைதோறும் ஒதுக்கப்பட்ட நிதி, செலவிடப்பட்ட தொகை, பயன்பெற்றோர் எண்ணிக்கை, இவ்வாண்டு அத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி அளவு ஆகியவை எனச் செப்புத் தகட்டில் செதுக்கப்பட்ட வரிகளாக மிளிர்கிறது.

நாடு சுதந்திரம் பெற்றபோது தமிழ்நாட்டின் மக்கள்தொகை ஒரு கோடி அளவுக்குள் இருந்தது. இந்த நாடு சுதந்திரம் பெற்றபோது தமிழ்நாட்டினுடைய மக்கள்தொகை ஒரு கோடி அளவுக்குள் இருந்தது. ஒரு கோடி மக்களுக்கே உணவு வழங்க வழியில்லாத நிலை அன்றைய நிலை. ரங்கூனிலே இருந்து அரிசி வருகிறதா, அமெரிக்காவிலே இருந்து கோதுமை, சர்க்கரை வருகிறதா என இறக்குமதி செய்யப்பட்ட காலம் அது. காலையிலே எழுந்தவுடன் கண்ணைக் கசக்கிக்கொண்டு கடற்கரையோரத்திலே கப்பல் வருகிறதா என்று காத்துக் கிடந்த காலம் அது. அந்தக் காலத்தை மாற்ற வித்திட்டது முதல் பசுமைப் புரட்சி. ஆனால், இன்று பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளது, பாசன நீரும் குறைந்துள்ளது, காவிரி நீருக்காக, முல்லைப் பெரியாறு உரிமைக்காக உச்ச நீதிமன்றப் படிக்கட்டுகளை அனுதினமும் மிதித்துப் போராடும் நிலையில் இன்றுள்ள 7 கோடி மக்களுக்கும் இன்பமுற உணவளிக்க உணவுப் பெருக்குத் திட்டத்தை, இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, முன்னெப்போதும் இல்லாத அளவில் வேளாண் துறைக்கு ரூ.3,804.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்'

என்ற முண்டாசுக் கவிஞன் பாரதியின் உயிர்மூச்சுச் சொல்லுக்கு, உயிர் கொடுக்கும்முகமாக அமைந்துள்ளது இந்த நிதிநிலை அறிக்கை. உலகத்தார்க்கே உணவளிக்கும் உழவர் பெருமக்கள் உளமார இதனை வரவேற்கின்றார்கள்.

'நீரின்றி அமையாது உலகு, அம்மா! நீர் இன்றி அமையாது அரசு'. அம்மா! நீங்கள் ஆளும்போதுதான் காவிரித் தாயின் கைவிலங்கு கழற்றப்படுகிறது. காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்கு இழைக்கப்பட்ட இன்னல்களைப் போக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு நடைபெறுகிறது. மேட்டூர் அணையின் திறப்பு ஜனவரி 28–இல் நிறுத்தப்படுகிறது, நீரிருப்பு வைக்கப்படுகிறது, இது கணக்குக் காட்டப்படுகிறது. கர்நாடக அணைகளிலிருந்து கோடைச் சாகுபடிக்கு நீர் திறக்கப்பட்டு அணை காலியாக்கப்படுகிறது. அடுத்து வரும் ஆண்டுக்கு தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிய நீரின்றி நாம் காத்துக் கிடக்கிறோம். இந்த அவல நிலையைப் போக்க உச்ச நீதிமன்றத்தில் புதிய வழக்கு ஒன்றைத் தொடுத்திருப்பது உரிமையை நிலைநாட்ட தாங்கள் எடுத்திருக்கும் உரிமைப் பிரகடனமாகவே இதைக் கருதுகின்றோம்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'அன்னையைத் தொழுவது அதனினும் நன்று' (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் நற்பண்புகளை, நீதிநெறிக் கருத்துகளை, கதைகளின் வாயிலாகக் குழந்தைகளின் மனதில் ஆழப் பதிந்திட சனிக்கிழமைதோறும் ஆன்மீக நீதிநெறி வகுப்புகளை முக்கிய திருக்கோயில்களில் நடத்திட ஆணையிட்டிருப்பது சங்கத் தமிழ் மரபினை, சங்க இலக்கியம் காட்டும் நெறிமுறைகளை இன்றைய சிறார்கள் மனதில் சிற்பமாக வடித்திட எடுத்திருக்கும் அற்புதத் திட்டம், இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது.

'காஞ்சிக்குப் போனால் காலாட்டிச் சாப்பிடலாம்', சிற்றூர் பகுதியிலே வழங்கும் சொல் இது. திருவரங்கப் பெருமாளை சேவித்தால் காலை முதல் இரவு 10 மணி வரை நாள்தோறும் சோறாம். (மேசையைத் தட்டும் ஒலி) அரோகரா என்று சொன்னால், அன்னமிடுவார்கள் அன்று! அரோகரா என்று சொன்னால் அன்னமிடுவார்கள் அன்று! எங்கள் அப்பன் ஆண்டியாய் நிற்கும் பழநியில் அனுதினமும் பகல் முதல் இரவு 10 மணி வரை சோறாம்;





பக்தர்களுக்குப் பயன்படும் திட்டம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றவர்தானே பிள்ளையின் பசி அறிவார். பசிக்கு அலறிய ஒரு பாலகன் ஞானசம்பந்தனுக்கு மட்டுமே பால் புகட்டினாள் பார்வதி. அம்மா, இந்த நிதிநிலை அறிக்கையில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியதால் பல இலட்சம் பக்தர்கள் பயனடைவார்கள். இனி நாளும் நிறைந்த வயிறோடு வாழ்த்துவார்கள் தாயே.

பிற்பகல் 12–05

மக்கள் நல்வாழ்வுக்கு மகத்தான திட்டம் தந்துள்ளார்கள் நம் அம்மா அவர்கள். முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டமிது. இது மக்களுக்கு மட்டுமே பயன்படும் திட்டம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி வழிநடத்திய புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றே சொன்னார்கள். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி போடும் திட்டங்கள் எல்லாம் பார்ப்பதற்கும், படிப்பதற்கும் நன்றாக இருக்கும். அதனை ஆராய்ந்து பார்த்தால் திட்டத்தின் பெரும் பகுதிப் பலன் அவரது குடும்பத்திற்கே போய்ச் சேரும் என்றுரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய ஆட்சியில் 2009–இல் காப்பீட்டுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. காப்பீட்டு நிறுவனத்திற்கு இரண்டு ஆண்டுக் காலத்திற்கு அரசு வழங்கிய தொகை ரூ.1,132.64 கோடி ஆகும். காப்பீட்டு நிறுவனம் பயனாளிகளுக்காக மருத்துவமனைகளுக்கு வழங்கிய தொகை ரூ.653.94 கோடி. அந்த நிறுவனத்திற்குக் கிடைத்த வருமானம் ரூ.478.74 கோடி. இந்த நிறுவனம் சென்னை வள்ளுவர் கோட்ட நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம் என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம். பிள்ளையோ பிள்ளை என்ற திரைப்படத்தை வெளியிட்ட நிறுவனத்தார் நடத்திய "ஸ்டார் அண்ட் ஹெல்த் அலையட் இன்சூரன்ஸ் கம்பெனி" என்ற நிறுவனம் இது. அந்த நிறுவனம்தான் அந்தக் காப்பீட்டுத் திட்டத்தை நடத்தியது. முந்தைய ஆட்சியின் காப்பீட்டுத் திட்டத்தை நடத்திய நிறுவனம் இது. இந்த நிறுவனத்திற்குக் கிடைத்த வருமானம் ரூ.478.74 கோடியை பங்கிட்டுக்கொண்ட பங்காளிகள் யார் யாரென வெளிச்சத்திற்கு வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

"திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது. அதைச் சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது. திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் சட்டம் தன் சாட்டையைச் சுழற்றத் தயங்காது." மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கும் முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனம் "யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்" நிறுவனம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்களின் வரிப் பணம் மக்களுக்காகவே செலவிடப்படுகிறது. இப்பணத்தில் கிடைக்கும் இலாபம் மீண்டும் அரசுக்கே செல்கிறது. எப்படிக் கிணற்றில் உள்ள நீரை விசை மோட்டார் மூலமாக மேல்நிலைத் தொட்டிக்கு ஏற்றி, தொட்டி நிறைந்தவுடன், வழிந்தோடும் நீர் வீணாகாமல் மீண்டும் கிணற்றுக்குள்ளே பாய்வதைப்போல, மக்களுடைய வரிப் பணம் ஏழை மக்களுக்கே போகிறது. அதிலே கிடைக்கும் வருமானம் மீண்டும் அரசுக்கே வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த அற்புதத் திட்டம்தான் அம்மாவின் திட்டம். இந்தப் பணம் எவருடைய கைக்கும், எந்தத் தனிப்பட்ட நபருக்கும் போய்ச் சேராது என்பது இந்த வரவு–செலவுத் திட்டத்திலே காட்டப்பட்டிருக்கிறது.

அம்மா! நீங்கள் நின்ற ஊர், வென்ற ஊர், பெரிய கோபுரத்தைத் தாங்கி நிற்கும் பேரூராம் திருவரங்கம். கொள்ளிடக் கரையிலே பழங்காலச் சிற்பமொன்று இன்றும் சிதிலமடைந்து நிற்கிறது. இக்கரையில் இருந்த பெண்ணொருத்தி அக்கரைக்குச் சென்று சுள்ளி விறகுகளைக் கற்றையாகக் கட்டி, கொள்ளிட மணற்பரப்பில் நடந்து வருவது போலவும், பச்சிளம் பாலகன் ஒருவன் சுடுமணல் வெப்பம் தாளாமல் தன் பிஞ்சுப் பாதங்களை தன் தாயின் மேல் பாதத்தில் வைத்திருப்பது போலவும் சிற்பமொன்று இருக்கிறது. 'பெண் ஒருத்தியாளும் நாள் எந்நாளோ அந்நாள்தான் தொல்லையெல்லாம் தீரும் நாள்' என்று பாவேந்தன் பாரதிதாசன் குறிப்பிடுகிறான். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவேதான் எங்கள் அறிவுக்குப் புலப்படாத வினாவிற்கு எல்லாம் இன்றைக்கு விளக்கம் கிடைத்திருக்கிறது.

மண்மகள் அறியா மலர்ப் பாதம் தங்களுடையது. இம்மாநிலத்தில் வாழும் பள்ளிப் பாலகர்களும் இனி மண்ணளந்து நடக்காமல், அம்மா! நின் புகழளந்து நடக்க ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் விலையில்லாக் காலணிகள் வழங்கும் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.





*(மேசையைத் தட்டும் ஒலி)* 81 இலட்சம் பிள்ளைகள் பயன்பெறுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் திருநங்கைகளுக்கும் நல வாரியம் அமைக்க ரூ.1 கோடியை உவந்து அளித்துள்ளீர்கள்.

புதிய சிந்தனை கொண்ட எங்கள் செந்தமிழ்நாட்டின் சிம்புட் பறவையே, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களால் மட்டும்தான் முடியும். திருநங்கைகள் தங்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்க அவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய மாநிலச் சட்டமன்றங்களிலும் நாடாளும் மன்றங்களிலும் ஒரு நியமன உறுப்பினர் உள்ளே அமர விருப்பம் கொண்டுள்ளார்கள். விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட எங்கள் தலைவியே, தங்கள் பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

*பிற்பகல் 12–10*

நித்தம் நித்தம் புதிய திட்டங்களைத் தந்து ஏழ்மை அகல, செழுமை சேர, தொலைநோக்குத் திட்டங்கள் ஏராளம் ஏராளம் கொண்ட நிதிநிலை அறிக்கையை மனதார வரவேற்கின்றேன். தனி நபர் வருமானம் பெருகவேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் போற்றிப் புகழுகின்றேன்.

தங்களின் நிதிநிலை அறிக்கையை நல்லோர்கள் பாராட்டுகிறார்கள். நடுநிலை நாளேடுகள் போற்றிப் புகழ்கின்றன. நயவஞ்சகக் கூட்டத்தார் பொருமிப் பிதற்றுகிறார்கள். "போற்றுவோர் போற்றட்டும்; புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும்; என் கடன் பணி செய்து கிடப்பதே; எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்" என்ற வைர வரிகளுக்கு உயிரூட்டி வருகிறீர்கள்.

"நல் ஆவின் பால் முழுவதும் கன்றிற்கில்லை. நறும் பூவின் மணம் முழுவதும் சோலைக்கில்லை. நெல்லாகும் கதிர் முழுவதும் வயலுக்கில்லை. நிறைகின்ற நீர் முழுவதும் குளத்திற்கில்லை. தீஞ்சுவைக் கனி முழுவதும் மரத்திற்கில்லை. பண்நரம்பின் இசை முழுவதும் யாழுக்கில்லை. எல்லாமே பிறருக்கு உழைக்கக் காணுகின்றேன்."

தன் வாழ்வும் பிறருக்கே என உழைத்து எந்நாளும் பணியாற்றும் எம் அன்னையே, அருந்தமிழே, அன்பின் பெருக்கே, அறிவின் ஊற்றே, இவ்வையகம் வாழும் வரை நீங்கள் வாழவேண்டும்.

[திரு. கு.ப. கிருஷ்ணன்] [2012 மார்ச் 28

கிரேக்க நாட்டின் வரலாற்றுச் செய்தி ஒன்று என் நினைவிற்கு வருகிறது. கிரேக்க நாட்டை ஆண்ட இரண்டாம் பெலிக்ஸ் என்ற மன்னன் தனக்கொரு ஆண் மகன் பிறந்திருக்கின்றான் என்ற செய்தியை கிரேக்க நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்றான். மக்களெல்லாம் மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்த மகிழ்ச்சியை அறிந்த அந்நாட்டு அறிஞன் அரிஸ்டாட்டில் ஒரு வாழ்த்துச் செய்தியை மன்னருக்கு எழுதி அனுப்புகின்றான். வாழ்த்துச் செய்தி மன்னர் கையிலே கிடைக்கின்றது. மன்னர் வெகுண்டெழுகின்றார். காவலர்களை அழைத்து, அரிஸ்டாட்டிலை அழைத்து வரச் சொல்கின்றார். வந்தார் அரிஸ்டாட்டில். 'நான் என்ன தவறு செய்தேன்' என்று கேட்கின்றார். மன்னர் சொல்கின்றார், 'அரிஸ்டாட்டில் அவர்களே எனக்கு ஒரு மகன் பிறந்திருக்கின்றான் என்பது எனக்கு மகிழ்ச்சியில்லை. ஏனென்றால் அரிஸ்டாட்டில் என்ற அறிஞன் வாழ்கின்ற காலத்தில் எனக்கு மகன் பிறந்திருக்கின்றான். அதுதான் எனக்குப் பெருமை. என் மகனுக்குப் பெருமை. இந்த மண்ணுக்குப் பெருமை' என்று உரைக்கின்றார்.

அம்மா! நீங்கள் வாழ்கின்ற காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம். அதுதான் எங்களுக்குப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் எங்களைப் பெற்றவர்களுக்குப் பெருமை. இந்த மண்ணுக்குப் பெருமை என்று கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

***திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் பேசுவதற்குக் காரணமாக இருந்த, நான் மட்டுமல்ல, உங்களை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள், சமூகத்தில் தலைநிமிர்ந்து நடப்பதற்கும், கல்வி கற்பதற்கும், இந்த அவைக்கு வருவதற்கும் காரணமாக இருந்த, அடிப்படையாக இருந்த அவரை நினைவுகூர்வது காலத்தின் கட்டாயம். காரணம், இன்றைக்கு ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இருளாக்கியவர்கள் அவர்கள். (குறுக்கீடுகள்) அதை ஒளிமயமான தமிழகமாக மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பவர்கள் அம்மா அவர்கள். நீங்கள் அந்த உண்மையை ஒப்புக்கொண்டதற்கு நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குத்தலாக அவர்களுடைய தலைவர்கள் வெளியில் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சொல்கின்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். இது கடுமையான கருத்து. ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்து. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைச் சொன்ன அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முதலில் சொன்ன அந்த சொற்றொடர்கள் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல இதுபோன்ற பேச்சுக்கள் தொடருமேயானால் உங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை எதைப் பேசவேண்டும். எதை எதைப் பேசக்கூடாது என்று நீங்கள் முன்னாலேயே முன்னுதாரணத்தைக் கொடுத்துவிட்டால். . . (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை எதைப் பேச வேண்டும், எதை எதைப் பேசக்கூடாது என்று விதியில் இருக்கிறது. அவற்றை எல்லாம் படித்துவிட்டு வந்து சபையில் பேசவேண்டும். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள், (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 மார்ச் 28

ஏன் அவசரப்படுகிறீர்கள்? ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? பேசுங்கள், நீங்கள் என்ன பந்து வீசுகிறீர்களோ, அதே பந்து உங்களைத் திரும்பத் தாக்கும். அதை மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

***திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** திராவிடத்தால் பயன் பெற்று, வாழ்வு பெற்று, முகவரி பெற்றவர்கள் இன்றைக்குத் திராவிடத்தை மறந்தாலும், அந்தத் திராவிடத்தின் தந்தை இனப் பகலவன் பெரியாரை நினைவுகூர்வது எங்கள் கடமை. அவர்தம் வழித் தோன்றலாய் போராடும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரைக் குறிப்பிட்டுப் பேசுகிறீர்கள்?. நீங்கள் இப்படியெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் பட்ஜெட் பற்றி பேசாமல் திராவிடம், அது, இது என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** பெரியாரைப் பற்றிப் பேசுகிறேன். பெரியாரைப் பற்றிப் பேசக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் அனுமதிக்க முடியாது. அவைக்கென்று சில மரபுகள் இருக்கின்றன. நீங்கள் ஒரு இனத்தின் அடிப்படையில், ஒரு மதத்தின் அடிப்படையில், ஒரு ஜாதியின் அடிப்படையில் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. Please, sit down. No, I will not allow. நீங்கள் வெளியில் போய் மேடையில் பேசுங்கள். ஜாதி, மதம், இனம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சபை இது. நீங்கள் ஒரு மொழியையோ, ஒரு இனத்தையோ, ஒரு மதத்தையோ பழிக்கின்ற எந்த ஒரு பேச்சையும் என்னால் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய பகுத்தறிவைப் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு அருகதையே இல்லை. மஞ்சள் துண்டை கழுத்திலே போட்டுக்கொண்டு இருக்கிற இவர்களுக்கு. . . (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியாரைப் பற்றிப் பேசுங்கள், அண்ணாவைப் பற்றிப் பேசுங்கள். அதை விட்டுவிட்டு, நீங்கள்



2012 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

ஏன் இனத்தைப் பற்றி பேசுகிறீர்கள்? இனம், மதம், மொழி, ஜாதி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதுதான் இச்சபை. அதனுடைய கௌரவத்தை நான் கட்டிக் காக்க வேண்டும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** பெரிய புராணத்து வரிகளாம் . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:**

"என்றும் உள்ள இந்நகர் கலியுகத்தில்
இலங்கு வேற் கரிகாற் பெருவளத்தோன்
வன்திறற் புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை"

என்ற வரிகளுக்கேற்ப விளங்குகின்ற எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒல்காப் புகழ் வள்ளுவர் வாக்கிற்கேற்ப,

"வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும்"

என்ற குறளுக்கேற்ப செயல்திறனால் பெருமை பெற்று, உயர்ந்த வினைத் திட்பத்தால் நாட்டரசால் மதிக்கப்படுவான் என்கிற வாக்கியத்திற்கேற்ப தம் செயல் திறத்தால், திறமையால், தியாகத்தால் படிப்படியாக உயர்ந்த நிலைக்கு வந்தாலும், தொடர்ந்து பணியாற்றுகின்ற அவருடைய பணியை இன்றைக்கு அமெரிக்க நாட்டு கெண்டகி மாநில அரசு மதித்திருக்கிறது. கெண்டகி கர்னல் விருது வழங்கியிருக்கிறது. அவரை வணங்குகின்றேன். எங்களது அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் ஒரு காலத்தில் வறண்ட மாவட்டங்கள். அவற்றை முன்னேற்றப் பாதையில் அடிபோட வைத்தவர் எங்கள் தலைவர் கலைஞர். அரியலூருக்கென்று தனி மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், குன்னத்திலே அரசு மருத்துவக் கல்லூரி, அரியலூரிலே அரசுப் பொறியியல் கல்லூரி, பெரம்பலூரில் அரசுக் கலைக் கல்லூரி, பெரம்பலூரிலே பாலிடெக்னிக், அரசு ஐ.டி.ஐ.–கள் இரண்டு என்ற கல்விக்கான நிறுவனங்களையெல்லாம் வழங்கி, அதேபோல, மதனத்தூர்–நீலத்தநல்லூர் பாலத்தை எங்களுக்கு வழங்கி, பருத்திக்கு ஒரு ஆராய்ச்சி நிலையம், இப்படி அந்த வறண்ட மாவட்டத்தை உயர்த்துவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய

[திரு. எஸ்.எஸ். சிவசங்கர்] [2012 மார்ச் 28

ஆட்சிக் காலத்தில் வழங்கிய திட்டங்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆ. ராசா அவர்களை விட்டுவிட்டார்கள். அவருடைய தலைவர் உருவாக்கியவர்கள் பட்டியலில் திரு. ஆ. ராசா அவர்களை விட்டுவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மாவட்டத்தைப் பற்றி சொல்லியதால் மாண்புமிகு அமைச்சர் குறிப்பிடுகிறார்கள். (சிரிப்பு) அவர் சொல்வதில் ஒன்றும் தவறில்லை. அந்த மாவட்டத்தைப் பற்றி சொன்னதால் அமைச்சர் குறிப்பிடுகிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** நன்றியை மறக்கிறவர்கள் நாங்கள் கிடையாது. வரலாற்றை மறைக்கிறவர்களும் நாங்கள் கிடையாது. இந்தத் திட்டங்களையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களுக்குத் தருவதற்கு உற்ற உறுதுணையாக இருந்த, எங்கள் மாவட்டம் முன்னேறுவதற்குக் காரணமாக இருந்த முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் ஆ. ராசா அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிற கருத்து சரி. பல வரலாறுகள் காலத்தின்போக்கில் மாறும்போது உண்மை வெளிவரும்.

பிற்பகல் 12—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதத்தைத் திசைதிருப்பிக்கொண்டு போகாதீர்கள், பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்பிற்குரிய இந்த அவையிலே இரண்டாம் முறையாகப் பணியாற்ற வாக்களித்து, வெற்றி பெறச் செய்த குன்னம் தொகுதியின் எம்மக்களுக்கு எனது பணிவான நன்றியை இந்த நேரத்திலே சமர்ப்பிக்கின்றேன்.

நிதிநிலை அறிக்கை – ஒரு நிதிநிலை அறிக்கை எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு உதாரணம் – 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள். அந்த அறிக்கைகளிலே புதிய அறிவிப்புகள் இருக்கும். (குறுக்கீடு)



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச்சைத் தொடருங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறந்த திட்டங்கள் இருக்கும். எதிர்கால தலைமுறைக்கான தொலைநோக்குத் திட்டங்கள் இருக்கும். அந்தந்த ஆண்டுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் இருக்கும். புதிய கல்லூரி பற்றிய அறிவிப்புகள் இருக்கும். பழைய திட்டங்களை விரிவுபடுத்துகின்ற அறிவிப்புகள் இருக்கும். அப்படி அறிவிக்கின்ற திட்டங்களையெல்லாம் செயல்படுத்துகின்ற திறன் இருக்கும். அப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள்தான் தமிழகத்திலே இருந்த குடிசை வீடுகளையெல்லாம் கான்கிரீட் வீடுகளாக மாற்றுகின்ற கலைஞர் வீடு வழங்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திலே ஆறு இலட்சம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் தற்போது பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர் அமருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அறிவித்த திட்டங்களையெல்லாம் செயல்படுத்தியிருக்கிறார்கள் எங்களுடைய தலைவர் என்று சொல்கிறார். அந்தச் செயல்பாடுகளைப்பற்றி சங்கரன்கோவில் இடைத்தேர்தலிலே அவருடைய தலைவரே பேசியிருக்கிறார். இந்தத் தேர்தல் இடைத்தேர்தல் அல்ல; 'எடைத் தேர்தல்'; எங்களுடைய ஆட்சிக் காலத்தையும், இப்பொழுது நடந்துகொண்டிருக்கின்ற அம்மாவினுடைய ஆட்சிக்காலத்தையும் எடை போட்டுப் பார்த்து மக்கள் தீர்ப்பளிக்கின்ற தேர்தல் என்று சொல்லியிருக்கிறார்கள். மக்கள், உங்களுக்கு ஜாமீன் தொகையைக்கூட இழக்கச் செய்து தீர்ப்பளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் கொடுத்த திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி இருந்தால் உங்களுக்கு ஜாமீனாவது கிடைத்திருக்குமல்லவா? அதுமட்டுமல்ல; உங்களுடைய குற்றச்சாட்டான இன்னொன்றையும் சொல்கிறேன். அறிவித்த திட்டங்களையெல்லாம்——கல்லூரிகளெல்லாம் தொடங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலேகூட தேர்தல் நோக்கத்திற்காக கடைசி நேரத்திலே,

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 மார்ச் 28

இறுதியாக மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்துவிட்டு அரசாணைகூட வெளியிடாமல், அவசரகோலமாக அடிக்கல்கூட நாட்டினார்கள். அதாவது, அறிவிப்பு மட்டுமே இருந்ததே தவிர, அதற்குரிய நிதியொதுக்கீடு இல்லை; அதற்குரிய அரசாணை வெளியிடப்படவில்லை; அவசரகோலமாக அள்ளித் தெளித்ததைப்போல ஆங்காங்கே அறிவித்துவிட்டு, எதையும் செயல்படுத்தாமல் விட்ட ஆட்சிதான் உங்களுடைய ஆட்சி. அதனுடைய விளைவையும் மக்கள் தங்கள் தீர்ப்பாக உங்களுக்கு அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுத் திட்டத்தைப் பற்றி அவர் சொன்ன கருத்திற்காக (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நீங்கள் ஏதாவது கருத்து சொல்ல விரும்பினால், உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினரிடம் சொல்லுங்கள். அவரிடம் நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னால், அவர் அக்கருத்தை தெரிவிக்க வசதியாக இருக்கும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) Please, sit down.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தலைவர் கொண்டுவந்த திட்டத்தினுடைய சிறப்புகளைப் பற்றிச் சொல்லி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அதைச் செய்யவில்லை என்று சொன்னார். அதற்கு பதில் சொல்ல வேண்டியது, அந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே என்னுடைய கடமை. (குறுக்கீடு) என்னுடைய கடமை. (குறுக்கீடு) நான் பேரவைத் தலைவரைப் பார்த்து பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். Please sit down. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், இதுமுறையல்ல, please, sit down.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அவை நாகரிகத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இது முறையல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல என்று கூறுகிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** நான் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் என்னைப் பார்த்து பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது, அவர் உரையாற்றுவதைக் கேளுங்கள். அதற்குப் பிறகு ஏதாவது கருத்து இருந்தால், உங்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும்போது என்னைப் பார்த்துப் பேசுங்கள். அதை விட்டுவிட்டு, அப்போதைக்கப்போது எழுந்திருக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவர் கடந்த ஆட்சிக் காலத்திலே வீடு கட்டிக் கொடுத்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொடுத்து, நாட்டிலுள்ள ஏழை மக்களை மேலும் கடன்காரர்களாக்கிவிட்டு சென்றுவிட்டார், அவருடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தயவுசெய்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இவ்வாறு எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுமையாக நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கிறார். அந்தப் பதிலை நீங்கள் கேட்டுவிட்டு (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் அவரது கருத்தைச் சொல்லட்டும். ஆனால், வாதம் அதற்குள் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்). உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினருக்கு நான் பேச வாய்ப்பு கொடுக்கவில்லை

*[பேரவைத் தலைவர்]* [2012 *மார்ச்* 28

*என்றால் நீங்கள் என்னைக் கேட்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றிய பிறகு, உங்கள் உறுப்பினர் பேசும்போது கருத்தைத் தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டுமே! நீங்கள் உட்காருங்கள். உங்கள் உறுப்பினர்தானே பேசுகிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன் நீங்கள் அடிக்கடி எழுந்து நிற்கிறீர்கள். உங்களுடைய நடவடிக்கை இன்றைக்குப் பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக வெளிநடப்புச் செய்ய வேண்டும் அல்லது வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வகையில் செயல்படுகிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) காவலர்கள், திரு. அன்பழகனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதை நான் அனுமதிக்க முடியாது. திரு. அன்பழகனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)*

*(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகனை அவைக் காவலர்கள் வெளியேற்றினர்.)*

*இதை நான் அனுமதிக்க முடியாது. நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். உங்கள் உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பாக பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தானே பேசிக் கொண்டிருக்கிறார்? உங்களுடைய உறுப்பினரிடம் சொல்லி, உங்களுடைய கருத்தைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் எழுந்து நிற்பது எந்த விதத்தில் நியாயம்?*

*பிற்பகல் 12—25*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களிடத்தில் சரியான பதில் இல்லாத காரணத்தால், எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜெ. அன்பழகனைப் பொறுத்தவரையில் அவருடைய பெயர் இன்றைக்குச் செய்தித் தாளில் வரவேண்டும். அதற்கேற்றவாறு இன்றைக்கு அவருடைய நடவடிக்கை இருக்கிறது. (குறுக்கீடுகள்)*



2012 *மார்ச்* 28]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)* நான் நின்று கொண்டிருக்கும்போது *(குறுக்கீடு)* நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) நான் உங்களுக்கு பிறகு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தரமாட்டேன் என்று சொல்லவில்லை.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையை முடித்துவிடட்டும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லக்கூடிய இடத்தில் நான் நின்றுகொண்டிருக்கிறேன். பதில் சொன்னபிறகு, மாண்புமிகு உறுப்பினர் அதற்கான பதில் சொல்லட்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மைதீன்கான், திரு. ஜெ. அன்பழகனைப் போல் நீங்களும் அவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைக்கு ஆளாக வேண்டுமா?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவர் கொண்டுவந்த வீட்டு வசதித் திட்டத்தால் இலட்சக்கணக்கான ஏழை மக்கள் மேலும் கடன்காரர்கள் ஆனார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு புதிய திட்டத்தை *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும், எந்தத் தலைவர்களுக்கும் செயல்படாத அந்தச் சிந்தனை ஒரு இலட்சத்து

80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சோலார் விளக்குகளுடன்கூடிய திட்டத்தைத் தீட்டி, செயல்முறைப்படுத்தி, 60 ஆயிரம் வீடுகள் இந்த மார்ச் திங்களில், அதாவது புரட்சித் தலைவியினுடைய அரசு ஓர் ஆண்டு நிறைவு பெறுகின்ற மே திங்கள் 15 ஆம் நாள் 60 ஆயிரம் வீடுகளையும் புரட்சித் தலைவியினுடைய கரங்களால் ஒப்படைக்கப்படுகின்ற நிகழ்ச்சி நடைபெறவிருக்கின்றது. அந்த வீட்டில் எல்லா வசதிகளும் இருக்கின்றன. அந்த வீட்டுப் பயனாளிகளுக்கு எந்தவிதக் கடனும் இல்லை, மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்கள் வந்து supervise பண்ணுகிறார்கள். ஒரு செங்கல்லைக்கூட அவர்கள் எடுத்து வைக்கவில்லை. கட்டுகிற வீட்டை அவர்கள் வந்து supervise பண்ணுகிறார்கள். இதைப் பார்த்து இப்படிப் பண்ணுங்கள், அப்படிப் பண்ணுங்கள் என்று சொல்கிறார்கள். அமைதியாக சந்தோஷமாகப் போகிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக எல்லோரும் கடன்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசக்கூடிய பேச்சிலே குறுக்கிட்டு சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்குள் நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. ஆனால், அவர் பேசுகின்றபோது முன்னாள் முதலமைச்சருடைய பெயரை அவர் இங்கே குறிப்பிட்டுச் சொல்லி பேசியதைத்தான், அவர் மட்டுமல்ல அ.தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது அந்தப் பெயரை எடுத்துச் சொன்னார். அதைத்தான் நம்முடைய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் அப்படிப் பேசலாமா என்று கேட்ட காரணத்தால், அவருக்கு நீங்கள் அனுமதி தராத காரணத்தால், தொடர்ந்து அதை வலியுறுத்திய காரணத்தால் அவரை வெளியேற்றச் செய்திருக்கிறீர்கள். எனவே, நான் கேட்க விரும்புவது இப்படி முன்னாள் முதலமைச்சருடைய பெயரைச் சொல்லக்கூடாது என்பது எல்லாம், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றபோதுகூட இங்கே எதிரே அமர்ந்திருக்கக்கூடிய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சியினுடைய





துணைத் தலைவராக இருந்தார்கள். அப்போது இதே பிரச்சினை வந்தது. அப்போது இருந்த சபாநாயகர் அவர்களால் யாருடைய பெயரையும் சொல்லாமல், முதலமைச்சராக இருந்தால் முதலமைச்சர் என்றும், முன்னாள் முதலமைச்சராக இருந்தால் முன்னாள் முதலமைச்சர் என்றும் சொல்லலாம் என்று, ஒரு மரபைக் கடைபிடிக்கலாம் என்று அன்றைக்கு ஒரு தீர்ப்பு சொல்லப்பட்டது. எனவே, அந்த முறையைக் கடைபிடித்தால் சிறப்பாக இருக்கும். ஆனால், இந்த முறைதான் கடைபிடிக்க முடியும் என்று சொன்னால், எல்லோருக்கும் வழங்கக்கூடிய அந்த வாய்ப்பை சபாநாயகர் அவர்கள் வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க.–வினுடைய துணைத் தலைவர் அவர்கள், இங்கே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே எந்த முதலமைச்சருடைய பெயரையும் சொல்லக்கூடாது என்றும், இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சருடைய பெயரையும் சொல்ல வேண்டியதில்லை, முன்னாள் முதலமைச்சருடைய பெயரையும் சொல்ல வேண்டியதில்லை, பெயரைச் சொல்லாமல் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று ஒரு proceedings கொடுக்கப்பட்டது என்று நினைவுபடுத்தினார். ஆனால், அவர்கள் கொடுத்த அந்த proceedings–ஐ, அவர்களுடைய அமைச்சர்கள் கடைபிடித்தார்களா என்பதை அவருடைய மனசாட்சிக்கேற்ப நான் கேட்டுக்கொள்கின்றேன். அத்தனை பேரும் வரிக்கு வரி அம்மா அவர்களுடைய பெயரைச் சொல்லி அங்கே பேசினார்கள், சபைக் குறிப்பிலே இருக்கிறது. இதையெல்லாம் மூடி மறைக்க முடியாது. நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். திரு. துரைமுருகன் பேச்சுக்குப் பேச்சு சொல்வார், திரு. பொன்முடி பேச்சுக்குப் பேச்சு சொல்வார். அத்தனை அமைச்சர்களும் சொல்வார்கள். அதற்குத்தான் அன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்களே தவிர – நீங்கள் சொல்வதை நீங்களே கடைபிடிப்பதில்லை. அப்படியென்றால் அதற்குத்தான் எதிர்ப்புத் தெரிவித்தார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிக்க வேண்டாம்.

[2012 மார்ச் 28

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நடந்தது உண்மைதான். நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் குறிப்பாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு துணைத் தலைவராக இருந்தபோதும், அதுபோல் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு அந்த எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தபோதும் அப்போது அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டும் என்று வாதிட்டு, அது நீக்கப்பட்டிருக்கிறது. அதுதான் உண்மை. எனவே அதையும் நான் அவைத் தலைவருக்கு நினைவுபடுத்துகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு. இது முறையல்ல. இது முறையல்ல. Please sit down. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** எங்களது தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை ஊராட்சிகளுக்கும் நிதி வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதேபோன்றுதான் உயர் கல்வித் துறையாக இருந்தாலும், விவசாயத் துறையாக இருந்தாலும், மக்கள்



2012 மார்ச் 28] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

நல்வாழ்வுத் துறையாக இருந்தாலும் பல்வேறு திட்டங்கள் அந்த நிதிநிலை அறிக்கையிலே வழங்கப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கைகளை இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை புரட்டிப் பார்த்தால் நன்றாக இருக்கும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. மார்க்சும், ஏஞ்செல்சும் இங்கிலாந்தில் கூடி கம்யூனிஸ்டு கட்சிக்கான அறிக்கையைத் தயாரித்தார்கள். அதுதான் Manifesto of Communism.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. சிவசங்கர். மாண்புமிகு அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள். உங்களுக்கு பிறகு வாய்ப்பு கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைய நிதிநிலை அறிக்கையைத் திருப்பிப் பார்த்தால் தெரியும் என்று சொன்னதற்காகத்தான் எழ வேண்டிய ஒரு சூழ்நிலை வந்தது. இல்லையென்றால், அவருடைய கருத்தைச் சொல்லட்டும் என்று நாங்கள் அமைதியாக இருந்திருப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் குறுக்கீடு வராத மாதிரி பேசினால் உங்கள் பேச்சில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறுக்கிடப்போவது இல்லை.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அந்த நிதிநிலை அறிக்கையைத் திருப்பிப் பார்த்த பின்புதான் அது தவறான நிதிநிலை அறிக்கையாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு புதுமையான நிதிநிலை அறிக்கையை இப்போது கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில்தான் முன்னேற்றம் அடைவதற்கு நிதியை ஒதுக்கினார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் – THAI திட்டம். இந்த நிதிநிலை அறிக்கையில் 750 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். குக்கிராமங்களுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிதான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து 5 ஆண்டுகளுக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் – குடி தண்ணீர், சாலை வசதி, மின்சார

[திரு. கே.பி. முனுசாமி] [2012 மார்ச் 28

வசதி இவை அனைத்தும் வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே 750 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இன்று பழைய நிதிநிலை அறிக்கையைத் திருப்பிப் பார்க்க வேண்டும் என்று சொன்னார். நீங்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே போட்ட நிதிநிலை அறிக்கையைத் திருப்பிப் பார்த்துச் சொல்கிறேன். நீங்கள் கல்லூரியே திறக்கவில்லை, திறக்கவில்லையென்று சொல்கிறீர்கள். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் அரசு மற்றும் கலைக் கல்லூரிகள் எத்தனை திறந்திருக்கின்றீர்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், நீங்கள் மொத்தமாக பத்தே பத்து அரசுக் கலைக் கல்லூரிகளை மட்டும்தான் திறந்தீர்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்தவுடனே கடந்த ஆண்டு மட்டும் 11 கலைக் கல்லூரிகளை கிராமப்புறங்களில் ஏழை எளிய மாணவர்களுக்காகத் திறந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** அது நாங்கள் கொண்டு வந்த திட்டம். எங்களுடைய அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுடைய தொகுதிக்கு வழங்கப்பட்ட நிதி அது. (குறுக்கீடு) குன்னத்திலே கொடுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியை நீக்கி, 100 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டதை நிறுத்தியிருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) குற்றம் சொன்னால் மட்டும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** அவர் என்னைப் பார்த்து பேசினார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு, please sit down. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)



2012 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, திட்டங்களை அறிவித்துவிடலாம். சொல்வது பெரிதல்ல. அதனைச் செயல்படுத்த வேண்டும். ஆகவே, செயல்படுத்துகிற தலைவி நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Marx and Angels இங்கிலாந்தில் கூடித்தான் கம்யூனிஸ்டு கட்சிக்கான அறிக்கையைத் தயாரித்தார்கள். அதுதான் Manifesto of Communism. ஆனால், அந்த அறிக்கை உயிர் பெற்றது 70 ஆண்டுகளுக்குப் பிறகு, ரஷ்யாவிலே கம்யூனிஸ்டு ஆட்சிக்கு வந்த பிறகுதான். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் 2006–லே கொடுத்த தேர்தல் அறிக்கைதான் மற்ற கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை ஒட்டியே அறிவிப்புகள் வழங்கப்பட்டன. அதேபோன்றுதான், தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்குக் கொடுத்த திட்டங்களை விரிவுபடுத்துவதும், அதற்கு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ‘தாய்’ என்று பெயர் மாற்றுவதுமாக, தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தத் திட்டத்திற்கெல்லாம் தாயாக இருக்கிறார். எனவே, அவரை மறந்துவிடக் கூடாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே–சரி உங்களுக்குப் பிடித்தமாதிரி பேசுகிறேன். பணிவின் உருவாய், கனிவின் மறுவாய், அன்பின் இருப்பாய், பண்பின் உறுப்பாய், விசுவாசத்தின் வடிவாய் விளங்கும், தலைவர் கலைஞர் அவர்களால் பச்சைத் தமிழன் என்று அழைக்கப்பட்ட அன்பிற்குரிய அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்–பிடித்திருக்கிறதா? (சிரிப்பு) தனது தலைமையிடம் காட்டும் விசுவாசத்தை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், தி.மு.க. எதிர்க் கட்சியாக இருக்கும்போதெல்லாம் செய்த

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 மார்ச் 28

வேலையை இப்போது திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். திரு. சிவசங்கராக நீங்கள் நின்றுகொண்டு பேச வேண்டும். 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக' (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சிவசங்கர் அவர்கள் என்னைப் பற்றி அவர் தலைவர் சொன்னதாக இங்கே சொன்னார்கள். அதாவது, நான் அரசியலுக்கு வந்ததற்குப் பின்னால் நான் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் கடந்த சட்டமன்றத் தொடரிலேயே விளக்கியிருக்கிறேன். மீண்டும் இந்தப் பிரச்சினைக்குள் நீங்கள் போகக் கூடாது. இதற்கு நீங்கள் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** இல்லை. நான் தவறாகச் சொல்லவில்லை. அவர் சொன்னதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் உரைக்கு full stop வையுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** அவர் சொன்னதைத்தான் சொன்னேன். தவறாக நான் சொல்லவில்லை. பணிவின் உருவாய், கனிவின் மறுவாய், அன்பின் இருப்பாய்–அப்படித்தான் சொன்னேன். அதுபோல காட்டுகின்ற விசுவாசத்தை மக்களுக்கும் காட்ட வேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்த்தார்கள். அதன்படி அவர் போட்டிருக்கின்ற அந்த நிதிநிலை அறிக்கை வெற்றிக் களிப்பிலே ஒரு வெண்குதிரையாக வரும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். நாங்கள்கூட எதிர்பார்த்தோம். கடந்த முறை போட்டதைப் போன்று வெள்ளை நிறத்தைப் பூசிய ஒரு குதிரையாகவாவது வரும் என்று பார்த்தோம். அப்படியும் இல்லை. இப்படியும் இல்லை தறி கெட்ட வரிக்குதிரையாக இந்த நிதிநிலை அறிக்கை இன்று ஓடிக்கொண்டிருக்கிறது. நாட்டு மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து வருத்தத்தில்தான் இருக்கிறார்கள். எனவே, அந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற குற்றத்தைச் சொன்னால் உடனே தவறு என்று சொல்கிறீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே மட்டுமல்ல. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உரையை முடித்துவிடுங்கள்.



2012 மார்ச் 28]

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** சரி. உங்கள் முதலமைச்சர் சொன்ன கருத்துக்கு எங்கள் உறுப்பினர்கள் விளக்கம் அளிக்கவேண்டும் என்று சொன்னதற்கு, பேசுகின்ற உறுப்பினர் சொல்லட்டும் என்று சொன்னீர்கள். அந்த விளக்கத்தினைச் சொல்லவாவது எங்களை விடுங்கள். பட்ஜெட்டைப் பற்றிப் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை. உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள். (குறுக்கீடு) சரி, திரு. சிவசங்கர் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மைக் வந்தால்தானே பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போதும். தினமும்தானே பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்!

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையை ஆரம்பிக்கின்றேன். மேலூரிலே சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை வட்டக் கழகச் செயலாளராக்கி, நகர்மன்ற உறுப்பினராக்கி, எம்.ஜி.ஆர். இளைஞரணியினுடைய மாநிலச் செயலாளராக ஆக்கி, 3 முறை தொடர்ந்து 2001–லிருந்து 2011 வரை 3 முறை அந்தத் தொகுதியில் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தும், என் வெற்றிக்காக அந்தத் தொகுதியிலே வந்து பிரச்சாரம் செய்து என்னை வெற்றிபெறச் செய்த தாயே, என் உயிர்நாள் உள்ளவரை, என் உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும்வரை, புரட்சித் தலைவி அம்மா, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கோஷத்தோடு சாதாரணத் தொண்டனாக இருந்து, அம்மாவிற்கு விசுவாசமுள்ள தொண்டனாக இருந்து செயல்படுவேன் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2001–2006 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது கடைசி நேரத்தில் என்னுடைய மேலூர் தொகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று அம்மா அவர்களுக்குக் கோரிக்கை

*[திரு. ஆர். சாமி]* [2012 மார்ச் 28

வைத்தேன். அம்மா அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு ஆவன செய்யச் சொல்லி ஆணையிட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் வந்தது. இங்கே இருக்கின்றாரே, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் இங்கு இருக்கிறார், துணை முதல்வராக இருந்தவர். அவர் அப்போது சொன்ன காரியம் என்னவென்றால், முதலாண்டு பட்ஜெட் கூட்டத்திலேயே நான் அதைப்பற்றிப் பேசியபோது, 'இந்த ஆண்டு இந்தத் திட்டம் நிறைவேறும்' என்று சொன்னார். அடுத்த ஆண்டு பேசுகின்றபோது, 'இந்த ஆண்டு நிறைவேறும்' என்று சொன்னார். அடுத்து, மூன்றாவது ஆண்டு பேசுகின்றபோதும், 'இந்த ஆண்டு நிறைவேறும்' என்றார். நான்காவது ஆண்டும் கேட்டபோது, 'இந்த ஆண்டு நிறைவேறும்' என்றார். 5 ஆண்டுக்காலமாக காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, 'தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்காத பாவி' என்று கிராமத்திலே சொல்வார்கள். அதைப்போல, என்னுடைய தொகுதி மக்களுக்கு, தவித்த மக்களுக்கு தண்ணீர் கொடுக்காமல் இழுத்தடித்த ஆட்சி கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–40*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, இந்த மேலூர் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகப் பணியைத் தொடங்க ஆணையிட்ட அன்னையே! *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் மேலூர் தொகுதி மக்கள் சார்பாகக் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலூர் தொகுதி மக்கள் சார்பாகவும், மதுரை கிழக்கு தொகுதி மக்கள் சார்பாகவும், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும், திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும், சோழவந்தான் தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும் அம்மா அவர்களுக்குக் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எப்போது தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் தமிழ்நாட்டைக் குழிதோண்டி புதைத்துவிட்டு, கஜானாவைக் காலி செய்துவிட்டு, தன்னுடைய குடும்பத்தை மட்டும் வளர்ச்சிப் பாதையிலே முதல்வர் கொண்டு போவார். ஆனால், அம்மா அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு, ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத்



2012 மார்ச் 28] *[திரு. ஆர். சாமி]*

தயார் செய்து, சிக்கன நடவடிக்கையிலே, பின்காலங்களிலே உள்ள வளர்ச்சிப் பணிக்கு அம்மா அவர்கள் தமிழகத்தை முன்னேற்றிச் செல்வார் என்பது எல்லா மக்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே ஒரு ஜோசியக்காரர் இருக்கின்றார்; மதுரையிலே ஒரு குடுகுடுப்பை ஜோசியக்காரர் இருக்கின்றார். அவர் சொல்வார், 2011–இலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இல்லாமல் போய்விடும் என்று சொல்வார். சங்கரன்கோவில் தேர்தலிலே 20 ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்திலே ஜெயிக்கும் என்று சொல்வார். ஆனால் அப்படிச் சொன்ன குடுகுடுப்பை ஜோசியக்காரர், 2011–இலே குடும்பத்தோடு ஓடி ஒளிந்துவிட்டார். எங்கே இருக்கிறார் என்பது இன்றைக்குத் தெரிவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் இங்கு சவடால் விட்டவர்கள், சவால் விட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு மக்களால் விரட்டி அடிக்கப்பட்டுவிட்டார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா போட்ட பிச்சையால் எத்தனையோ பேர் பலனடைந்தவர்களெல்லாம் அம்மாவை எதிர்த்துப் பேசக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். சங்கரன்கோவில் இடைத்தேர்தலிலே தந்தை, அண்ணன், தம்பி என்று பிரச்சாரத்திலே ஈடுபட்டு, அம்மாவினுடைய அரசுமீது பல்வேறு பொய்யான, உண்மைக்கு மாறான குற்றச்சாட்டைச் சொல்லி ஓட்டு கேட்டார்கள். அதுமட்டுமல்லாமல், இன்னும் ஒரு குழுவினர் சங்கரன்கோவில் தேர்தலில் கணவன், மனைவி, மைத்துனர் என்று சொல்லி 3 பேரும் சேர்ந்து தெருத் தெருவாக, வீதி வீதியாக அம்மாவினுடைய அரசைப்பற்றிக் குற்றச்சாட்டைச் சொல்லி, தவறாக ஓட்டு கேட்டார்கள். இன்னும் ஒருவர் என்னுடைய சொந்தத் தொகுதி என்று சொல்லி, நான்தான் இந்தத் தொகுதியிலே வெற்றி பெறுவேன் என்று வீர வசனம் பேசி, வாய்கிழிய, தெருத் தெருவாகப் போய் ஓட்டு கேட்டார். அந்தத் தொகுதி மக்கள் கொடுத்த பாடம், அந்த மூன்று பேருக்கும் டெப்பாசிட்டை இழக்கச் செய்யுமளவுக்கு, அந்தத் தொகுதி மக்கள் வாக்களித்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரே ஒரு நாள் சங்கரன்கோவிலுக்கு வந்து இறங்கினார்கள். 5 மணி நேரம் பிரச்சாரம் செய்து மக்களைச்

[திரு. ஆர். சாமி] [2012 மார்ச் 28

சந்தித்தார்கள். அவர் மக்களிடம் கேட்ட கோரிக்கை, 'சங்கரன்கோவில் தொகுதி வாக்காளப் பெருமக்களே, என்னுடைய ஆட்சிக்கு நற்சான்றிதழ் தாருங்கள், எதிர்க்கட்சிகள் தவறான பொய்ப் பிரச்சாரம் செய்தார்கள். என்னுடைய நல்லாட்சிக்கு ஒரு மணிமுத்தாக வெற்றியைத் தாருங்கள். அதற்கு நீங்கள் தரவேண்டிய பரிசு, எதிர்க்கட்சிகள் அனைத்தையும் டெப்பாசிட் இழக்கச் செய்யுங்கள்' என்று சொல்லி ஒரே ஒரு வார்த்தையில் சொன்னார்கள். அம்மா உங்களுடைய வார்த்தையை ஏற்று, அந்தப் பகுதி மக்கள் மற்ற ஒட்டுமொத்த கட்சிகளையும் டெபாசிட் இழக்க வைத்து விரட்டி அடித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்த அளவில், எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களாலும்தான் உருவாகி, தமிழ்நாட்டிலே காலூன்றியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தயவால்தான் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு கருணாநிதி என்பவர் முதலமைச்சர் ஆனார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மட்டும் அன்றைக்கு கருணாநிதியை முதலமைச்சராக ஆதரிக்காவிட்டால் நிச்சயம் முதல்வராக கருணாநிதி வந்திருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) அதேபோல் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் தமிழ்நாட்டிலே பல கட்சிகள் உருவாகின்றன. மண்ணையும் பொன்னாக்கக்கூடிய வல்லமை படைத்த தலைவி புரட்சித் தலைவி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் தமிழ்நாட்டிலே பல கட்சிகள் இன்றைக்கு இந்தச் சட்டசபைக்குள் வரக்கூடிய சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்தார்கள். பி.ஜே.பி. என்ற ஒரு கட்சி தமிழ்நாட்டிலே தெரிவதற்கு அடையாளம் காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல் மறுமலர்ச்சி தி.மு.க. என்ற ஒரு கட்சிக்கு அங்கீகாரத்தைக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சிக்கு அங்கீகாரத்தை வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விடுதலைச் சிறுத்தைகள் என்று ஒரு கட்சியை சட்டசபைக்கு அழைக்கக்கூடிய ஒரு வாய்ப்பைக் கொடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதே கதியில்தான் இங்கே இருக்கின்ற,



2012 மார்ச் 28] [திரு. ஆர். சாமி]

இப்போது வெளிநடப்புச் செய்திருக்கின்ற தே.மு.தி.க.-விற்குப் பிச்சை போட்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்களுடைய தயவால்தான் இப்படிப்பட்ட கட்சிகள் எல்லாம் தமிழ்நாட்டிலே கால் ஊன்றியதற்குக் காரணமாக இருந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) நான் கேட்டுக்கொள்கிறேன், தே.மு.தி.க–வைச் சேர்ந்தவர்கள். . . (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆர். சாமி:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் படத்தைப் போட்டு ஓட்டு கேட்பதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கட்சி என்பது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற அம்மா அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற இந்த இயக்கத்தை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை அவர் பேசிமுடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஆர். சாமி:** புரட்சித் தலைவரின் படத்தைப் போட்டு ஓட்டு கேட்பதற்கு விஜயகாந்த்துக்கு என்ன யோக்கியதை இருக்கிறது எனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தன் உடம்பிலே தைரியம் இருந்தால் எம்.ஜி.ஆர். படத்தைப் போடாமல் ஓட்டு கேள், பார்ப்போம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த மாதிரி விவாதம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** தமிழ்நாட்டில் முதல்வர்கள் எத்தனையோ பேர், பல பேர் சாதனை படைத்திருக்கின்றார்கள். அதிலே கிராமங்களிலே பள்ளிக் கூடங்களைத் திறந்து பெருந்தலைவர் காமராஜர் சாதனை படைத்தார். (குறுக்கீடுகள்)

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** இன்னொன்று, நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது சென்னை மாநகரம் என்பதை 'தமிழ்நாடு' என்று மாற்றி சாதனை படைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஏழை மாணவர்கள் சத்தான உணவு சாப்பிட்டால்தான் படிக்க முடியும் என்பதற்காக சத்துணவைத் தந்து சாதனை படைத்தவர் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதேபோல, இந்தியாவிலேயே யாரும் செய்யாத, முதல் முறையாக மாணவ, மாணவிகளுக்கு விலையில்லாத மிதிவண்டியும், மடிக்கணினியும் வழங்கி சாதனை படைத்தவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், முன்னாள் முதல்வர், தி.மு.க–வினுடைய தலைவர், முன்னாள் முதல்வராக இருக்கின்றபோது சாதனை படைத்தார் என்றால் சாராயக் கடையைத் திறந்து சாதனை படைத்தவர் என்றுதான் சொல்ல முடியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரைக் கேட்டால் சத்துணவைக் கொடுத்து சாதனை படைத்தவர். ஆனால், முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் சாராயக் கடையைத் திறந்த சாதனையைத்தான் தமிழ்நாட்டிலே அவர் செய்த சாதனை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) விரைவாக, விரைவாக உங்கள் வீர வசனத்தை எல்லாம், விரைவாக நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாருங்கள். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்த்து நில்லுங்கள் பார்ப்போம். வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலிலே 39 இடங்களிலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தனித்து வெற்றி பெறும். இதைச் சவாலாக நான் இங்கே சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** உண்மையாகச் சொல்லிவிட்டார். முடிந்தால் சவால் விடுங்கள் பார்ப்போம். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யாரை விரல் நீட்டி காட்டுகிறார்களோ, அம்மா யாரை நினைக்கிறார்களோ அவர்தான் இந்திய நாட்டினுடைய பிரதமராக வரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.



2012 மார்ச் 28]

**திரு. ஆர். சாமி:** அதுமட்டுமல்லாமல், கடந்த காலங்களிலே (குறுக்கீடு) உட்காருங்கள் அண்ணே, பார்ப்போம் அண்ணே, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ரொம்ப வீரமாக இருக்காதீர்கள், உட்காருங்கள், பார்த்துக் கொள்ளலாம். 5 வருடங்கள் எங்களை என்ன எல்லாம் செய்தீர்கள்? சட்டசபையிலே பேசவிட்டீர்களா? மூச்சுவிட விட்டீர்களா 5 வருடங்கள்? (குறுக்கீடுகள்) தூக்கி வெளியிலே போட்டீர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** சபாநாயகர் அவர்களே, நீங்கள்தான் அப்போது இருந்தீர்களே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; அவர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். Please sit down.

**திரு. ஆர். சாமி:** என்னுடைய பேச்சில் குறுக்கிடாமல் இருக்க சொல்லுங்கள் தலைவரே! நான் பேசுவது கேட்கமாட்டேன் என்கிறது. அவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் (குறுக்கீடு) உட்காருங்கள் சிவசங்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) கடந்த காலங்களில் கிராமத்திலிருந்து நகருக்குப் பிழைப்பைத் தேடி வந்தார்கள். ஆனால், இப்போது அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நகர்ப்புறத்திலிருந்து கிராமப்புறங்களுக்குப் பிழைப்பு தேடி வந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கிராமப்புற வளர்ச்சிக்குச் செய்கின்ற பல்வேறு நலத் திட்டங்கள், பல்வேறு உதவிகள், பல்வேறு கட்டமைப்புகள், கிராமப்புறங்களிலே அடிப்படை வசதிகளை, குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்கிற காரணத்தினால், இன்றைக்கு நகர்ப்புறங்களிலிருந்து கிராமப்புறங்களுக்குக் குடியேறி வரக்கூடிய சூழ்நிலையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆர். சாமி] [2012 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக, சந்தோஷமாக அம்மாவை வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக உள்ளது அம்மா அவர்கள் அரசின் இந்த பட்ஜெட். இன்றைக்கு எல்லா மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லும் பகலும் உறங்காமல் இருந்து பல்வேறு நல்ல திட்டங்களை இரவு–பகலாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல பட்ஜெட்டைத் தயார் செய்து அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எல்லாத் தரப்பு மக்களும்—ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், வசதியுள்ளவர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் அனைவரும்-- அம்மா அவர்களின் இந்த பட்ஜெட்டைப் பாராட்டி, நிதிநிலை அறிக்கையின் நல்ல திட்டங்களைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஆண்டில் மட்டும் 36 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லாத மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இது அவர்களுக்குத் தெரியவில்லை. அதேபோல, (குறுக்கீடுகள்) அதற்குக் காரணம் ஆற்காடு வீராசாமி இருந்தாரல்லவா, முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி? (குறுக்கீடுகள்) அவர் செயல்படாமல், அவர் நடக்க முடியாமல், அவருக்குக் காது கேட்காமல், அவருக்குக் கண் தெரியாமல் இருந்த காரணத்தினால்தான் அந்த ஐந்து ஆண்டுகளுக்கும் அவருக்குக் காதும் கேட்கவில்லை, கண்ணும் தெரியவில்லை. நடக்க முடியாத அமைச்சராக இருந்ததால்தான் கரண்ட் இல்லாமல் போய்விட்டது. உங்களுடைய செயல்பாடு இல்லாததால்தான் கரண்ட் இல்லாமல் போச்சு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, மைக் அவர்களுக்குக் கொடுக்காமல் மற்றவர்கள் பேசுவது எதுவும், அவைக் குறிப்பில் ஏறாது.



2012 மார்ச் 28]

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வயிற்றில் பாலை ஊற்றி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மைக் கொடுத்தால்தான் பேசியது சபைக் குறிப்பில் ஏறும். இல்லையென்றால் ஏறாது. உட்காருங்கள், அவர் பேசி முடித்தபிறகு, உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும்.

**திரு. ஆர். சாமி:** விவசாயிகளுடைய குறையைத் தீர்த்து, இதுவரை யாரும், எந்த ஆட்சியாளரும் செய்யாத அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளுக்குப் பல்வேறு நல்ல திட்டங்களைச் செய்திருக்கின்றார்கள். விவசாயிகளுக்குப் புரட்சி ஏற்படுத்தும் திட்டமாக இந்த ஆண்டு மட்டும் 4,000 கோடி ரூபாயைப் பயிர்க் கடனாக வழங்கச் சொல்லி, விவசாயிகளுடைய மகிழ்ச்சியைப் பெற்றிருக்கின்றார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதுபோல், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் புதிய திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 500 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். விவசாயிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக (குறுக்கீடு) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நிதிநிலை ஆண்டிலே உலக சாதனை படைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுகின்றேன். தொகுதிப் பிரச்சினைகள்–எனது மேலூர் தொகுதிக்குத் தேவையான கீழ்க்கண்ட கோரிக்கைகளைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மேலூர் தொகுதி என்பது விவசாயம் நிறைந்த பகுதி ஆகும். முல்லைப் பெரியாறு அணையினை நம்பியே விவசாயம் நடைபெறுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உச்ச நீதிமன்றம்வரை சென்று போராடி தீர்ப்பு பெற்றுத் தந்தார். அந்தத் தீர்ப்பை அமல்படுத்த மறுத்துவரும் கேரள அரசை சட்டரீதியாக உரியவகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

மேலும், மேலூர் மிகவும் பின்தங்கிய தொகுதி. எனவே, வேலைவாய்ப்பைப் பெருக்கிட ஒரு புதிய கார் தொழிற்சாலை அமைத்திட வேண்டும். தி.மு.க. ஆட்சியில் மூடப்பட்ட மேலூர் கூட்டுறவு நூற்பாலையில் வேறு தொழிற்சாலை தொடங்கிட வேண்டும்.

[திரு. ஆர். சாமி] [2012 மார்ச் 28

சார்பு நீதிமன்றம் தற்போது மேலூரில் வாரம் இருமுறை மட்டும் செயல்பட்டு வருகிறது. எனவே, சார்பு நீதிமன்றம் நிரந்தரமாகச் செயல்பட நடவடிக்கை எடுத்திடவேண்டும். மேலூரிலுள்ள மிகப் பழமையான நீதிமன்றக் கட்டடங்களை இடித்துவிட்டு புதிதாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டிட வேண்டும்.

இடிந்துவிழும் நிலையில் உள்ள மேலூர் தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். மேலும், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மேலூர் டி.எஸ்.பி. அலுவலகம், மேலூர் மகளிர் காவல் நிலையம், மேலவளவு காவல் நிலையம், மதுவிலக்கு காவல் நிலையம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், வணிக வரி கிளை அலுவலகம் ஆகியவற்றிற்குப் புதிய இடம் தேர்வு செய்து கட்டடம் கட்டித் தருமாறு வேண்டுகிறேன்.

மேலூரில் அரசுப் பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டும். வெள்ளலூர் நாடு, வெள்ளலூர் அரசு மேல்நிலைப் பள்ளியை அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றிடவேண்டும். தமிழகத்தில் 10 அரசு மேல்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்து அதில் அறிவுசார் பள்ளிகள் தொடங்கிட ஆணையிட்டு, மேலூர் தொகுதி, மேலூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் அறிவுசார் பள்ளிகள் தொடங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்குக் கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதியிலுள்ள தெற்குத் தெரு, மங்களாம்பட்டி, தும்பைப்பட்டி, பள்ளப்பட்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். பட்டூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டுகிறேன்.

புகழ்மிக்க அழகர்கோவில் மற்றும் திருவாதவூர் சுற்றுலாத் தலங்களில் கூடுதல் வசதிகள் செய்து தந்திட கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலை அடிவாரத்தில் புதிய தடுப்பணை கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலூர் தொகுதியில் உள்ள வரத்துக் கால்வாய்கள், பாசனக் கால்வாய்கள், கண்மாய்கள், குளங்களைத் தூர்வாரிடுமாறு வேண்டுகிறேன்.



2012 மார்ச் 28] [திரு. ஆர். சாமி]

மேலூர் நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித் தந்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமித்திட வேண்டுகிறேன். மேலூர் மற்றும் கருங்காலக்குடி அரசு மருத்துவமனைகளில் கூடுதல் மருந்து, மாத்திரைகள் வழங்கிடுமாறு வேண்டுகிறேன்.

மதுரை—திருச்சி நான்கு வழிச் சாலையில் தொடரும் விபத்துக்களால் பாதிக்கப்படுவோருக்கு அவசர சிகிச்சை செய்திட நடமாடும் மருத்துவ சிகிச்சை மையம் கொண்டு வந்திடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலூரில் பிரிக்கப்படாத ரேஷன் கடைகளைப் பிரித்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தர்மசானப்பட்டி, அய்யனார்புரம், மேலப்பட்டி, சா.மீனாட்சிபுரம், காரியேந்தல்பட்டி, கேசம்பட்டி, செ.மேலப்பட்டி ஆகிய பகுதிகளில் பகுதி நேர ரேஷன் கடைகளைப் பிரித்து வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

மேற்காணும் எனது மேலூர் தொகுதியின் கோரிக்கைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டுக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் பேசும்போது, மின் கட்டணங்கள் விரைவில் உயரும் என மக்கள் அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். அப்போது இடைமறித்துப் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் தமிழ்நாடு மின் வாரியம் கட்டணங்களை மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பிக்கவில்லையென்றால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கட்டணங்களை உயர்த்தாது என்று தெரிவித்தார். அதுபற்றி, ஒரு சிறிய விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புது டெல்லியில் உள்ள மாண்புமிகு மத்திய மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் தனது 28–7–2011 நாளிட்ட ஆணையில், "மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின்முன் ஒட்டுமொத்த வருவாய்த் தேவைக்கான மனுத் தாக்கல் செய்யப்பட வேண்டியது மீறப்பட்டுள்ளது. எனவே, நிறுவனங்கள் ஒட்டுமொத்த வருவாய்த் தேவைக்கான மனுவையும், மின் கட்டண மாற்றத்திற்கான மனுவையும் ஒவ்வோர் ஆண்டும் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறினால் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிமுறைகளின்படி மின் கட்டண மாற்றத்திற்கான நடவடிக்கையைத் தானாகவே எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியம் கட்டண மாற்றத்திற்காக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பிக்கவில்லை என்றாலும், மின்சார ஒழுங்குமுறை ஆணையமே தன்னிச்சையாகக் கட்டணங்களை நிர்ணயித்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 13–1–2011 ஆம் நாளன்று நடைபெற்ற சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் ஏற்கெனவே பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்புக்கு மாறாக உறுப்பினர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு பல்வேறு முறை பேசியிருக்கிறார்கள். இதுகுறித்து நான் பேரவையில் கேள்வியை எழுப்பியபோது, அன்றைய அமைச்சர், பொன்முடி அவர்கள், "முன்னாள் முதலமைச்சர்கள் 10 பேர் இருக்கும்போது, யாராவது ஒருவர் பெயரைச் சொல்லித்தான் ஆகவேண்டும்; எனவே, முதலமைச்சராக இருந்தவர்கள் பெயரைச் சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். எனவே, இதற்கு முந்தைய பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு பல்வேறு முறை பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, இப்பொழுது உறுப்பினர் குறிப்பிட்டது அவைக் குறிப்பில் இருக்கும். நீங்கள் வேண்டுமென்றால், அந்தக் குறிப்பை எடுத்துப் பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்து செல்வதற்கு முன்பாக, நேற்றையதினம் மத்திய அரசின் விலைவாசி உயர்வை எதிர்த்தும், சில்லறை வர்த்தகத்திலே அந்நிய நிதி முதலீட்டை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தியும்,





தமிழ்நாட்டில் நிலவும், மின்வெட்டு, பேருந்துக் கட்டணம், பால் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் தமிழகத்தில் 369 மையங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற மறியல் போராட்டம் நடைபெற்றது என்பதை முதலிலே இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பாராட்ட வேண்டிய அம்சங்களையும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இங்கு நான் முன்வைக்க விரும்புகின்றேன். 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சாதனைகளையும், வேதனைகளையும் உள்ளடக்கிய அறிக்கை என்பதை நான் முதலிலே குறிப்பிட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–55

கோதுமைமீது விதிக்கப்படும் 2 சதவிகிதம் மதிப்புக் கூட்டு வரி இரத்து, சர்க்கரை நோயாளிகளைக் கருத்திற்கொண்டு, இன்சுலின் மருந்துக்கு விதிக்கப்படும் 5 சதவிகிதம் மதிப்புக் கூட்டு வரி இரத்து, உள்ளூர் தீக்குச்சித் தொழிற்சாலைகள் வெளிச் சந்தையில் போட்டியைச் சமாளிக்க, மரக் குச்சிகள் மற்றும் மரப் பட்டைகளுக்கு விதிக்கப்படும் 14.5 சதவிகித மதிப்புக் கூட்டு வரியை 5 சதவீகிதமாகக் குறைப்பு, கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகளுக்கு விதிக்கப்படும் 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி இரத்து உள்ளிட்ட பல அம்சங்களை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

தமிழக வரலாற்றிலே வரலாறு காணாத மின்வெட்டு காரணமாக பகல், இரவு என 12 மணி நேரம் மின்சாரம் தடை செய்யப்படுகிறது. படிப்படியாக மின்வெட்டு குறைக்கப்படுமென்று அறிவித்துவிட்டு, படிப்படியாக மின்வெட்டு நேரம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில், 1,600 மெகாவாட். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் என்று அறிவித்தது, ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாக குறைக்கப்படுமென்றுதான் அறிவித்திருக்கிறோம். இப்போது, இன்னும் மார்ச் மாதத்தில்தான் இருக்கிறோம். ஆகவே, இன்னும் 3 மாத காலம் பொறுத்திருங்கள்.

[2012 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** தேர்தல் நேரத்தில் குறிப்பிட்டதை நான் இங்கே கோடிட்டுக் காட்டினேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 1,600 மெகா வாட் உடன்குடி அனல் மின் திட்டத்திற்கு ரூபாய் 8,000 கோடி தமிழக அரசு செலவில் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி. இது தவிர, புதிய மின் திட்டங்கள் அறிவிக்கப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது.

தமிழகம் இன்று சந்திக்கும் மின்வெட்டுக்கு அடிப்படையான காரணம், 1996 முதல் 15 ஆண்டுகளுக்கு மேலாக போதிய மின் திட்டங்களை தொலைநோக்குப் பார்வையோடு கடந்தகால அரசு திட்டமிடவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழக அரசு வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கி, பன்னாட்டு நிறுவனங்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கும் நிலையை மாற்றுவதற்கான அறிவிப்பு இந்த அறிக்கையில் இல்லையென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மறுபுறம் ஏழையெளிய, நடுத்தர மக்களிடமிருந்து மின்வாரியம்மூலம் மின் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கப்படுகிறது. இதைக் கைவிட வேண்டுகின்றேன். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை மத்திய அரசிடம் பலமுறை கேட்டும் தர மறுக்கும் சூழ்நிலையில், தமிழக அரசு சில மாநிலங்களில் மின்சாரத்தைப் பெற ஒப்பந்தம் செய்தாலும், அதைக் கொண்டுவருவதற்கான போதிய வழித் தடங்கள் இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பெருந்தொழில் நிறுவனங்கள் ஜெனரேட்டர்களை முழுமையாக இயக்கியும், சிறு உற்பத்தியாளர்கள் வைத்திருக்கும் ஜெனரேட்டரைப் பயன்படுத்த அதற்கான டீசலுக்கு மானியம் வழங்கியும், தற்போதுள்ள நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும். இதை அரசு அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் அனல் மின் நிலையத்தைத் துவக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன். மருத்துவத் துறைக்கு இந்த ஆண்டு ரூபாய் 5,569.28 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, கோவை மருத்துவக் கல்லூரிகளில் தலா ரூபாய் 15 கோடி செலவில் மண்டலப் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்படுமென்ற அறிவிப்பை நான் வரவேற்கின்றேன். மாவட்டத் தலைநகரங்களில் செயல்படும் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தேவையான உபகரணங்கள் இல்லாத நிலை,



2012 மார்ச் 28] *[திரு. இரா. அண்ணாதுரை]*

மருந்து, மாத்திரை தட்டுப்பாடு அவ்வப்போது தொடர்ந்து ஏற்பட்டுவரும் நிலை, இந்நிலையில் மருத்துவத் துறைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீட்டை மேலும் அதிகப்படுத்த வேண்டுகின்றேன்.

தென் மாவட்ட மக்களுடைய மருத்துவமனையாகச் செயல்பட்டுவரும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு ரூபாய் 100 கோடி வழங்கப்படுமென மதுரை மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ரூபாய் 100 கோடி வழங்கப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. எனவே, மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு ரூபாய் 100 கோடி வழங்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

அதேநேரத்தில், மதுரை மாநகராட்சியினுடைய அடிப்படைத் தேவைக்காக தமிழக அரசினுடைய சிறப்பு நிதி 250 கோடி ரூபாய் வழங்கியதை மதுரை மக்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு குறித்து தமிழ்நாடு அரசின் 4—ஆவது நிதிக் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4—ஆவது நிதிக்குழு தனது பரிந்துரைகளை அளித்து பல மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும்கூட, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு குறித்து அறிவிக்கப்படாதது வருத்தம் அளிக்கிறது. உள்ளாட்சி அமைப்புகள் நிதி நெருக்கடியில் செயல்பட்டுவரும் சூழ்நிலையில், மாநில வருவாய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தை சரியாகப் படித்திருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். ஏற்கெனவே உள்ள நடைமுறை தொடர்ந்து இருக்கும்; நான்காவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகள் மீதான முடிவு வந்த பின்பு, அதற்கேற்றவாறு நிதிநிலை மாறும் என்பது நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** பழைய நிலைமை தொடருகிறது என்பதற்காகத்தான் அதை நான் மீண்டும் குறிப்பிடுகின்றேன். காலம் தாழ்த்தாமல் நம்முடைய மாநிலத்தினுடைய மொத்த வருவாயில் 30 சதவிகிதத்தை உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இது நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது.

மத்திய அரசு மானியத்தின்மூலம் ஒரு வருடத்திற்கு 4 கேஸ் சிலிண்டர் மட்டுமே வழங்கப்படும் என்று சொல்லி வருகிறது. மத்திய அரசு இதனைக் கைவிடுமாறு தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். தமிழகம் முழுவதும் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. கேஸ் பதிவதற்கு ஒரு மாதமும், பதிந்த பிறகு ஒரு மாதமும் என மிகவும் காலதாமதமாக சிலிண்டர் வழங்கப்படுகிறது. இதனை ஒழுங்குபடுத்த, மாநில அரசு உரியவர்களோடு பேசி, உரிய காலத்தில் கேஸ் விநியோகம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய அரசு நமக்குத் தர வேண்டிய மண்ணெண்ணெய் அளவைக் குறைத்துவிட்டது. மாநில அரசு வலியுறுத்தியும், நமக்குத் தேவையான மண்ணெண்ணெயை மத்திய அரசு தர மறுத்து வருகிறது. இதனால் மண்ணெண்ணெய் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டது. மறுபுறம் தமிழக அரசு ரேஷன் கார்டு ஆய்வு என்ற பெயரில் சிலிண்டர் இல்லாத கார்டுகளுக்கு ஒரு சிலிண்டர் இருப்பதாக முத்திரை குத்தப்பட்டதால், 10 லிட்டர் மண்ணெண்ணெய் பெறவேண்டிய கார்டுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், ஒரு பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கேஸ் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு தொடர்ந்து இதே நிலையில் நீடித்தால், மீண்டும் விறகு அடுப்பை நோக்கிச் செல்லும் நிலை வருமோ என்று மக்கள் அச்சப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

இந்த ஆண்டு ஒரு இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, மகிழ்ச்சி. தேவையோடு ஒப்பிட்டால், இது மிகக் குறைவு. ஏற்கெனவே





20 இலட்சம் பேருக்குமேல் வீட்டுமனைப் பட்டா கோரி மனு செய்துள்ளனர். அரசுப் புறம்போக்கில் குடியிருக்கும் அனைவருக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயில் நிலங்களில் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்பிற்கான பட்டா வழங்கி உத்தரவாதப்படுத்த வேண்டும்.

மத்திய அரசின் உர மானியக் கொள்கையின் விளைவாக உரங்களின் விலை உயர்ந்துள்ளது. இதனை வன்மையாக எதிர்ப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசின் நடவடிக்கையைச் சரியாகக் குறிப்பிடும் தமிழக அரசு, மறுபுறம் அதேபோன்று பேருந்துக் கட்டணத்தையும், பால் விலையையும் கடுமையாக உயர்த்தியுள்ளதைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.

தொலைநோக்குத் திட்டம் 2023 என்பது, 2023 ஆம் ஆண்டுக்குள் தனி நபர் வருவாயை ஆறு மடங்கு அளவுக்கு உயர்த்தக்கூடிய 10 முக்கிய அம்சங்கள் உள்ளடக்கிய திட்டம் எனப் பொதுவாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மத்திய, மாநில அரசுகளின் நவீன தாராளமயக் கொள்கையினுடைய விளைவால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் தமிழக அரசு அறிவித்துள்ள அறிவிப்பு ஒரு கவர்ச்சிகரமான திட்டமாக உள்ளது. எனவே, இதன் செயல் திட்டம் என்ன என்பது குறித்து சட்டமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில அபகரிப்பு தடுப்புப் பிரிவு ஏற்படுத்தி 30,071 புகார்கள் பெறப்பட்டு, ரூ.224.22 கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, மகிழ்ச்சி. அதேநேரத்தில், தூத்துக்குடி மாவட்டம், தெய்வசெயல்புரம், கோவில்பட்டி, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், முத்துராமலிங்கபுரம் போன்ற இடங்கள் உட்பட பல மாவட்டங்களில் நில அபகரிப்பு நடைபெற்று வருகிறது. இதனை எதிர்த்துப் போராடுவதால், தூத்துக்குடியில் எங்கள் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர், தோழர் கே. கனகராஜ் அவர்களின் வீட்டின்மீது இரவில் பெட்ரோல் குண்டு வீசினார்கள். இதனைக் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் தெரிவித்தோம். ஆனால், இன்றுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அதனைத் தொடர்ந்து கோவில்பட்டியில் எங்கள் கட்சியினுடைய நகரச் செயலாளர் சீனுவாசன் என்பவரது வீட்டின்மீது 24–3–2012 அன்று

[திரு. இரா. அண்ணாதுரை] [2012 மார்ச் 28

அதிகாலை 1½ மணி அளவில் பெட்ரோல் குண்டு வீசியுள்ளார்கள். எனவே, நில அபகரிப்பில் ஈடுபடும் சமூக விரோதிகள் தைரியமாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நேற்றைய முன்தினம், கடந்த 26–3–2012 அன்றுகூட நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் திருப்பரங்குன்றத்தினுடைய நில அபகரிப்பு சம்பந்தமாக ஒரு மனு கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த நேரத்தில், அவர்கள் உடனடியாகத் தலையிட்டிருக்கிறார்கள். அது மதுரையிலே பிரதிபலித்தது. எனவே, அரசு உறுதியான நடவடிக்கை எடுக்குமேயானால், நிச்சயமாக சமூக விரோதிகள், நில அபகரிப்பிலே ஈடுபடக்கூடியவர்கள் தடுக்கப்படுவார்கள் என்பதற்கான உதாரணமாக இதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் காவல் நிலையங்களில் கைதிகளினுடைய மரணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த 9 மாத கால ஆட்சியில் 11 லாக்கப் மரணங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

அதைப்போல, விழுப்புரம், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் மலை ஜாதி பெண்கள்மீது பாலியல் பலாத்காரம் நடைபெற்றது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இதுகுறித்து உயர் நீதிமன்றம், குற்றச்சாட்டுக்கு உள்ளான காவலர்களை ஏன் கைது செய்யவில்லை என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. எனவே, காவலர்களுடைய அத்துமீறிய செயலைக் கட்டுப்படுத்தவும் சட்டம்–ஒழுங்கைப் பாதுகாத்திடவும், தமிழ்நாட்டில் நடைபெறும் வழிப் பறி, கொலை, கொள்ளை ரவுடிகளின் அட்டகாசம் போன்றவற்றைத் தடுக்கவும் வலுவான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–05

அதேபோல, வேலைவாய்ப்பைப் பெருக்க உதவும் சேதுசமுத்திரத் திட்டத்தை மீண்டும் துவக்கிட, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வேலைவாய்ப்புக்கான திட்டம் எதுவும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சுமார் 75 இலட்சம் பேர் பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். காத்திருக்கக்கூடிய



2012 மார்ச் 28] [திரு. இரா. அண்ணாதுரை]

சூழ்நிலையில் புதிய வேலைவாய்ப்புக்கான திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, கரும்பு கொள்முதலுக்கு டன்னுக்கு 3,000 ரூபாய் என்ற கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்ற முன்வர வேண்டும். கடந்த காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கரும்புக்கு டன்னுக்கு 2,500 ரூபாய் கேட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, ரூபாய் 2,100 என்பதை ரூபாய் 3,000 ஆக அறிவித்து தமிழக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நெல்லுக்கு குவிண்டாலுக்கு 1,250 ரூபாய் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பன்னாட்டு நிறுவனங்களை சில்லறை வர்த்தகத்தில் கொண்டுவர வேண்டும் என்னும் நோக்கத்தோடு உணவுப் பொருள் சார்ந்த வியாபாரிகளை நசுக்கக்கூடிய வகையில், மத்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தைத் திரும்பப்பெற, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இந்தச் சட்டத்தைத் தமிழகத்திலே அமல்படுத்தாமல் நிறுத்திவைத்து, வணிகர்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டு, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவையிலே முன்வைத்துள்ள நிதிநிலை அறிக்கையின் குணம் நாடி, குற்றமும் நாடினால்–அதிலே, குணமே மிகையாக உள்ளதால் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்த அறிக்கையை முழுமையாக வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

‘தானே’ புயலால் பாதிப்புக்குள்ளான பகுதி மக்களுக்கும், பயிர்களுக்கும் அளித்துள்ள நிவாரணமும், வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கியுள்ள நிதியும் வரவேற்புக்குரியது. எதிர்காலத்தில் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இத்தகைய பாதிப்புகளுக்கு முழு

*[திரு. பி.எல். சுந்தரம்]* [2012 மார்ச் 28

இழப்பீட்டையும் வழங்கும்வகையில் புதிய கொள்கை ஒன்றை உருவாக்குவதோடு, இதற்கான நிதியை மத்திய அரசின் 'இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெற உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசின் முக்கியமான முயற்சிகளுக்கு உதவாமல் மத்திய அரசு கைவிட்ட நிலையிலும், தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அனைத்துத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டத்தக்கது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023–ஐ வெளியிட்டுள்ளார்கள். கடந்த சனிக்கிழமை அன்று பத்திரிகைகளிலே ஒரு அறிக்கையைப் பார்க்க நேர்ந்தது. தமிழக முதல்வரின் இந்தத் திட்டம் "பூஜ்ஜியத்தில் ஒரு ராஜ்ஜியம்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், பேரவையிலே முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை முதல்வரின் இந்தக் கனவு திட்டத்தை நிறைவேற்ற 'தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்' என்ற ஒரு அமைப்பினை உருவாக்குவதோடு, அந்த வாரியத்திற்கு முதற்கட்டமாக 1–க்குப் பின்னால், ஒன்றல்ல, பத்து பூஜ்ஜியங்களைப் போட்டு ஆயிரம் கோடி நிதியை ஒதுக்கி அறிக்கையினைப் பூஜ்ஜியம் ஆக்கிவிட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏற்றத்தாழ்வான வளர்ச்சியைப் போக்க, மாநில சரிநிகர் வளர்ச்சி நிதியை உருவாக்குவதும், இதற்கு முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதும் மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பகுதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது மலைப் பகுதி வட்டாரங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சொந்த வீடற்ற மக்களில் ஒரு இலட்சம் பேருக்கு இந்த ஆண்டு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பை மனதார வரவேற்கின்றேன். இந்த இலட்சியத்தை நிறைவேற்ற, பல வகையினங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றும் நடைமுறையை எளிதாக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 28] *[திரு. பி.எல். சுந்தரம்]*

பயிற்சி பெற்ற கனரக வாகன ஓட்டுநர் எண்ணிக்கையை அதிகரிக்க 13 மாவட்டங்களில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை அமைப்பது என்பது நல்ல முடிவாகும். பவானிசாகரில் மூடிக் கிடக்கும், உள்கட்டமைப்பு வசதிகள் நிறைந்த போக்குவரத்துக் கழகத்தின் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை உடனடியாகத் திறக்க வேண்டுகிறேன். கனரக ஓட்டுநர் உரிமம் பெற 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும் என்று இருக்கும் நிபந்தனையை நீக்க வேண்டுகின்றேன்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கு 197.58 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளீர்கள். எனது தொகுதியில் உள்ள பஞ்சு ஆலைகள் நிறைந்த, அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு வரும் புஞ்சைபுளியம்பட்டிக்குத் தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வேளாண்மைத் துறைக்கு 3,804.96 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதும், கடனை முறையாகச் செலுத்துவோருக்கு 'வட்டி இல்லை' என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கதாக உள்ளது. மத்திய அரசின் தவறான உரக் கொள்கையை இந்த அரசு வன்மையாக எதிர்ப்பதை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முழுமையாக ஆதரிக்கிறேன். பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் தானியங்களை உற்பத்தி செய்யும் மானாவாரி விவசாயிகள் கடும் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளார்கள். இயற்கை தரும் ஏமாற்றம் ஒரு புறம், கட்டுப்படியான விலை இல்லாதது மறு புறம். மானாவாரி விவசாயத்தையே கைவிட்டு வருவதோடு, நிலங்களையும் விற்றுவருகிறார்கள். மானாவாரி விவசாயத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

நீர்ப் பாசனத்திற்கு இதுவரை இல்லாத அளவு 3,624.73 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. பவானிசாகர் அணையைத் தூர்வாரி, நீர்ப்பிடிப்பை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அவினாசி–அத்திக்கடவு திட்டத்தைப்பற்றி எதுவும் குறிப்பிடாதது ஏமாற்றத்தை அளிக்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கும் கூலியை, வேலையின் அளவைக் கொண்டு நிர்ணயம் செய்யாமல், கால அளவின்படி முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு அறிவித்துள்ள புதிய கூலி 135 ரூபாயை முழுமையாக அரசு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி.எல். சுந்தரம்] [2012 மார்ச் 28

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான மின்வெட்டைப் போக்க கூடங்குளத்தில் உற்பத்தியாகப் போகும் மின்சாரம் முழுவதையும், அதேபோல் நெய்வேலியில் இருந்து கூடுதல் மின்சாரத்தைப் பெறவும் மத்திய அரசை வலியுறுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தீவிர முயற்சிகளை எடுக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களுடைய வட்டியைக் குறைத்திருப்பதை மறு பரிசீலனை செய்து, குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினரின் வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்து உதவிட வேண்டுகிறேன். கடன் வாங்கிய பலர், வாங்கிய அசலைக் காட்டிலும் அதிக பணத்தைத் திருப்பிச் செலுத்தியும் கடன் மட்டும் தீராமல் சிரமப்பட்டு வருகிறார்கள்.

பள்ளிக் கல்விக்கு 14,552.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன். 'புத்தகம் உண்டு, புத்தகப் பையும் உண்டு; பென்சிலும் உண்டு; சீருடையும் உண்டு; காலணியும் உண்டு; சத்துணவும் உண்டு; (மேசையைத் தட்டும் ஒலி) ஜியோ மெட்ரிக் பாக்சும் உண்டு; இல்லாமல் இருந்த நோட்டுப் புத்தகமும் இந்த நிதிநிலை அறிக்கையில் உண்டு.' (மேசையைத் தட்டும் ஒலி) "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்ற பாரதியின் வரிகள் நிச்சயம் மெய்யாகும் என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசியாவிலேயே அதிகமான பொறியியல் கல்லூரிகள் இருப்பது தமிழகத்தில்தான் என்பது பெருமைதான். ஆனால், தகுதியுள்ள ஆசிரியர்கள் அக்கல்லூரிகளில் இல்லாததால், மாணவர்களின் கல்வித் தரம் எதிர்பார்த்த அளவு இல்லாமல் இருப்பதைப் போக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், உயர் கல்வித் துறைக்கான புதிய அறிவிப்பு ஏதும் இல்லை. இக்குறையைப் போக்கும் வகையில், எனது பவானிசாகர் தொகுதியில், ஓர் அரசுக் கலை–அறிவியல் கல்லூரியை அறிவித்து, இக்குறையைக் களைய பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காகக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை நன்றியோடு வரவேற்கின்றேன். பழங்குடியினர் முன்னோடித் திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. என்னதான் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை இந்த அரசு தீட்டினாலும்,



2012 மார்ச் 28] [திரு. பி.எல். சுந்தரம்]

மத்திய அரசின் வனச் சட்டமும், சரணாலயத் திட்டங்களும் வனப் பொருள்களைத் தொடக்கூட பழங்குடியினரை அனுமதிப்பதில்லை என்பதைக் கவலையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதிகரிக்கப்பட்டிருக்கும் திருமண உதவித் தொகையும், தாலிக்குத் தங்கம் வழங்குவதும், பெண் கல்வியை ஊக்குவிக்கும் அற்புதமான திட்டமாகும். நமது மாநிலத்தின் எல்லை ஓரத்தில் வாழும் நமது மாணவிகள் தொலைவு காரணமாக பக்கத்து மாநிலத்தில் கல்லூரிக் கல்வியைப் படித்து முடித்தால் அவர்களுக்கு 'கல்லூரிப் படிப்பிற்கான திருமண உதவித் தொகை' வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கும் திருமண உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, தமிழகத்தில் முகாம்களில் வாழும் ஈழத்து மக்களுக்கு, அனைத்து நலத் திட்டங்களையும் கிடைக்கச் செய்ததோடு, உயர் கல்விக்கும், குடியிருப்பு வசதிக்கும் நிதி ஒதுக்கியிருப்பது, சொந்த சகோதரர்கள், 'துன்பத்தில் சாதல் கண்டு, சிந்தை இரங்காத வாய்ச்சொல் வீரர்கள் அல்ல' என்று சொல்லாமல் சொல்லியிருக்கும் இந்த அறிக்கையையும், இந்த அரசையும் நன்றியோடு பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. சி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தாயில்லாமல் நானில்லை–எனக்கு ஒரு தாய் இருக்கின்றாள் என்றும் என்னைக் காக்கின்றாள்" என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலுக்கு, தமிழகத்தினுடைய தாயாய் இருந்து, எங்களையெல்லாம் வழி நடத்தி, எங்களையெல்லாம் அடையாளம் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையிலே எனக்கு மூன்றாவது முறையாக இடத்தைக் கொடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த எங்களுடைய குல தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. சி. கிருஷ்ணன்] [2012 மார்ச் 28

பிற்பகல் 1–15

இங்கே நான் இந்த நல்ல நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்வதெல்லாம், இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த வரியும் இல்லை. புரட்டிப் போட்டுப் பார்த்தாலும், எந்த திசையிலேயிருந்து நோக்கினாலும், அம்மா அவர்களுடைய திட்டங்கள்தான் இங்கே தெளிவாக இருக்கின்றனவே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த எதிர்க்கட்சிக்கும், எந்தவொரு வரியும் கிடைக்கவில்லை; பேசுவதற்கு வாய்ப்பும் கிடைக்கவில்லை. வாழ்த்திப் பேசுவதற்குத்தான் இங்கே வழியுண்டே தவிர, இங்கே எதிர்த்துக் குறை சொல்வதற்கு வாய்ப்பே இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்த நல்ல நேரத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மற்றும் என்னைப் போன்றவர்களெல்லாம் 20 ஆண்டுகளாக புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தவர்கள். இந்த மார்ச் மாதம் என்று சொல்கின்றபோது, இங்கே எங்களுக்கு நினைவுக்கு வருவது, துச்சாதனக் கும்பல் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தாக்கியதுதான். இந்தப் பேரவை இருக்கின்றவரை, அந்த யுத்தக் கண்டத்தை, துரியோதனக் கும்பல் தாக்கியதை நாங்கள் மறக்க முடியாது. அப்போது இந்தப் பகுதி ஒரு போர்க்களமாக இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரத்தம் சொட்டச் சொட்ட இந்த அவையிலேயிருந்து வெளியேறினார்கள். வெளியே சென்று பத்திரிகைகளுக்குப் பேட்டியளிக்கின்றபோது, என்ன சொன்னார்கள் என்றால், 'மீண்டும் இந்த அவைக்கு வருவேன்; முதலமைச்சராக உள்ளே நுழைவேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சொன்னது ஒருமுறை. ஆனால், இன்றைக்கு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நிதிநிலை அறிக்கையைத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார். இந்த நிதிநிலை அறிக்கை எந்தவிதமான குறைபாடும் இல்லாத அளவிற்கு இருக்கின்றது. ஆனால், டெல்லியிலே இருக்கின்றவர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதேபோன்று, இரயில்வே பட்ஜெட்டிலே 5 பைசா, 10 பைசா என்று கட்டணத்தை ஏற்றிவிட்டார் என்பதற்காக, அதைத் தாக்கல் செய்த அமைச்சர்



2012 மார்ச் 28] [திரு. சி. கிருஷ்ணன்]

பதவியே காணாமல் போய்விட்டது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நின்றுவிடக் கூடாது. அங்கே ஓர் அமைச்சர் பதவி காலியாகி இருக்கின்றது. இன்னும் எத்தனை அமைச்சர் பதவிகள் காலியாகுமோ என்று நான் சொல்ல விரும்பவில்லை. அடுத்த பட்ஜெட்டை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லியிலே தாக்கல் செய்ய வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற என்னுடைய பணிவான எண்ணத்தை இங்கே உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'நம்பினோர் கெடுவதில்லை; அது நான்குமறை தீர்ப்பு' என்று நான் இங்கே சொன்னேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை. இங்கே இருக்கின்றவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பி வாழ்ந்தவர்கள். எதிரணியிலே இருக்கின்றவர்கள் வாழ்வதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டினார்கள். ஆனால், அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பாமல், இன்றைக்கு சங்கரன்கோவில் தொகுதியிலே போட்டியிட்டார்கள். நான் பணிவன்போடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ம.தி.மு.க.–வினருக்கு 12 இடங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கிக் கொடுத்தார்கள். அவர்கள் போட்டியிட்டார்களா? மறுத்தார்கள். ஆனால், சங்கரன்கோவில் இடைத் தேர்தலிலே வாக்காளர்களிடத்திலே, 'சட்டமன்றத்திலே எங்கள் குரலை எழுப்புவதற்கு, எங்களுக்கு ஓர் இடம் கொடுங்கள்' என்று போராடினார்கள். அதேபோல, இங்கேயிருக்கின்ற தே.மு.தி.க.–வை அடையாளம் காட்டி, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். என்ன நடந்தது? சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் எங்களை எதிர்த்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்த்து வாக்குகளைக் கேட்டார்கள். என்ன நடந்தது? இங்கே இருக்கின்றவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பாமல், அங்கே அவருக்கு எதிராக வாக்குகளைக் கேட்டார்கள். அந்த நிலைமையிலே இன்றைக்குத் தி.மு.க.–வும் சேர்ந்து, அங்கே டெபாசிட் தொகையை இழக்க வேண்டிய நிலைமை உருவானது.

எனவே, இன்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா

அவர்கள் வாரி வழங்கியிருக்கின்ற திட்டங்களை, தேர்தல் நேரத்திலே கொடுத்த திட்டங்களை இன்றைக்குத் தெளிவாக நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

பிற்பகல் *1–20*

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கே மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் போன்ற பொருட்களை—ஏழை எளிய குடும்பத்திலே இருக்கின்றவர்கள், தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே இருக்கின்றவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கின்ற குடும்பத்திலே இருக்கின்றவர்கள்—அப்படிப்பட்ட குடும்பங்களிலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் வழங்க உத்தரவிட்டு, அவர்கள் தூக்க முடியாத அளவுக்கு, இரண்டு, மூன்று பேர் சேர்ந்து அந்தப் பொருட்களை எல்லாம் தூக்குகின்ற அளவுக்கு, வாரி வழங்கியிருக்கிறார்கள். அந்த ஏழைக் குடிசையிலே இருப்பவர்களுக்கு மிகச் சிறப்பான நல்ல பொருட்களையெல்லாம், நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; நான் இந்த மாமன்றத்திலே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ‘தானே’ புயல் தாக்கியபோது, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் சீரழிந்து போய்விட்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் சென்று, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை அதிகாரிகளையும், அமைச்சர்களையும் அங்கே கொண்டுபோய் நிலை நிறுத்தி, அந்தப் புயல் தானே ஒதுங்கிவிட்டதுபோல, அங்கே சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். அங்கே வீடிழந்தவர்களுக்கு, குடிசை இழந்தவர்களுக்கு—*5,77,584* குடிசைகள் சேதம் அடைந்தன. அதற்கு இழப்பீடாக ரூபாய் *160* கோடி வழங்கி, அந்தக் குடிசைகளுக்குச் சிறப்பு உதவியாக நிதியை வழங்கினார்கள்.

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்கள், வீடுகளை இழந்தவர்களுக்கு, ஒரு இலட்சம் கான்கீரிட் வீடுகளை மிகச் சிறப்பான முறையில் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். இந்த நிவாரணப் பணிகளைப் பார்க்கின்றபோது, வறண்ட பகுதிகளாக இருக்கின்ற எங்கள் பகுதிகளிலே, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற பகுதிகளிலே,





அந்தப் புயல் வந்தால், எங்களுக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்குமே என்று ஏங்குகிறோம்.

அதுமட்டுமல்ல; இங்கே மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட் ஒரு தொலைநோக்கு பட்ஜெட். இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், *2023* ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தில் சிறப்பான நிலையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டமிட்டு அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இங்கே தமிழகத்திலே என்னென்ன திட்டங்களை நிறைவேற்றிச் செயல்படுத்துகிறார்களோ, அந்தத் திட்டங்களையெல்லாம், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையிலே, அந்தத் திட்டங்களை தமிழகத்தில் எப்படிச் செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற திட்டங்கள் அனைத்தும் முன்மாதிரியான திட்டங்கள். எந்த ஆட்சியிலும், இதுவரையில் யாருமே தீட்டிச் செயல்படுத்தியிராத அத்தனைத் திட்டங்களையும் இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதேபோல, கட்சிப் பாகுபாடு இல்லாமல், அனைத்துத் தலைவர்களுக்கும்—இன்றைக்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், காந்தி நினைவிடம் கன்னியாகுமரியிலே ரூபாய் *12* கோடி செலவிலே புதுப்பிக்கப்படுகிறது. அதேபோல, காமராஜர் நினைவிடம் கன்னியாகுமரியிலே புதுப்பிக்கப்படுகிறது. அதேபோல, சென்னையில், காமராஜர் இல்லம் புதுப்பிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால், டில்லிக்குச் சென்று அனுமதி பெற்று வந்துதான் புதுப்பிக்க முடியும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், நீங்கள் இன்றைக்குக் கேட்காமலேயே கன்னியாகுமரியிலே தலைவர்களின் நினைவிடங்களை அழகுபடுத்தவும், புதுப்பிக்கவும் ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடத்தையும், அண்ணா அவர்களுடைய நினைவிடத்தையும் புதுப்பித்து அழகு பார்க்கின்ற ஒரே தலைவியாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள்.

நான் இந்த நேரத்திலே, நம்முடைய கழகத்தினுடைய காவல் தெய்வமாக இருக்கக்கூடிய அம்மா அவர்களிடத்திலே பணிவன்போடு ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாரி வாரி வழங்கி–அவரிடத்தில் கேட்கின்றபோது, நான் எதையும் நம்ப மாட்டேன், என்னுடைய வயிறு நிரம்பி விட்டது என்று சொன்னால்தான் நம்புவேன் என்று சொல்வார்கள். அதைபோல் இன்றைக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடம் புதுப்பிக்கப்படுகின்றது. அது புதுப்பித்து, அங்கே செயல்படுகின்றபோது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசு, வள்ளல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கேயும் ஒரு அன்னதானத் திட்டத்தை துவக்கி வைத்து, அங்கு வருகின்ற ஏழையெளிய மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வயிராற சாப்பிடுகின்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும் என்று, அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வேண்டி வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், எத்தனையோ கோயில்களுக்கு அன்னதானம் கொடுகின்றார்கள். இங்கே தமிழகத்தினுடைய மக்களெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சமாதிக்கு வந்து, அவருடைய சமாதியில் தலை வைத்து வணங்கி, வணங்கி கும்பிடுகின்றார்கள். இதுவும் ஒரு கோயிலைப்போல இன்றைக்கு காட்சி அளிக்கின்றது. இங்கேயும் அம்மா அவர்கள் அன்னதானத் திட்டத்தை துவக்கி வைக்க வேண்டுமென்று மீண்டும் பனிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–25

இங்கே கொண்டு வந்திருக்கின்ற திட்டங்கள் என்று பார்த்தால், விவசாயத் துறைக்கு ரூ.3804.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மிகச் சிறப்பான அளவில் 120 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது. அதேபோன்று 27.55 இலட்சம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடியும், 15,000 ஏக்கரில் நவீன வகையில் கரும்பு சாகுபடியும், ஒரு இலட்சத்து 12,500 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனமும், ஏழையெளிய விவசாயிகளுக்கு, டிராக்டர், தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள் வழங்குதல் எனப் பல்வேறு சிறப்பான திட்டங்களை இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறைக்கு





அதிக அளவில் இன்றைக்கு நிதியை வாரி வழங்கியும், கிராமப் பகுதியிலுள்ள மக்கள் சிறப்படையக்கூடிய அளவிலும், விவசாயிகள் வாழ்வு வளம்பெறக்கூடிய வகையிலும், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அம்மா என்று அழைக்காத உயிரில்லையே. 12 ஆயிரம் விலையில்லாத கறவை மாடுகளை வழங்கி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வளித்துள்ளார்கள். அதேபோல் 1.5 இலட்சம் ஏழைக் குடும்பப் பெண்களுக்கு நான்கு ஆடுகள் வழங்க இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைக் குடும்பத்தில் இருக்கின்றவர்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும், அபராத வட்டியை நீக்கியும், வட்டியைத் தள்ளுபடி செய்தும், வீட்டுக் கடன் வாங்கியவர்களுக்கும், ஏழை மக்களுக்காகவும் பல திட்டங்களைக் கொடுத்து, அயராது பாடுபட்டு, சிறப்பான நல்ல நிதிநிலை அறிக்கையில் நிதியை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் நிதி ஆண்டில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், மாண்மிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களுக்கும், தமிழக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், சக உறுப்பினர்களுக்கும் இந்த அவையில் என்னைப் பேச வைத்து அழகு பார்த்து, தங்கள் குரலை எதிரொலிக்கச் செய்த எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்குகின்றேன்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 மார்ச் 28

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழகச் சட்டசபையில் வழங்கிய 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறந்த வழிகாட்டுதலின் பேரில், விவசாயம், கல்வி போன்ற துறைகளுக்குப் பெருவாரியான நிதிகளை ஒதுக்கி, மத்திய அரசின் திட்டங்களையும் முன்னிறுத்திக் கொண்டு செல்லும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம், அணைகள் பாதுகாப்பு, விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் நீரைச் சேமிக்கும் அணைகளை உலக வங்கித் திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்வது பாராட்டுக்குரியது. குளங்கள், ஏரிகள் தூர் வார நிதியை ஒதுக்கீடு செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள 2,040 பாசனக் குளங்களில் படர்ந்துள்ள பாசிகள், செடிகள், கொடிகள், மண், வண்டல் மண் போன்றவற்றையெல்லாம் எடுத்து தூர் வாரி, நீர் சேமிக்கும் கொள்ளளவுப் பரப்பை அதிகப்படுத்த வேண்டும். கரைகள் பலப்படுத்தப்பட வேண்டும். இவற்றிற்கெல்லாம் சிறப்பாக நிதி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் நீர் ஆதாரங்களில் இருந்து நீர் கொண்டு செல்லும் நீர்வழிப் புறம்போக்குகள், சானல்கள், வாய்க்கால்கள், கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு மடைகள், ஷட்டர்கள் சீரமைத்து கடை வரம்புவரை நீர் சென்று விவசாயம் செழிக்கவும், கடல்நீர் உட்புகாமல் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசு இந்தத் திட்டங்களை அமல்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருந்திய நெல் சாகுபடிப் பரப்பளவை 27.55 இலட்சம் ஏக்கராக உயர்த்த அரசு எடுக்கும் முயற்சிக்குப் பாராட்டுகள். கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் நெல் சாகுபடி செய்யும் பரப்பளவு சுமார் 2 இலட்சம் ஹெக்டேர் அளவுக்குக் குறைந்துள்ளது. ஆனால், தமிழகத்தின் மக்கள்தொகை ஆறே கால் கோடியிலிருந்து ஏழே கால் கோடியாக சுமார் ஒரு கோடி மக்கள் தொகை அதிகரித்துள்ளது. எனவே, இதற்கான ஒரு சட்டத்தை உடனடியாக உருவாக்க



2012 மார்ச் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

வேண்டும். இல்லையென்றால் நெல் வயல்கள் பிளாட்டுகளாக மாறிவிடும். நன்னீர் நிலம் மற்றும் நஞ்சை நிலப் பாதுகாப்புச் சட்டம் (Conservation of Wet Land and Paddy Field Act) என்றவொரு சட்டத்தை உருவாக்குவார்களேயானால், நிச்சயமாக நம்முடைய சாகுபடி நிலங்களைக் காப்பாற்ற வாய்ப்பு இருக்கிறது என்று நான் அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளைபொருள்களை சந்தைப்படுத்த விற்பனையை மேம்படுத்த, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட, இந்தியாவில் வேறு சில மாநிலங்களான அரியானா, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, குஜராத் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இருப்பதுபோன்று தமிழ்நாட்டிலும் வேளாண் விளைபொருள் விற்பனை அமைச்சகம் அமைக்க நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர் சில ஆண்டுகளாக வராததால், நெற் பயிர்கள் பயிரிடப்படவில்லை. வாழை, மரச்சீனி, இரப்பர், தென்னை போன்ற பயிர்களைப் பயிரிட்டு அவையெல்லாம் தண்ணீரின்றி வாடிப்போய் உள்ளன. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து கீழே போய்விட்டது. இந்நிலையில், எனது முயற்சியில் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களிடமும், கேரள முதலமைச்சர் அவர்களிடமும், இரு மாநிலப் பொதுப் பணித் துறை அமைச்சர்கள், அதிகாரிகளைச் சந்தித்தும் கோரிக்கை வைத்ததன் விளைவாக திருவனந்தபுரத்தில் இரு மாநிலப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் தொழில்நுட்பக் கலந்தாய்வு நடத்தி, கருத்துகள் பரிமாறப்பட்டு, கேரள அரசு, தமிழ்நாடு அரசுக்கு ஒப்பந்த ஷரத்து அனுப்பியுள்ளது. இதனைத் தமிழக அரசு பரிசீலித்து, நெய்யாறு இடதுகரை சானல் ஒப்பந்தம் உருவாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். பலமுறை, கிட்டத்தட்ட 56 முறை—முந்தைய ஆட்சிக் காலத்தில், அவர்கள் 56 முறை—இதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். தொடர்ந்து இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி முடித்து ஒப்பந்தம் உருவாக, அவர்களுக்கு ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், குழித்துறையில் ஓடும் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பல தடுப்பணைகள் கட்டி கரையோரங்களில் நீர்வளம் பெருக அரசு ஆவன செய்ய வேண்டும். இதனால் திறந்தவெளிக் கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகளின் நீர்மட்டம் மேலே வரும். அதுமட்டுமல்ல; விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, நல்லூர் பேரூராட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வோர் ஆற்றிலும் எங்கெங்கு தேவையோ அங்கங்கெல்லாம் தடுப்பணைகள் கட்ட உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, நல்லூர் பேரூராட்சி, சென்னித் தோட்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, ஏற்கெனவே உள்ள கால்வாய் வழியாகத் தண்ணீர் கொண்டு சென்றால், நல்லூர் பேரூராட்சி, கிள்ளியூர் பேரூராட்சி, விளாத்துறை ஊராட்சி, முஞ்சிறை, நட்டாலம் ஊராட்சி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை பெருவாரியாகத் தீர வாய்ப்புள்ளது.

மேலும், தமிழகத்தில் நிலவும் கடுமையான மின்வெட்டை முழுமையாகக் களைய இந்த நிதியாண்டிலேயே புதிய மின் உற்பத்தி மற்றும் வழங்கல் திட்டங்களை அறிவித்து தடையின்றி குறைந்த விலையில் மக்களுக்கு மின்சாரம் கிடைத்திட, அரசு பல உத்திகளை மேற்கொண்டுள்ளது. அவையெல்லாம் இந்த ஆண்டிலேயே நிறைவேறும் விதத்தில் விரைவாகச் செயல்படுமேயானால் நிச்சயமாகப் பலனளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

பிற்பகல் 1–35

கூடங்குளம் அணுமின் நிலையம், தேசிய மற்றும் சர்வதேச அணுமின் கழக மேற்பார்வையில் சிறப்பாகச் செயல்படத்



2012 மார்ச் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

தொடங்கியுள்ளது. பல இன்னல்களையும் இடர்களையும் கடந்து பல போராட்டங்கள் நடந்தும், அத்தனையையும் சாமர்த்தியமாக வெற்றிகொண்டு இன்று கூடங்குளம் அணுமின் நிலையப் பணி நடைபெற, பெரிதும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இருள் இல்லாத தமிழகம் படைக்க முயற்சி எடுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

தமிழகத்தில், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகளை அனைத்து ரேசன் கார்டுதாரர்களுக்கும் வழங்குவது போன்று, அனைத்து வீடுகளுக்கும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் சிறிய வடிவத்தில், சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சோலார் ஜெனரேட்டர்கள் (Solar Generator) சூரியசக்தி மின்னாக்கிகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த ஈரோடு மஞ்சள் வணிக வளாகம் அமைக்க சிப்காட் மூலம் 50 ஏக்கர் பரப்புள்ள நிலம் வழங்கியும் இன்னும் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்படாமல் உள்ளன. இதேபோல் தோவாளை, தென்காசியில் சென்ட் தொழிற்சாலை அமைக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அவற்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசின் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகளைத் தமிழக அரசு சிறப்பாகக் கட்டித் தந்து, மாணவர்களுக்கு மேலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஈரோட்டில் மஞ்சள் வளாகம் சிப்காட்மூலம் அமைக்க அடிக்கல் நாட்டினார்களே தவிர, அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியில் அன்றைய வேளாண்மைத் துறை அமைச்சரிடத்திலே அமைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அன்றிருந்த மத்திய அமைச்சர் அவர்களால் அது மொடக்குறிச்சியில்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 மார்ச் 28

வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அது அவர்களால்தான் நிறுத்தப்பட்டதே தவிர, இந்த ஆட்சியால் நிறுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** விளக்கம் அளித்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாணவர்கள் தூங்குவதற்குக் கட்டிலும், 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், இலவச நோட்டுப் புத்தகம் வழங்குவது மிகவும் பாராட்டுக்குரியது. அரசு, பள்ளிகளை மூடாமல், மாணவர் வருகைக் குறைவைச் சரிப்படுத்திட, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழிக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் முழுமையான தமிழ் வழிக் கல்வியை அளிக்கும்பட்சத்தில் மாணவர்கள் குறைவாகவே வந்து சேர்கிறார்கள். ஆகவே, ஆங்கில வழிக் கல்வி முறையையும் சேர்த்து அளித்தோமானால், அரசுப் பள்ளிகள் வெற்றிகரமாக இயங்கும். எனவே, இதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, முதல் பாடமாகத் தமிழ், கட்டாயப் பாடமாகப் படிக்க வேண்டும் என்று ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, புதியதாக ஆங்கில வழி தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது. ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டில் தமிழ் கட்டாய மொழியாக இருக்கின்றபோது, தமிழ்வழி படிக்க அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள், அதேநேரத்தில் இரண்டாவது மொழியாக ஆங்கிலமும் இருக்கிறது. எனவே, அதையும் படித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தொகுதியில் மலையாளம் ஒரு பாடமாக அரசுப் பள்ளிகளில் அமைந்துள்ளது. மலையாளம் கற்பிக்கும் ஆசிரியப் பணி இடங்கள் அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ளன. ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் மற்ற மொழி ஆசிரியர்கள், பாடங்கள் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், மலையாள ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க, பணி நியமனமோ, அறிவிக்கையோ வெளியிடப்படவில்லை. இதனால், மலையாள மொழி பயிலும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மாணவர்கள் நலன் கருதி முதுகலை மலையாளம் ஆசிரியர் பணித் தேர்வு நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வியில் ஏற்பளிக்கப்பட்ட பாடப் பிரிவுகளில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை, தினசரி ரூபாய் 150 தொகுப்பூதியத்தில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களை, 358, 395 போன்ற அரசாணைகள் மூலம் 2000 ஆம் ஆண்டு வரை வெளியிட்டு பணி நிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்கியது போன்று, தமிழகம் எங்கும் உள்ள 246 பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தமிழக அரசு கோரும் கூடுதல் நிதியுதவியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் உறுதுணையாக நிற்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினையை எழுதிக்கொடுத்துவிடுங்கள். அது அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்படும். உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக் காமராஜர் இல்லம், கன்னியாகுமரி காமராஜர் மணிமண்டபம் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 3,000 பேருந்துகள் வாங்கி வழங்கப்படும் என்றும், 2012–2013ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 3,000 புதிய பேருந்துகள் வாங்கி வழங்கப்படும் என்றும், மொத்தம் 6,000 பேருந்துகள் கிடைக்க இருப்பதால், எங்கள் மாவட்டத்திற்கும் அதிகமான பேருந்துகளை வழங்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதியில் கேரள அரசுப் போக்குவரத்துக் கழகம், பெருவாரியான பேருந்துகளை இயக்கி வந்திருக்கிறது. அந்தப் பேருந்துகள் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒரு ஒப்பந்த ஷரத்து தயார் செய்து நமது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ஆசிரியர்கள் நியமனத்தைப் பற்றிப் பேசினார்கள். அதிலே கம்ப்யூட்டர் பாடத்திலே இருப்பவர்கள், இப்போது 197 பேர் தினக் கூலி அடிப்படையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 31–3–2012–க்குள் அந்த ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, இந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்ய 3 முறை தேர்வுகள் நடைபெற்றிருக்கின்றன. மீதமுள்ள 197 பேர் மட்டுமே இப்போது தற்காலிகப் பணியில் இருக்கிறார்கள். இவர்களுக்கும் பணியில் இப்போது சம்பளம் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கு சர்ட்டிபிகேட்





வெரிபிகேஷன் ஏற்கெனவே நிறைவு பெற்றிருக்கிறது. 31–3–2012–க்குள் இவர்களுக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளப் போக்குவரத்துக் கழகம், ஷரத்து ஒன்றைத் தயார் செய்து, அவர்களின் பேருந்துகளை நமது பகுதிகளில் இயக்குவதற்கு நமது Regional Transport Authority அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்திடும் நேர்வில், பெருவாரியான கேரளப் பேருந்துகள் பார்டரில் இயங்குவதற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும். அதற்கு நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசிடமிருந்து வந்த கோப்புகள் எதுவும் நிலுவையில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதுபோல, அவருடைய தொகுதியில் கேரள அரசு மூலமாக இயக்கப்படும் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் அந்தந்த வழித் தடங்களில் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளை இயக்குவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, கேரள அரசிலிருந்து இயக்கப்படுகின்ற பேருந்துகளின் கட்டணம் என்று சொன்னால், கிலோ மீட்டருக்கு 55 பைசா. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இயக்கப்படுகின்ற பேருந்துகளின் கட்டணம் கிலோ மீட்டருக்கு 42 பைசா. ஆக, குறைந்த கட்டணத்தில் உங்களுடைய மாவட்டத்திற்கு, உங்களுடைய தொகுதியில் நிச்சயம் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

[2012 மார்ச் 28

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெளியிட்ட நல்ல செய்திக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கொடுத்த ஒரு நல்ல செய்திக்கும் நான் மனதார வாழ்த்துகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைத்தான் நான் வாழ்த்த வேண்டும்—இந்த வகையில் நிச்சயமாக. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய பிரச்சினையாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் இரண்டரை இலட்சம் வீட்டுமனைகளும், அடுக்கு மாடி வீடுகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க. . .

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** வயதும் சிறியதாக இருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு. அதனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லச் சொல்லுங்கள். வாழ்த்திக்கொண்டேயிருந்தால் சரிவராது. நன்றி சொல்லச் சொல்லுங்கள். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி வாழ்த்து எனச் சொல்லாமல் நன்றி எனக் கூறுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** நன்றி; பாராட்டுகள். அப்படியும் எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தில் இரண்டரை இலட்சம் வீட்டு மனைகளும், வீடுகளும் வாங்கி கடன் மீதான வட்டி, கூட்டு வட்டியென்று கடன்கள் வசூல் ஆகாமல் இருந்துவருகிறது. அந்த வட்டியை ஒரு சீரான, எளிய 4% வட்டியாகக் குறைத்து, கடனையும் வசூல் செய்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு முழுமையாக நிதிகளைப் பெற்று, மேலும், வாடிக்கைதாரர்களுக்கு இரண்டரை இலட்சம் பதிவுப் பத்திரங்களைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமேயானால் நிச்சயமாக இரண்டரை இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினை–மார்த்தாண்டம் பேருந்து நிலையம்–விளவங்கோடு தொகுதியின் தலைநகர் மார்த்தாண்டத்தில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையப் பணி, ஐந்தாண்டுத்



2012 மார்ச் 28] *[திருமதி எஸ். விஜயதரணி]*

திட்டம்போல் ஆமை வேகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. சுற்றுச்சுவர் கட்டும் பணி, எட்டில் ஒரு பங்கு மட்டுமே நடைபெற்றுள்ளது. 2012 மார்ச் 31–க்குள் பணிநிறைவு பெறும் என மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் உறுதி அளித்துள்ளார். இன்னும் 3 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் இதுவரை 50% பணிகள் 3 நாட்களில் எப்படி முடிவடையும்? பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யவேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத்திற்குட்பட்ட மார்த்தாண்டம், சுத்தமான தேன் உற்பத்தி செய்யும் இடம் ஆகும். மத்திய அரசின் தேசிய தேனீ வாரியத்திடம் இருந்து நிதி உதவிகள் பெற, தமிழ்நாடு தேனீ வளர்ப்புக் குழுமம் (Tamil Nadu Bee Keeping Mission) அமைத்து தேன் உற்பத்தியாளர் சங்கம், தேனீ வளர்ப்போர் சங்கத்திற்கு நிதிகள் வழங்கிடவும், தேனுக்கு ஆதார விலை கிடைத்திடவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் அமைந்துள்ள தேசிய வேளாண் மையத்தை இடமாற்றம் செய்யக்கூடாது. அங்கு தோட்டக்கலை சார்ந்த பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. எனவே, திருப்பதிசாரத்திலும் கூடுதலாக தேசிய வேளாண் மையம் (Kissan Vikas Kendra KVK) அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

தொழிற்பேட்டை–குமரி மாவட்டம், குறிப்பாக விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கல்வி கற்றவர்கள் அதிகம். எனவே, மார்த்தாண்டத்தில் படித்த இளைஞர்கள் பயன்பெற புதிய தொழிற்பேட்டை (ELCOS SEZ) மென்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

சுகாதாரம் (மக்கள் நல்வாழ்வு)–விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, குழித்துறையில் செயல்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் C.T. Scan நிறுவ அரசு ஆவன செய்யவேண்டும். 5 கடைநிலை ஊழியர் (Health Worker) பணியிடம் காலியாக உள்ளது. அதனை நிரப்ப அரசு ஆவன செய்ய வேண்டும். கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய M.R.I. Scan நிறுவி குமரி மாவட்ட மக்களுக்குக் குறைந்த செலவில் பிணி கண்டறியும் சோதனை (Diagnosis) செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 மார்ச் 28

குருசுமலை திருபயணம் – RAPDRP—மத்திய அரசின் Restructured Accelerated Power Development Reforms Programme திட்டத்தின் வாயிலாக மாநில அரசின் கோரிக்கையாக எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சி, பத்துகாணி ஊரில் அமைந்துள்ள திருப்புனித குருசுமலைக்கு மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்ய வேண்டும். தரிசனம் நடைபெறும் புனித குருசுமலைக்கு ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் 5 நாட்கள் இரவும், பகலும் சுமார் 15 இலட்சம் பக்தர்கள் திருப்பயணம் மேற்கொள்வார்கள். இந்தப் பயணிகள் வசதியாகச் சென்று வர, அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குழித்துறைப் பகுதியில் ஓடும் தாமிரபரணி ஆற்றில் சாக்கடை, மாசு, குப்பை, கழிவுகள், கூளங்கள் கலக்காமல் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வழங்கும் ஆதாரமாக தாமிரபரணி ஆறு விளங்குகிறது. இந்த ஆற்றுநீர் மாசுபடாமல், கழிவுகள், சாக்கடைகள் கலக்காமல் தடுத்து நிறுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் யானைக்கால் நோயாளிகள் அதிகம் உள்ளனர். அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.400/– உதவித் தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது. அதனை ரூ. 1,000/– ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

யானைக்கால் நோய் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு குமரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று வர இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு யானைக்கால் நோயாளிகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குழித்துறை மற்றும் குளச்சல் நகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு, தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாக குழித்துறை மற்றும் குளச்சல் அறிவிக்கப்பட்ட பின்பும் வீட்டு வாடகை படி (House Rent Allowance ) கடந்த 8 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளது. எனவே, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் நலன் கருதி உயர்த்தி வழங்கப்படும் வீட்டு வாடகைப் படியை வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.



2012 மார்ச் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

பள்ளிக் கல்வியில் தொடக்கக் கல்வி இயக்குநரகம், பள்ளிக் கல்வி இயக்குநரகம் இருப்பது போன்று, மேல்நிலைப் பள்ளிக்குத் (11, 12 ஆம் வகுப்பு) தனி இயக்குநரகம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

ஹோமியோபதி–மருத்துவத்துறையில் இந்திய மருத்துவத்திற்குத் தனி இயக்குநரகம் அமைக்கப்பட்டது போன்று ஹோமியோபதி மருத்துவத் துறைக்கும் தனி இயக்குநரகம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து தாலுகா மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஹோமியோபதி துறைக்குத் தனிப் பிரிவைத் (Homoeopathy Department) துவக்கி, தகுதியான அரசுப் பதிவு விகிதாச்சாரப்படி மருத்துவர்களை நியமனம் செய்து ஏழையெளிய மக்களுக்கு சிகிச்சை அளித்து, தரமான மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் சத்துணவு ஊழியர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் ஆகியோர்களை அரசு ஊழியர்களாகப் பணிவரன்முறைப்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–03–2012) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

———

[2012 மார்ச் 28

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. தமிழ்நாட்டில் வீட்டு பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு (L.P.G) விற்பனை குறித்து தமிழ்நாட்டில் விநியோகம் செய்பவருக்கு விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 29–6–2011 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 29–6–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்–II, பிரிவு 1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 11(1)/வ.வ.ப./12(m)/2011 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 30–6–2011 ஆம் நாளிட்ட 70 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 30–5–1962 ஆம் நாளிட்ட புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழின் பாகம்–II, பக்கங்கள் 282–283 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட SRO 2437/1962 ஆம் எண்ணுள்ள வருவாய்த் துறை அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 5–9–2011 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. திரவ பெட்ரோலிய வாயுவை தானியங்கி வண்டிகளுக்கான எரிபொருளாக மாற்றித்தரும் உபகரணங்களின் விற்பனை வரி விகிதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 26–9–2011 ஆம் நாளிட்ட 120 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2012 மார்ச் 28]

5. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்களில்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(6)த் துறையின் 26–8–2011 ஆம் நாளிட்ட 44 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பி.ஆர்–1) துறையின் 23–9–2011 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

8. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2012–2013 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்.)

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

3. 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

4. 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–1.

5. 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–2.

*6. 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*7. 2012–2013 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்–வரவு–செலவுத் திட்ட இணைப்பு) (2012–2013 ஆம் ஆண்டு விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.)*

*8. 2012–2013 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–2 திட்டங்கள்.)*

*9. 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.*

*10. 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட விளக்க நூல்.*

*11. 2012–2013 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.*

*12. 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்த நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

*13. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை. (2011–2012)*

---